காரல் மார்க்சு காப்பியம்

பாவலர் மணி ஆ. பழநி

காரல் மார்க்சு காப்பியம்

காரல் மார்க்சு காப்பியம்

பாவலர் மணி

புலவர். ஆ. பழநி

தமிழினி

காரல் மார்க்சு காப்பியம் - ஆ. பழநி
Karl Marx Kappiyam - A. Pazhani
தமிழினி, 67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14
முதல் பதிப்பு: டிசம்பர், 2005
ISBN : 81 - 87641 - 64- 9
அச்சாக்கம்: மணி ஆப்செட்
விலை: ரூ. 60

படைப்பு

எவ்வுறவு நாமுடையோம்?
இனித்ததமிழ் உறவல்லால்;
யாவர் மாட்டும்
ஒவ்வுறவின் புலப்பாடாய்
ஒப்புரவின் குறியீடாய்
உயர்ந்து நின்றாய்;
கவ்வுவது போலிருக்கும்
கனிந்தவிழிப் பார்வையினால்
கலந்த நெஞ்சே!
செவ்வையுறு வாழ்க்கையினாய்!
சேர்ந்தாரை மேலுயர்த்தும்
சீத்தா ராம!
'அனிச்ச அடி'த் தாக்கத்தால்
அடியேனைத் தம்நெஞ்சில்
அமர்த்தி வைத்தும்;
'இனிச்சுவடி இதுபோலே
இவனுளதோ' எனப்புகழில்
ஏற்று வித்தும்;
கனிச்சுவைசேர் சொல்லிசைத்தும்
கைவழியப் பொன்னளித்தும்
கவர்ந்தாய்! நிற்குப்
பனிப்புயலன் காரல்எனும்
பகலவனின் காப்பியத்தைப்
படைக்கின் றேனால்.

புலவர் ஆ. பழநி 7.11.31ல் காரைக்குடியில் வேளாண்மைக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். தந்தை ஆண்டியப்பன், தாய் உமையாள். ஐந்தாம் வகுப்போடு நிற்க வேண்டியதாயிற்று. வட்டிக்கடை, துணிக்கடை, பெட்ரோல் பங்க், பலசரக்குக் கடை என பல இடங்களில் ஏழாண்டுகள் வேலை செய்துவிட்டு விவசாயம் பார்க்கத் திரும்பினார். அங்கே எட்டாண்டுகள். 1950 முதல் திராவிட இயக்கத்தில் பற்றுக் கொண்டு செயல்பட்டார்.

தமிழ் மீது கொண்ட ஈடுபாட்டால் மீண்டும் கல்விச் சாலைகளில் கற்றார். கடுமையாக உடல்நலம் பாதிக்கப்பட்டு வேலூர் மருத்துவ மனையில் நாட்கள் கழிந்தன. 1962ல் புலவர் பட்டம் பெற்றார். 64இல் இருந்து பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். இவரது 'அனிச்ச அடி' 'அன்னிமகள்' 'சாலி மைந்தன்' ஆகிய காப்பியங்கள் பல்வேறு பரிசுகள் பெற்றுள்ளன. 1991ல் தமிழக அரசு 'பாவேந்தர் விருது' வழங்கிச் சிறப்பித்தது.

ஆசிரியரின் பிற நூல்கள்:

அனிச்ச அடி - காப்பியம்
அன்னி மகள் - காப்பியம்
சாலி மைந்தன் - காப்பியம்
களம் கண்ட கவிதைகள்
பண்டிதமணியின் நாடகத் தமிழ்
பாரதிதாசன் பாரதிக்கு தாசனா? - ஒப்பாய்வு
கானல் வரியா? கண்ணீர் வரியா? - திறன்நூல்
இளங்கோவடிகளின் காப்பியக் கலைத்திறன் - திறன்நூல்
கோவலன் வீழ்ச்சியும் இளங்கோ மாட்சியும் - திறன்நூல்
சிலம்பில் சில மறைப்புகள் - திறன்நூல்

உள்ளே

1. பாயிரம் பாடுகின்றேன் 19
2. விளையும் பயிர்; முளையில் தெரிகிறது 23
3. அறிவுத் தேனீ 30
4. புதிய வானம்; புதிய பூமி 35
5. இருமனம் ஒன்றிய திருமணம் 39
6. செர்மன் பிரெஞ்சு மலர் 43
7. 'முன்னேற்றம்' தந்த பின்னேற்றம் 47
8. பெல்சியத்தின் தலைநகரில் 51
9. பொதுவுடைமைச் சங்கம் 57
10. பொதுவுடைமைக் கட்சி அறிக்கை 60
11. புரட்சி அலையில் ஐரோப்பா 66
12. மகிழ்ச்சியில் துள்ளிய பாரிசு 70

13. பாரிசு வீழ்ந்தது 76
14. இலண்டனில் மார்க்சு 81
15. வறுமைப் போராட்டம் 87
16. சோகோப் பேட்டையில் ஒரு சோகம் 91
17. துன்பங்கள் தொடர்கின்றன 95
18. சென்னி 100
19. பிரடெரிக் எங்கல்சு 105
20. அனைத்துலகத் தொழிலாளர் கூட்டமைப்பு (அகிலம்) 111
21. மார்க்சும் தார்வினும் 115
22. மூலதனம் 120
23. விளக்கு அணைகின்றது 129
24. நோயின் பிடியில் மார்க்சு 134
25. மார்க்சு மறைவு 140

அணிந்துரை

இராசேந்திர சோழன்

எழுபதுகளின் தொடக்க ஆண்டுகளில் தமிழ்க் கவிதையுலகில் புதுக்கவிதை பரவலாக அறிமுகம் பெற்றபோது, கவிதை சார்ந்து இருவேறு கருத்தோட்டங்கள் எழுந்தன. கவிதை என்றாலே அது யாப்பிலக்கண மரபுக்குட்பட்டதாகத்தானே இருக்கமுடியும், அல்லாமல் அதை மீறி எழுதுவதெல்லாம் எப்படிக் கவிதையாக முடியும் என்று ஒரு போக்கும்; கவிதைக்கு மரபு வழிப்பட்ட இலக்கணம் என்பதே ஒரு சிறை, நவீன சிந்தனை அந்த சிறைக்குள்ளே முடங்கித் தன்னைத் தளைப்படுத்திக் கொள்ளமுடியாது, எனவே அதை மீறித்தான் பிறக்கும் நவீன கவிதை என்கிற ஒரு போக்கும் ஒன்றையொன்று சர்ச்சைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன.

இச்சூழலில், இவ்விரண்டோடும் முகாம் சாராது, கவிதை என்பதே சமூக மாற்றத்துக்கான போராயுதம்தான்; அது மரபு வழிப் பட்டிருந்தால் என்ன நவீன வயப்படடிருந்தால் என்ன, அது வாழ்க்கை பற்றிய தேடல் கொண்டதாய், சமூகப் பயன்பாட்டிற் குரியதாய் இருந்தால் எவ்வகைப்பட்டதாயிருப்பினும் ஏற்கத்தக்கதே என கவிதையின் உள்ளடகத்தை மட்டுமே வைத்து அதை மதிப்பிடும் போக்கும் உடன் நிலவியது.

இந்த முப்பத்தைந்து ஆண்டுகளில், இச்சர்ச்சைகளெல்லாம் ஓய்ந்து இன்று புதுக்கவிதை என்பதே கவிதை என்பதாகி சீரிய இலக்கிய இதழ்கள் பலவற்றுள்ளும் அவையே பெரிதும் இடம் பெறும் நிலையில், மரபுக்கவிதை என்பது பெருமளவும் வழக் கொழிந்த, அல்லது தமிழ் நலம் பேண விழையும் பற்றாளர்களால் நடத்தப்பெறும் இதழ்களில் மட்டுமே அவற்றைக் காணமுடியும் என்கிற சூழலில் முற்றிலும் மரபு வழிப்பட்ட, யாப்பிலக்கண வரம்புக்குட்பட்ட பாக்களால் படைக்கப்பட்டுள்ளது இக்காப்பியம்.

உரைநடை அல்லாத இலக்கியமரபு தமிழில் செய்யுள் கவிதை, பாடல், வசனகவிதை என்னும் பல்வேறு பெயர்களில் அழைக்கப் பெறுகிறது. இப்பெயர்கள் ஒவ்வொன்றும் அவற்றுக்கேயுரிய தனித் தன்மைகளையும் ஒன்றிற்கொன்று சற்றே மெல்லிய வேறுபாடு களையும் கொண்டு நிலவுவது தெளிவு.

தமிழில் அகப்பாடல், புறப்பாடல் வழியே பண்டைத் தமிழரின் நிகழ்வுகள் காட்சிகளாகச் சித்தரிக்கப்பட்டு வந்ததன் பரிணாமம் காலப் போக்கில் காப்பியங்களாக உருப்பெற்றது. ஐம்பெரும் காப்பியங் களாக அறியப்படுபவை அனைத்தும் இவ்வகைக் கதைகூறும் தொடர் நிலைச் செய்யுள்களால் ஆக்கப்பட்டதே.

இம்மரபை அடியொற்றியே 'காரல் மார்க்சு காப்பியம்' என்னும் இந்நூலை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

உலகில் அதியுன்னத மனிதர்கள் எனப் பட்டியிலிடப் பலர் இருந்தாலும், அவர்களது சிந்தனைகளினால் ஈர்க்கப்படுபவர்கள் அதிலே நம்பிக்கை கொண்டவர்கள் வழிப்பட்டே அம்மனிதர்கள் நினைவு கூரப்படுகிறார்கள், போற்றப்படுகிறார்கள். அம்மனிதர்கள் பற்றிய நூல்களும் உருவாக்கப்படுகின்றன.

நூலாசிரியர் பாவலர் மணி, புலவர் ஆ. பழநி பெரியாரிய, இடது சாரி சிந்தனைகளின் தாக்கம் பெற்றவராதலின் அவர் 'காரல் மார்க்சு' வாழ்வை நினைவுகூரும் வகையில் மார்க்சினது வாழ்வை காப்பிய மாக்கியிருக்கிறார்.

மார்க்ஸ் என்கிற மாமனிதரின் வாழ்வை, அவரது அரும் பணிகளைச் சித்தரிக்கும் நூல்கள் பல பல்வேறு மொழிகளில் பல் லாயிரம் பக்கங்களாக வெளிவந்துள்ளன. அவ்வாழ்வை 450 பாடல் களுக்குள் அடக்குவது மிகக்கடினமானதொரு பணிதான் என்றாலும் அவரது வாழ்வின் மையத் தடங்களை அவரை மாமனிதராக்கிய நிகழ்வுகளை மட்டுமே முதன்மைப்படுத்தி இக்காப்பியத்தை வடித்துள்ளார்.

மார்க்சின் இளமை, படிப்பு, வளர்ப்பு, தந்தையின் எதிர்பார்ப்பு, மார்க்சின் அறிவுத் தேடல், ஆய்வு மனம், இல்வாழ்க்கை, வறுமை, அரசதிகாரம் இழைத்த இன்னல்கள், பொதுவுடைமைச் சங்கம், தொழிலாளர் அகிலம், பாரிஸ் கொம்யூன், மூலதனம் நூல் உருவாக்கம் என மார்க்ஸ் வாழ்வின் தேர்வு செய்த நிகழ்வுகளை மரபு வழிப்பட்ட ஆசிரியப் பாக்களாலும் விருத்தப் பாக்களாலும் அறிவியல் நோக்கோடு வெளிப்படுத்துகிறார் பாவலர் மணி.

உலகின் உன்னத மனிதர்கள் அவதரிக்கும்போது இயற்கை அசாதாரண நிகழ்வுகளைத் தோற்றுவிப்பதாகச் சித்தரிக்கப்படுவதும் நம்பப்படுவதும் உண்டு. ஆனால் மார்க்ஸ் பிறந்தபோது அப்படி

ஏதும் நிகழவில்லை என்பதை ஆசிரியர் இப்படிக் கூறுகிறார்.

வான்வரு தேவர் வந்து
வாழ்த்துப்பா பாட வில்லை;
மீன்கணம் இறங்கி வந்து
மெல்லிசை இசைக்க வில்லை;
தேன்மாரி பெய்ய வில்லை;
அசரீரி செப்ப வில்லை;
கோன்மையர் ஆட்ட பாட்டம்
குலைத்தவன் பிறந்த போது.

மார்க்சியம் என்பதை எங்கல்சிலிருந்து பிரித்து அறிய முடியாது. அந்த அளவு மார்க்சின் உற்ற நண்பராக அவரது பணிகளில் அளப்பறிய பங்காற்றியவர் எங்கல்ஸ். எங்கல்ஸ் பற்றி ஆசிரியர் குறிப்பிடுவது:

வாழ்ந்திடும் போதும் கூடவே வாழ்ந்தான்;
வஞ்சகர் சூழ்ச்சியால் சாய்ந்து
தாழ்ந்திடும் போதும் கூடவே தாழ்ந்தான்;
தணலெனும் வறுமையுள் இடறி
வீழ்ந்திடும்போதும் கூடவே வீழ்ந்தான்;
வீறுடன் சாவெனும் ஓர்வாள்
போழ்ந்திடும் போதும் அவன்பணி முடித்தே
பொன்றினான் போன்றுளார் யாரே!

இவ்வாறே மார்க்சின் இன்பதுன்பங்களில் இரண்டறக் கலந்து அனைத்து நிலைகளிலும் அவருக்கு உறுதுணையாயிருந்த ஜென்னி யையும் ஆசிரியர் பெருமைப்படுத்துகிறார்.

காரலால் பெற்ற இன்பம்
கடுகெனின் அவனால் பெற்ற
ஆரள வாய துன்பம்
அலைகடல் என்பர்; ஆனால்
நேருற வந்த துன்ப
நெருப்பையும் பனியாக் கொண்டாள்;
சீருறும் காரல் தந்த
சிறப்பினைப் பெற்ற தாலே.

இப்படி மார்க்சின் வாழ்வோடு இரண்டறக் கலந்து அவரது அயராத உழைப்புக்குத் துணை நின்ற, நண்பர், துணைவியரோடு மார்க்ஸ் அடைந்த துன்பம், நாடுவிட்டு நாடு போக நேர்தல், மழலை இன்பம், ஏழ்மையின் கொடுந்துயர் என அவரது வாழ்வின் பன்முகப் பட்ட பரிமாணங்களை ஆசிரியர் கவித்துவத்தோடு வரைந்து செல்கிறார்.

மாபெரும், மகத்தான இவ்வாழ்க்கைக் கதையை

யாப்பிலக்கண வகைப்பட்ட சிமிழுக்குள் அடக்கும் போது அந்த லயம் சார்ந்து சொற்கள் உடைபட்டு ஒலிக்க நேர்வது சற்று நெருடலா யிருந்தாலும் இந்த வடிவத்திற்குள் இதை இப்படித்தான் செய்ய முடியுமேயல்லாது வேறு விதமாக முடியாது எனக் கருதி மனத்தை ஆறுதல் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

என்றாலும், நவீன சிந்தனையாளர்களால் அறியப்பட்ட அளவு, பேசப்பட்ட அளவு, மரபு வழிப்பட்ட புலமையாளர்களால் மார்க்ஸ் அதிகம் அறியப்படாத, பேசப்படாத நிலையில் இக்காப்பியம் அவர்களிடமும் இதைக் கொண்டுசெல்லும் வகையில் பெரும் பங்காற்றும் என்று படுகிறது.

நூலில் தற்காலம் வழக்கொழிந்து போன உன்னதமும் செறிவும் மிக்க பல கலைச் சொற்கள் நெடுகிலும் கையாளப்பட்டுள்ளன. முற்றிலும் அறிமுகமற்றவை எனக் கருதப்படும் அச்சொற்களுக்கு அந்தந்தப் பக்கங்களின் அடியிலேயே பொருட்குறிப்பும் தரப் பட்டுள்ளது.

இப்படிப் பன்முகப்பட்ட வகையில் தமிழின் மொழி வளத் திற்கு ஊட்டம் தரும் நோக்கிலும், காரர் மார்க்ஸ் என்கிற மாமனிதரின் வாழ்வை, அரும்பணியை, சாதனைகளைத் தமிழறிஞர்களிடமும் கொண்டுசெல்லும் நோக்கிலும் இந்நூல் மிகுந்த பயனளிப்பதாக அமையும் என்று தோன்றுகிறது.

அரிய மனிதர்களின் வாழ்வை அனைவரும் அறியச் செய்யும் வண்ணம் இப்படி குறுங்காப்பியங்களாக வடித்துத் தரும் முயற்சி மனமுவந்து வரவேற்கத் தக்கது.

பெருமுயற்சியெடுத்து கடும் உழைப்பினூடே மாமனிதர் மார்க்ஸ் காப்பியம் படைக்கும் இச்சீரிய பணியை செவ்வனே நிறைவேற்றி முடித்த நூலாசிரியருக்கு நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்.

மயிலம்
17.12.05

நல்லுரை

மகுடேசுவரன்

கவிதை எழுதுவதும் காப்பியம் எழுதுவதும் ஒன்றன்று. மின்னல் தெறிப்பான அபூர்வ கணம் ஒன்றைப் பிடித்து நிறுத்த வல்ல வித்தை தெரிந்தால்கூட ஒரு கவிஞனாக முன்னகர்ந்து விடலாம். சாதாரண சம்பவம் ஒன்றின் அசாதாரணத்தை இழைத்து விளம்பு வதன் மூலம்கூட கவிதை கண்டுவிடலாம். கருதாத பொருளைப் பற்றிய கற்பனை வளம் சமயத்தில் அதற்குப் போதுமானதாகி விடலாம். ஆனால், காப்பியம் யாத்தல் இத்தகு திறன்களை ஒரு படிவரை மட்டுமே அனுமதிக்கக் கூடியது; அதனினும் வெவ் வேறான நுட்பமும் சிடுக்குமான பற்பல கூறுகளை வேண்டி நிற்பது.

ஐம்பெருங்காப்பியங்கள் முதலாக, காப்பியத் தமிழுக்குத் தொன்மையான மரபு உண்டு. தமிழின் பெரும் செல்வங்களைக் கண்ணுற வேண்டுமானால் செய்யுள்களை நாட வேண்டி இருக்கிற நிலைமை இன்றும்கூட பெரிதாக மாறிவிடவில்லை. நீர்மையடைந்த உரை எழுத்துகளில் மொழியின் ஆழத்தில் படிந்திருக்கும் பளிங்குத் தளங்களைக் காண முடிவதில்லை; காணற்கரிய சொற்களை அவற்றின் பொருள்கள் வலிமையோடு தெறித்துச் சிதறும் இடத் திலேயே கண்டு அறிமுகம் கொள்ள இயல்வதில்லை.

புலவரும் கவிஞரும் வேறு வேறானவர் என்ற மயக்கம் நெடுங் காலம் நிலவி வருகிறது. புலமைப் பெருவீதியில்தான் கவித்தேர் நகர முடியும். புலமைக்காட்டில் உணர்ச்சிக்கங்கு விழுந்ததும் பற்றி யெரியும் பெருந்தழலைத்தான் கவித்துவம் என்கிறோம். புலமைக் கூந்தலை முடிந்துதான் கவிதைக்கொண்டை போடமுடியும். கூந்த லில்லாமல் அள்ளி முடிந்தால் கோரமாகத்தான் இருக்கும். வேண்டு மானால் கொஞ்சநாள்களுக்கு மாடர்ன் மொட்டை போட்டுக்கொண்டு திரியலாம்.

காப்பியத் தலைவனாகும் தகைமை யாருக்கும் எவருக்கும் எளிதில் அமைந்துவிடாது. ஒரு கற்பனைக் கதையில் வகிக்கக்கூடிய பாத்திரத்திற்கு அவ்வாறு நயத்தகு பேரியல்புகளைப் புனைந்து காட்டிவிடலாம். வரலாற்று நாயகருள் அத்தகைமை வாய்த்த தன்மை யாளரை ஆய்ந்து காணவேண்டும். அத்தலைவனோடு காதலாகிக் கசிந்துருகி உணர்வு மயமாய் ஒன்றவேண்டும். அவனது வரலாற்றைப் பழுதறக் கற்றுக் காப்பியச் சுவை நல்கும் சம்பவங்களை ஊன்றி நோக்க வேண்டும். அவன் வாழ்ந்த காலத்து வரலாற்றை நிரல்படத் தொகுத்தும் அவன் வழங்கிய தத்துவஞானத்தைக் கசடறக் கற்றும் தன்னைத் தயார் செய்துகொள்ள வேண்டும். நிலக்காட்சிகள் திணைப்பொருள்கள் என்று ஏராளமான உழைப்பை அதற்குச் செலவிடவேண்டும்.

கடந்த நூற்றாண்டுகளின் மனித சிந்தனையாளர்களுள் காப்பியத் தலைவனாகும் தகுநிலை காரல் மார்க்சுக்கே உண்டு என்பதை சுக தரப்பாளர் மட்டுமல்லர், எதிர்த்தரப்பாளரும் மனமுவந்து ஏற்பர். காப்பியம் காப்பியத் தலைவனாலேயே பெருமை பெறும்; காப்பிய கர்த்தா தான் முன்னிறுத்தும் காப்பியத் தலைவனாலும் சிறப்பு பெறுவார் என்பதற்குக் 'காரல் மார்க்சு காப்பியம்' நல்ல எடுத்துக்காட்டு.

புலவர் ஆ. பழநி முந்தைய தசம ஆண்டுகளில் கொடி யோச்சிய புலவர் பெருமக்களுள் யாரொருவருக்கும் குறைவில்லாத தமிழாற்றல் உடையவர். எந்தவோர் அருஞ்சொல்லின் பொருளுக்கும் அகராதியைத் தேடா மொழிப்புலமை அவருடையது. ஆசிரியப்பாக்கள், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள், எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் என யாப்புத் தமிழ் தரும் இன்பத்தை நம்முள் மீட்டெடுக்கிறார்.

உண்மை வரலாறான, கற்பனைப் பொய் கலக்க வாய்ப் பில்லாத, அறிந்திராத மேற்கத்திய நிலத்தில் நிகழ்கிற சம்பவங் களுடைய, தாவரங்கள் - பூவினங்கள் எனக் கொஞ்சமும் இளைப் பாறியபடி எழுதிக்கொள்ள இடமில்லாத, அடர்செறிவான சித்தாந் தத்தைத் தொட்டுச் சொல்லவேண்டிய சவாலான களத்தில் நின்று வென்றிருக்கிறார்.

திருப்பூர்
15.11.2005

முன்னுரை

'**வே**றுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதம்மா' என்றான் கம்பன். வேறுள குழு எவை என்று கம்பன் குறிப்பது சிவபெரு மானையும், பிரமனையும் தலைமையாகக் கொண்டு இயங்கும் குழுக்களை. இக்குழுக்களை எல்லாம் திருமால் மனித உருத்தாங்கி வந்தமையால் 'மானுடம் வென்றது' என்றான் கம்பன்.

சிவன் தலைமையில் ஒரு குழுவும், பிரமன் தலைமையில் மற்றொரு குழுவும் இன்றளவும் இயங்கிக் கொண்டுதான் உள்ளன என்று கூறுவதற்குச் சற்றுக் கூச்சமாகத்தான் உள்ளது. அன்றைக்கு அது சரி என்று நம்பியிருக்கலாம். இன்றைக்கும் அப்படியே நம்பப்படவேண்டும் என்பது சரியில்லையே.

காலங்கள் மாறுகின்றபொழுது சூழல்கள் மாறுகின்றன. சூழல்கள் மாறுகின்றபொழுது சொற்களின் பொருள்கள் மாறுகின்றன.

நாற்றம் என்றால் பழங்காலத்தில் இனிய மணம் என்றுதான் பொருள். இன்று மோசமான பொருளில் அல்லவா மாறிவிட்டது! இந்தக் காலத்தில் என்ன பொருள்படுகிறதோ அதையும் நாம் ஏற்றுக் கொள்ளத் தானே வேண்டும்.

காலமாற்றத்தினால் ஏற்பட்ட கருத்து மாற்றத்தைப் பழங்காலக் கவிதைகள் வெளிப்படுத்தும் என்றால் அதைத் தழுவிக் கொள்வதுதான் அறிவுடைமை என்பார் திரு.வி.க.

ஆகவே தான் 'வேறுள குழு' என்பதற்கும் நாம் பொருள் கொண்டாக வேண்டும். அதிகார வர்க்கக் குழு, மதவாதக் குழு, முதலா ளியக் குழு என்று வேறு வேறாக உள்ள குழுக்களை எல்லாம் மானுடம் (மானுடப் பற்றாளர்கள்) வென்று உயர வேண்டும் என்ற விழைவைத் தான் கம்பன் இவ்வாறு கூறுகின்றானோ என்று நாம் காலத்திற்கு ஏற்ப விரிவுரை செய்து கொள்ள வேண்டும்.

மானுடத்திற்கு (மானுட நேயத்திற்கு) எதிரான குழுக்கள் வெற்றி

கொள்ளப்படவேண்டும் என்பதில் கம்பனுக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லையே!

மானுடத்தினுள் இரண்டு முகங்களை நாம் சந்திக்கின்றோம். அன்பைச் சுரக்கின்ற முகத்தையும் பார்க்கின்றோம்; அடிமைசெய்ய முனையும் ஆணவ முகங்களையும் பார்க்கின்றோம். இந்த உலகம் புத்தனின் முகத்தையும் பார்த்திருக்கின்றது; இட்லரின் முகத்தையும் பார்த் திருக்கின்றது. புத்தனின் முகந்தான் உலகத்தாரால் போற்றப்பட்டதே தவிர இட்லரின் முகம் அன்று. அதுதான் ஒழிக்கப்படவேண்டிய முகம் என்று தூற்றவும் பட்டது.

ஐரோப்பாவில் பிரபுக்கள் குடும்பத்துப் பிள்ளைகளைப் பகைவர்கள் கடத்திச் சென்று அவர்தம் முகத்தை அறுவை மருத்துவத்தால் சிதைத்துக் கோரமாகவும், நகையை வரவழைக்கும் விதத்திலும் உரு மாற்றம்செய்யவல்ல அரதிகானன் (Hardiconan) போன்ற அறுவை மருத்து வர்கள் அக்காலத்தில் வாழ்ந்ததை வித்தர் யூகோ (Victor Hugo) என்ற எழுத் தாளர் எடுத்துக் காட்டுகின்றார்.

இன்றைக்கு அறுவை மருத்துவத் துறையில் மிகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உதடுகிழிந்தும் மூக்கு வளைந்தும், பற்கள் துருத்தியும் கோரமாக உள்ள முகங்களை எல்லாம் முகச் சீரமைப்பு மருத்துவம் அழகிய முகங்களாக ஆக்கித் தருகின்றது.

மானுடத்தின் முகம்கூட இன்று கிழிந்தும், வளைந்தும், பிதுங்கியும் போயுள்ளதை இன்றைக்கும் நாம் உணர்ந்து கொண்டுதான் உள்ளோம். இதைப் போக்க ஒரு முகச் சீரமைப்பு மருத்துவம் தேவை என்பதையும் நாம் அறிந்தே இருக்கின்றோம்.

இங்கிலாந்து நாட்டின் பாதாள ரயிலில் நடத்தப்பட்ட தாக்குதலும், அமெரிக்க இரட்டைக் கோபுரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் எதைக் காட்டுகின்றது? தனிமனிதக் குழுக்கள் மிருகங்களாக மாறிவிட்ட கொடுமையை அல்லவா?

இராக்கின் மீது ஏவப்பட்ட அமெரிக்க, பிரித்தானிய குண்டுகளால் மாண்டுபோன இராக்கியர்களின் பிணங்கள் என்ன கூறுகின்றன? வளர்ந்த நாடுகளே மிருகங்களாக மாறிவிட்ட கோரத்தையல்லவா?

முதலாளியத்தால் அருவருப்பாகச் சிதைக்கப்பட்ட மானுடத்தின் முகத்தைச் சீரமைக்க வேண்டிய ஒரு நெருக்கடியான காலகட்டத்தில்தான் காரல் மார்க்சு பிறந்தான். மானுடத்தின் முகத்தைத் திருத்தி அமைக்க அவன் 'மூலதனம்' என்ற நூலை வழங்கினான்.

இயற்கை தன் சம நிலையைப் பேணிக் கொள்ளும் என்பார்கள். ஆனால், தன்னல மிக்க மனிதனோ சமநிலைச் சிதைப்பையே குறியாகக் கொண்டு வாழத் தொடங்கினான். சமநிலை சிதையச் சிதைய மேடு

பள்ளங்கள் மிகுதியாகிவிட்டன. மேட்டின் உச்சியில் முதலாளித்துவம்; பள்ளத்தின் அடியில் உழைக்கும் மக்கள். மானுடத்தின் சமன்மை சிதைந்துபோய்விட்டது. இந்தச் சமன்மைச் சிதைவைத் தடுக்க மார்க்சு அப்படி என்னதான் மூலதனத்தில் கூறினான்?

ஒரே வரியில் கூறுவது என்றால் 'மீண்டும் இயற்கையை நோக்கி' என்பது தான் மூலதனத்தின் அடிப்படைக் கருத்து. 'இறுதியில் அரசும் உதிர்ந்து விடும்' என்ற மார்க்சின் கூற்றில் வெளிப்படுவது என்ன? அரசுகளே அமையாத ஆதிப் பொதுவுடைமைச் சமுகம் தானே! இதனால்தான் மீண்டும் இயற்கையை நோக்கி என்று கூறினேன்.

உலகின் துயரங்களை மாற்றி அமைப்பதற்காக அவன் மேற் கொண்ட முயற்சியில் அவன்பட்ட துயரங்கள் எழுத்தில் அடங்கா; ஏட்டில் முடியா. எந்த நாடும் அவனுக்குச் சொந்த நாடு இல்லை என்று சொல்லும்படியாக அவன் துரத்தியடிக்கப்பட்டான். வறுமையை மனித சமுகத்திலிருந்து எப்படி அகற்றுவது என்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே வறுமையில் விழுங்கிச் செரிக்கப்பட்டான்.

அவன் நினைத்திருந்தால் - கொஞ்சம் தன்னை விட்டுக் கொடுத் திருந்தால் சுகமாக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் உலகம் சுகப்பட வேண்டுமே என்பதற்காகத் துன்பங்களை எல்லாம் தன் தோளிலே ஏற்றி வைத்துக்கொண்டு சுமந்து திரிந்தான். மானுடச் செழுமைக் கனவிலேயே தன் நனவு வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டான். இதனால் அவன் மனிதகுலத்தின் தலைமகன் மட்டுமில்லை; தலையாய மகனும்கூட.

இவனுடைய வாழ்க்கையைக் காப்பியமாகப்பாட வேண்டும் என்ற விதையை என் நெஞ்சில் தூவித் தண்ணீர் விட்டவர் பேராசிரியர் க. திருமாறன் அவர்கள்.

இக்காப்பியம் இயற்றத் தேவையான நூல்களைக் கொடுத்தும், கிடைக்காத நூல்களுக்கு ஒளிநகல் எடுத்துத் தந்தும் பேருதவி புரிந்தவர்கள் என் அன்புக்குரிய மகள் அரக்கோணம் முனைவர் பா. தமிழ்ச்செல்வி அவர்களும் அவர்தம் இனிய தங்கையும் ஆவர்.

காப்பியம் இயற்றி முடிந்த பின்னர் அதனை முழுமையாகப் படித்து தரச்சான்றிதழ் வழங்கியவர் ஐம்பதாண்டுக்கால மார்க்சீய வாழ்க்கையரும் 'பண்டைத் தமிழ்ச் சமுதாய வளர்ச்சி' என்ற அருமையான நூலின் ஆசிரியருமாகிய திரு. கள்ளூர் கு.மா.பாலசுப்பிர மணியன் அவர்கள்.

தேவைப்படும் நூல்களைத் தந்ததோடு மார்க்சு பற்றி உரையாடி ஊக்கம் அளித்து உதவியவர் காரைக்குடி ஓமியோபதி மருத்துவர் திரு. பாலா அவர்கள்.

இந்நூல் உருப்பெறும் காலத்தில் உடனிருந்து எய்ப்புக்களைந்து இன்னுரை கூறியும் மெய்ப்புத் திருத்தியும் உதவியவர் என் இனிய நண்பர்

சொ. சண்முகம் அவர்கள். இவர்கட்கெல்லாம் என் அன்பார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன்.

இது தமிழினி பதிப்பகத்தின் வெளியீடாக வருகின்றது. ஆடினி, பாடினி என்பது போலத் தமிழினி என்பது பெண்பாற்பெயராக வைக்கப் பட்டிருக்கலாம். ஆனால், எனக்கென்னவோ தமிழ் இனி...? என்ற வினாவிற்கு விடைசொல்ல எழுந்த பதிப்பகம் இது என்ற கருத்தை வெளிப்படுத்த வைத்த பெயராகவே தோன்றுகின்றது. ஏனெனில், இப் பதிப்பகம் வெளியிட்டுள்ள நூல்களின் பட்டியலைப் பார்த்தால் இந்த முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கும். புதிய துறை சார்ந்த நூல்களால் தமிழ் இனி வளப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துடைய தமிழினி பதிப்பகத்தார்க்கு என் நன்றி என்றும் உரியது.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

என்பார் வள்ளுவர். திருவேறாகவும் தெளிவு வேறாகவும் இருப்பது உலகில் பெரும்பான்மை என்றாலும் இரண்டையும் ஒத்திசைவாகப் பெற்ற அரியவர்களும் இவ்வுலகில் உள்ளனர் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் மதுரை, திரு. சங்கர சீத்தாராமன் அவர்கள். அறிவையும் பொருளையும் தானும் நுகர்ந்து பிறரையும் நுகர்விப்பவர். சுருக்கமாகச் சொன்னால் தான் பெற்ற இன்பம் அனைத்தையும் இவ்வைய கமும் பெற வேண்டும் என்று செயற்படும் ஒப்புரவாளர்.

அடுக்காக மாளிகைகளை மட்டும் எழுப்பியவர் அல்லர்; அடுக்கிய புகழால் அமைந்த மாளிகைகளையும் உடன் எழுப்பியவர்.

மார்க்சு தன்னுடைய 'மூலதனம்' இரண்டாம் பாகத்தை சார்லசு தார்வினுக்குப் படைக்க விரும்பி அவரிடம் ஒப்புதல் கேட்டான். ஆனால், தார்வினோ சில காரணங்களுக்காக ஒப்புதல் தர மறுத்துவிட்டார். அவ்வாறு மறுக்கப்பட்ட மார்க்சின் பேரால் அமைந்த காப்பியத்தைப் படைக்க மறுப்பேதும் இன்றி ஒப்புக்கொண்ட திரு. சங்கர சீத்தாராமன் அவர்கட்கும் என்றும் நன்றியுடையேன்.

அன்பன்
ஆ. பழநி

1. பாயிரம் பாடுகின்றேன்

திருமணி அனைய தாக
  உலகிடைத் திகழ்ந்து தோன்றும்
செருமணி நாட்டில் தோன்றி
  உழைப்பினால் தேய்ந்தார் கண்ணின்
கருமணி போல வாழ்ந்து
  வறுமையின் எல்லை கண்ட
பெருமணி தப்பண் பாளன்
  வரலாறு பேச லுற்றேன். 1

யூதர்கள் குலத்தில் வந்தான்
  ஆயினும் உலக வாழ்வில்
தாதர்கள் பலரா செல்வத்
  தலைமையர் சிலராக் காணும்
தீதற வேண்டும் என்னும்
  தீராத வேட்கை யாலிம்
மூதறி வாளன் 'மூல
  தனம்' எனும் முத்தெ டுத்தான். 2

குளத்துறை அட்டை யாகிக்
  குருதியை உறிஞ்சு வோர், மேல்
தளத்துறை மாந்தர் என்றால்
  தாங்கவோ இந்த வையம்;
உளத்தெழும் இந்தக் கேள்வி
  உறுத்தலால் அதிர்ந்தோன் துன்பப்
பளத்துறை மாந்தர் உய்யப்
  பயணத்தைத் தொடங்கி வைத்தான் 3

தத்துவ வறுமை தீர்த்தான்;
  வரலாற்றின் தாகம் தீர்த்தான்;
மெய்த்தவம் இன்ன தென்று
  வாழ்க்கையால் மெய்ப்பித் தான்மேல்
வித்தகம் என்ப தெல்லாம்
  விரல்நுனி முனையில் வைத்தான்;
புத்தகக் கிடங்கு போல்வான்;
  போதிமா தவனே யானான். 4

திருமணி - அழகிய மணி, தாதர்கள் - அடிமைகள், பளத்துறை மாந்தர் - பள்ளத்தில் கிடக்கின்ற மக்கள், வித்தகம் - திறமை

ஆற்றலை அறிவைத் திட்டம்
　　இடுதலை அவற்குச் செர்மன்
ஏற்றவா றளிக்க, பிரான்சோ
　　எதிரிலாப் புரட்சித் தீயின்
ஊற்றினைச் சுரக்கச் செய்ய,
　　பிரிட்டனோ ஒடுங்கல் இல்லா
மேற்றகை அறிஞன் ஆக்க
　　வரலாற்றில் மின்னு கின்றான். 5

அன்னியம் என்னும் ஒன்றை
　　அன்னிய மாக்கிக் கொண்டு
சென்னியும் மார்க்சும் வாழ்ந்த
　　இல்லறம் சிதைத்தற் கென்றே
மின்னிய மின்னல் என்ன?
　　மேல்வந்த இடிகள் என்ன?
எண்ணினால் கோடி தேறும்
　　இதுகூடக் குறைம திப்பே. 6

பணஞ்செயும் செயலை எல்லாம்
　　எஞ்சாது பகர்ந்தான்; ஆனால்
பணஞ்செயும் வழியை மட்டும்
　　பயின்றிலன். சிரித்து நின்று
மணஞ்செயும் மலர்போல் பெற்ற
　　மக்களைக் கொடுநோய் வந்து
பிணஞ்செய இழந்த காலை
　　எப்படிப் பேதுற் றானோ? 7

தத்துவப் போர்க்க ளத்தில்
　　வெற்றியே தந்தான். வாழ்வைக்
கொத்திடும் வறுமைப் போரில்
　　கொத்தாக மூன்று பிள்ளை
செத்தாரே! சென்னி வாழ்வை
　　நோய்நாளும் தின்னக் கண்டு
பித்தான போதும் கூடப்
　　பிறழாதான் வாழ்க்கை என்னே! 8

மேற்றகை - மேலான தகுதியுடைய

நாளையா? இல்லை; எம்மை
　　நலிவெனும் கொடுக்கால் கொட்டும்
தேளையா என்று நாளும்
　　திகைத்தவர்த் தேற்ற வானக்
கோளையா நம்பச் சொன்னான்;
　　கொடுமைகள் அறுக்கும் கொள்கை
வாளையா கொடுத்தான்; அந்த
　　வள்ளலைப் பாடு கின்றேன். 9

நடையினால், செஞ்சொல் பூண்ட
　　நலத்தினால், அணிகள் சேரும்
தொடையினால் பாட லுக்கோர்
　　எழில்வந்து தோன்றல் உண்டு;
தடையிலா அறிவின் ஊற்றாம்
　　தன்மையான் புரிந்த ஈகக்
கொடையினால் அன்றோ பாட்டிற்
　　குயிரினைக் கொடுக்கும் கண்டீர். 10

நீரள வளவே யாகும்
　　முளரியின் நீட்டம்; கல்விக்
கூரள வளவே யானேன்
　　கூறுமிக் காப்பி யத்துள்
பாரள வளவை விஞ்சும்
　　பருதிநேர் மார்க்சின் சாயல்
ஓரள வேனும் காணின்
　　அஃதென்றன் உவப்பாம் என்பேன். 11

கற்பனை எனக்கி டந்த
　　சமனியக் கருது கோளை
அற்புதம் மிக்க தான
　　அறிவியல் ஆக்கித் தந்தான்;
முற்படும் மானு டத்தின்
　　மூலத்தை அகழ்ந்து கண்டு
பொற்புறத் துலக்கி னானின்
　　புகழ் என்றும் துலங்கும் தானே! 12

தேளையா - தேள் + ஐயா, வானக்கோள் - கிரகங்கள், வாளையா - வாள் + ஐயா, ஈகக் கொடையினால் - தியாகக் கொடையினால், முளரி - தாமரை, கூரளவு - மிகுந்த அளவு, பருதி - சூரியன், சமனியம் - சோசலிசம், அகழ்ந்து - பிளந்து, பொற்புற - அழகுற.



2. விளையும் பயிர்; முளையில் தெரிகிறது.

செருமனி நாட்டின் மேலை
    எல்லையும் பிரான்சும் சேரப்
பொருந்துறும் நிலப்ப ரப்பில்
    புகழார்ந்த திரியர் என்னும்
ஒருநகர் உளதாம், அந்த
    ஊரில்தான் காரல் மார்க்சு
பிறந்தனன் பிறந்த தாலே
    பெருமையில் பிறங்கிற் றவ்வூர். *13*

இருநாட்டின் எல்லை ஒட்டி
    அந்நகர் இருந்த தாலே
செருவொன்று மூளு மானால்
    சிலபோது பிரான்சைச் சேரும்,
மறுமுறை எழுந்த போரில்
    செருமனி பக்கம் மாறும்;
ஒருநிலை இன்றி மாறித்
    திரிந்ததத் திரியர் ஊர்தான். *14*

எல்லையின் புறத்த மைந்த
    ஊராக இருந்த தாலே
பல்வித மான நாட்டுப்
    பண்பாடும் கலந்தி ருக்கும்,
வல்லர சாதிக் கத்தால்
    வருத்தியே துரத்தப் பட்டார்
எல்லாரும் வந்து கூட
    இளைப்பாற்றும் திரியர் என்பார். *15*

செருமனின் கலையும் பிரான்சின்
    சீர்நாக ரிகச்சி றப்பும்
ஒருமுக மாகக் கூடிப்
    புதியதோர் உருவம் கொண்டு
வருவதவ் வூர்தா னேனும்
    வழிவழி யாக வந்த
மருவுறு பழைமை வாத
    மரபுகள் மாறா ஊராம். *16*

மேலைஎல்லை-மேற்கு எல்லை, திரியர்-டிரியர், பிறங்கிற்று-விளங்கிற்று, செருவொன்று-போர் ஒன்று, திரிந்தது-நிலையின்றி அங்குமிங்குமாகத் திரிந்தது, மருவுறு - கலந்திருக்கும்.

மோசலி ஆறு பாயும்
முப்போகத் திரியர் மண்ணில்
காசிலார் உழைப்பை எல்லாம்
காசுளார் சுரண்ட லாலே
பேசரும் வறுமை பேதம்
பெரிதாக வளர்ந்தி ருக்கும்;
தூசுறை ஓவி யம்போல்
துலங்கொளி குன்ற வாழ்வார். 17

என்ரிகு மார்க்சென் பானும்
என்ரிட்டே என்னும் மாதும்
ஒன்றித்த இல்ல றத்தின்
உறுபய னாய்ப்பி றந்தான்;
நன்றிந்த உலகம் வாழ
நாளெலாம் உழைத்துத் தேய்ந்தோன்;
மன்பதைக் குயிரே போல்வான்
மார்க்செனும் தியாகச் செம்மல் 18

நள்ளிராப் போதில் தான்இந்
நாயகன் பிறந்தான்; துன்பக்
கொள்ளிவாய் வேவார்க் கெல்லாம்
கொளத்தக்க துணைவ னாக;
வள்ளுகிர்த் திறத்தி னாலே
வறுமையின்கொடிய நெஞ்சைப்
பிள்ளுறச் சாய்க்க வல்ல
பிடர்சிலிர் சீய மாக. 19

வான்வரு தேவர் வந்து
வாழ்த்துப்பா பாட வில்லை;
மீன்கணம் இறங்கி வந்து
மெல்லிசை இசைக்க வில்லை;
தேன்மாரி பெய்ய வில்லை;
அசரீரி செப்ப வில்லை;
கோன்மையர் ஆட்ட பாட்டம்
குலைத்தவன் பிறந்த போது. 20

காசிலார்-வறுமையுற்றார், காசு + இலார்-குற்றமில்லார், தூசுறை - தூசு படிந்த, என்ரிகு-மார்க்சின் தந்தை,என்ரிட்டே- மார்க்சின் தாய், மன்பதைக்கு - உலகுக்கு, வேவார்-வருந்துவார், வள்ளுகிர்-வலிமையான நகம், பிள்ளுற - பிளவுபடுமாறு, சீயம் - சிங்கம், கோன்மையர் - ஆட்சியாளர்

விதியிஃது என்று நம்பி
நாள்தொறும் விம்மிச் சாவோர்
கதியினை என்ன சொல்ல!
கனல்துண்டை நெஞ்சுள் வைத்தோர்
புதியதோர் சமூகம் காணப்
புரட்சிக்காம் விதையைத் தூவிப்
பதியனிட் டுரமும் வைத்துக்
காலத்தைப் பார்த்தி ருந்தார். 21

கற்பனைச் சமனி யத்தார்
கலக்கலால் கலங்கிப் போன
அற்பரின் ஆட்சி பீடம்
அதிர்ந்தது; சமூகத் துள்ளே
புற்புதம் தோன்றச் செய்த
புல்லர் யார்? அரச பீடம்
முற்படக் காணல் வேண்டி
மோப்பநாய் துணையாத் தேட. 22

ஒற்றரின் கூர்த்த கண்கள்
எங்கெங்கும் ஓடி ஓடிச்
சுற்றியே வளைத்த போதச்
சுழலுக்குள் மார்க்சின் தந்தை
நிற்றலைத் தெரிந்து கொண்ட
அரசினர் முனைந்து நின்று
முற்றுறத் தெரியு மாறு
மோப்பநாய்க் காணை யிட்டார். 23

புரட்சியின் கழனி யான
பிரான்சிலே பூத்து நின்ற
திரட்சிகொள் அறிவின் தேக்கம்
என்னவே திகழ்ந்த ரூசோ;
மருட்கொள வைக்கும் சொல்லன்
வால்டேரின் நூல்கள் எல்லாம்
இருட்சிறை உடைக்கும் என்றே
என்ரிகு மனத்துள் வைத்தான். 24

கனல் துண்டை நெஞ்சுள்வைத்தோர் - புரட்சியாளர், இங்கே கற்பனைச் சமனியத்தார். புற்புதம் - நீர்க்குமிழ்கள், மோப்ப நாய் - ஒற்றர்கள், முற்றுற - முழுமையாக, ரூசோ, வால்டேர் - பிரான்சில் தோன்றிய அறிஞர்கள், மருட்கொள-மயக்கம் கொள்ள.

மதந்தரு பழைமை வாத
வழக்கெலாம் புறத்தே தள்ளி
விதந்தரு புதுமை கோடி
விழைதலை மனத்துட் கொண்டு
சுதந்தர மனித னாகி
என்றிகு துலங்கும் நாள்தான்
புதனெனும் காரல் மார்க்சைப்
புதல்வனாப் பெற்றெ டுத்தான். 25

முட்டைக்குள் இருந்த போதே
இவ்வெறி மூண்டி ருந்தால்
சட்டையை உதறித் தள்ளிச்
சரேலெனக் குஞ்சு பாயின்
குட்டையாய் வானம் கூடக்
குனியாதோ? தாயின் பாய்ச்சல்
எட்டடி என்றால் குட்டி
இரட்டிப்பாப் பாயுந் தானே! 26

மாற்றத்தை விரும்பி நின்றோன்
மகனாகப் பிறந்த மார்க்சின்
ஏற்றத்தை எண்ணிப் பார்த்தால்
இதுவுமோர் உண்மை என்பர்
சீற்றத்தால் அரசு செய்யும்
செயல்களை அறிந்து 'தன்னை
மாற்றிக்கொள் வதுவே நன்றாம்'
என்றிகு மனத்துட் கொண்டான் 27

வெளிப்படை யாகப் பேசும்
விழைவினை விட்ட போதும்
புளிப்படைந் திருந்த நெஞ்சப்
பொருமலை விட்டா னில்லை;
களிப்புடன் காரல் மார்க்சோ
டுரையாடும் காலத் தெல்லாம்
துளித்துளி யாக மைந்தன்
செவிக்குளே தூவி வைத்தான். 28

புதன் - அறிவன், இரட்டிப்பா - இரட்டிப்பாக

பள்ளியுள் நுழையு முன்பே
பன்முக அறிவை நெஞ்சின்
உள்ளிருப் பாக்கிக் கொண்டான்;
தந்தையின் உதவி யாலே.
கள்ளென மயங்க வைக்கும்
கதைகளை இட்டுக் கட்டிப்
பிள்ளைமை நீங்கி னாரும்
பெருவியப் புறுத்த வல்லான். 29

கண்டது கற்றல் வல்லான்;
கணிதமோ டிலத்தீன் கிரேக்கம்
உண்டனன் அள்ளி அள்ளி
உயர்பள்ளி படித்த காலை;
தின்றபின் செரிக்கா மையால்
திணறுவார் போல அன்றி
மென்றுமென் றுள்ளே வாங்கும்
விதமெனச் செரிக்கக் கற்றான். 30

பள்ளியில் பயிலும் காரல்
சிறுவனென் றெண்ணா னாகிக்
கொள்ளெனத் தந்து தந்து
கோதறச் செய்யும் ஞானப்
புள்ளியை வட்ட மாக்கி
வானெலாம் வளைத்துப் போர்த்தும்
ஒள்ளிமை கொண்டோ னாக
உருவாக்க எண்ணம் கொண்டான். 31

படிப்பிலே முதல்வன் என்று
பகர்ந்திட முடிய வில்லை;
துடிப்போடு விடையி றுத்தல்;
நுணுக்கத்தைத் தூல மாக்கல்;
வெடிப்புறக் கேலி கிண்டல்
விளைவித்தல் கவிதை நூறு
வடித்திடல் இவற்றில் எல்லாம்
முதல்வனா வயங்கி நின்றான். 32

பிள்ளைமை நீங்கினார் - பெரியவர்கள், ஒள்ளிமை - ஒளிமிக்க அறிவு,
கோதற - பிழையற, வயங்கி - விளங்கி

ஆற்றலைச் சினத்தைக் கண்டோர்
அஞ்சுவர் எனினும் பொங்கும்
ஊற்றெனச் சுரக்கும் பேச்சைக்
கேட்டவர் உவப்பர்; மேற்றோல்
தோற்றத்தில் முள்ளைப் போலத்
துலங்கினும் சுளைகள் ஈயும்
நாற்றத்தால் சுவையால் யாரும்
நயந்திடும் பலாவை ஒத்தான். 33

தந்தைமேல் இருந்த நேயம்
தாயின்மேல் இருந்த தில்லை;
எந்தநாள் எந்தப் போதும்
என்றிகு நிழற்ப டந்தான்
விந்தைசேர் புதைய லைப்போல்
பையினுள் வீற்றி ருக்கும்;
நொந்துறின் படத்தைப் பார்த்து
நொடியிலே ஊக்கம் கொள்வான். 34

'பணத்தினைப் பற்றி மட்டும்
எழுதினால் பயனொன் றில்லை;
உணத்தின உடுத்த எல்லாம்
உதவிடும் பணத்தை ஈட்டான்
பிணத்தினை ஒப்பான்' என்னும்
கொள்கையில் பிறங்கும் தாய்மேல்
மனத்தினை வைக்கக் காரல்
மார்க்சுக்குத் தயக்கம் போலும் 35

தள்ளரும் கல்வி கற்றோன்
தான்இனி வாழ்க்கை யில்மேற்
கொள்ளலுக் குரிய தான
தொழில்பற்றிக் கூறு கென்ன
விள்ளரும் தியாக வாழ்வை
மேற்கொளல் என்று ரைத்தான்;
பள்ளியில் பயின்ற கல்வி
பயனுற நிறைவே றிற்றால். 36

நாற்றம் - மணம், நயந்திடும் - விரும்பிடும், உணத்தின - உண்ண+தின்ன,
ஈட்டான் - திரட்டாதவன், தள்ளரும் - நீக்குதற்கரிய, விள்ளரும் - சொல்வதற்கரிய.

சட்டத்தில் தேறி விட்டால்
சரித்திரம் படைப்பான், நெஞ்சின்
திட்டத்தை எல்லாம் மைந்தன்
ஈடேற்றி வைப்பான் என்றோர்
இட்டத்தை மனத்துள் வைத்துத்
திகழ்ஆசை வானத் தின்மேல்
பட்டத்தைப் பறக்க விட்டுப்
பகற்கனாக் கண்டான் தந்தை. 37

3. அறிவுத் தேனீ

வான்தரு கல்வி வளமெலாம் நுகரும்
வாய்ப்பினை முழுமையா அடையப்
பான்நகர் விளங்கும் பல்கலைக் கழகம்
பயின்றிடப் போயவண் சேர்ந்தான்;
ஏன்எதற் கென்னும் வினாக்களின் வளர்ச்சி
விண்தொட எழுந்ததால் நெஞ்சம்
தான்இதற் கெல்லாம் விடையினைக் காணும்
தவிப்பினால் நூற்கடல் ஆழ்ந்தான். 38

ஓமரின் படைப்பை, கிரேக்கரின் மொழியை
உரோமரின் தொன்மநூல் மற்றும்
காமரு கலையின் நீள்வர லாற்றுக்
களஞ்சியம் அனைத்தையும் கற்றுத்
தோமறத் தெளிந்தான். கவிஞர்கள் கழகத்
தூண்களில் ஒருவனா ஆனான்.
தேமுறு கவிதை இலக்கிய நடைக்கோர்
திருவினன் ஆயினன் காரல். 39

அறிவினுக் கெதிராப் புறப்படு மதத்தின்
சடங்குகள் ஆயின எல்லாம்
முறிபடு மாறு நடைமுறை மாற்றம்
முதிர்ந்தனன் ஆதலைக் கண்டு
குறிபடு வாழ்க்கை பிறழ்ந்தனன் எனவே
குலைந்தனன் என்றிகு, இந்நிலையில்
ஒருவரு டம்போய் முடிந்ததால் காரல்
விடுமுறைக் கூர்திரும் பினனால். 40

வான்தரு - பெருமைதரும், பான் நகர் - செர்மனியில் உள்ள நகரம், ஓமர் - ஹோமர், தொன்மநூல் - புராணம், காமர் - விரும்பச் செய்யும், தோமற - குற்றமற, தேமுறு - இனிமையுறும், திருவினன் - பேற்றினன், குறிபடு வாழ்க்கை - சட்டம் படிக்க வேண்டும் என்னும் குறிக்கோள் வாழ்க்கை

காரலின் குடும்ப நண்பரா யமைந்த
கண்ணியம் மிக்கவெட் பாலன்;
சீருளர், மேன்மைச் சிறப்புளர் என்றே
செப்புவர்; பல்துறை அறிவில்
ஆருளர் இவற்கு நிகரெனப் பேசும்
ஆண்மையர் குடும்பமும் ஒற்றை
நாரினில் இணைந்த பூவிரண் டாகி
நண்ணின ராயவண் வாழ்ந்தார். 41

மாற்றரும் கால மரபினுக் கேற்ப
வளர்துறை அனைத்தையும் கற்றார்;
ஆற்றலன் காரல் மார்க்சினுக் கவற்றை
அறிமுகம் செய்ததில் முதல்வர்;
போற்றுறும் சமன்மை பற்றியே சைமன்
புகன்றன புந்தியுள் தந்தோர்;
ஏற்றதோர் உருவைக் காரல்தாம் எடுக்க
இவர்கொடை கொஞ்சமோ! இல்லை! 42

சென்னியை மகளாக் கண்ணுறை மணியாச்
சீருறப் பெற்றவர்; காரல்
தன்னினும் இளையன் என்றிக ழாமல்
தக்கவோர் நண்பனாக் கருதி
முன்னிய கருத்தை நுண்ணிய மாக
மொழிகுவார்; நாடொறும் இதனால்
பின்னிய உறவில் குடும்பங்க ளிரண்டும்
பிணைந்தன வளர்பிறை போலே. 43

கண்களில் நிலவு கான்றிடும்; இதழில்
கமலங்கள் தோன்றிடும்; பேச்சில்
பண்களின் சாரம் வழிந்திடும்; அகமோ
பயிலறம் செழித்திடும் நன்செய்;
மண்களி கொளவும் வாலிபர் உள்ளம்
மத்துறை தயிரின் மாழ் கிடவும்
பெண்களில் இவள்போல் எவள்பிறந் துள்ளாள்
பேசினர் சென்னியை வியந்து 44

வெட்பாலன் - வெஸ்ட் பாலன், சென்னியின்தந்தை, நண்ணினர் - நெருங்கினர், சைமன் - சமனியம் பற்றி நூலெழுதிய அறிஞர், புந்தியுள் - புத்தியுள், முன்னிய - கருதிய, நுண்ணியமாக - நுட்பமாக, நிலவு கான்றிடும் - ஒளி உமிழ்ந்திடும், மண் - உலகம், மாழ்குதல் - மனம் அழிதல்

சிறுவராம் நாளில் ஒன்றிணைந் தாடித்
திரிந்தவர் நாடொறும் வளர்ந்தே
ஒருவராம் படிக்குக் காதலில் கட்டுண்டு
உவந்தனர்; தவித்தனர்; பின்னர்
மருவுறு சென்னி காரலின் காதல்
மனத்தள வாகவே ஓங்கப்
'பெறுவரு பட்டம் பெற்றபின் மணப்போம்;
பேசியே காத்திருந் தனரால். 45

தொடர்ந்துமேற் படிப்பை முடித்திட வேண்டித்
தொன்னகர் பெர்லினை அடைந்தான்;
அடர்ந்தெழும் எகலின் தத்துவப் புயலுள்
அகப்பட்டுச் சுழன்றனன்; எங்கும்
படர்ந்தெழுந் தோங்கும் எகலியர் கழகப்
பணிகளில் முதன்மையன் ஆனான்;
தடம்படும் கல்வித் தளத்தினில் மட்டும்
தளர்ந்தனன் ஆயவன் இருந்தான். 46

எகலியர் குழுவும் இருவகைப் பிரிவாய்
இருந்தது; பழைமையைப் போற்றும்
அகத்தினர் முதிய எகலியர் என்றே
அழைத்தனர்; அத்தகு பழைமைக்கு
இகலினர் ஆகி எதிர்ப்பவர் இளைய
எகலியர் எனப்பெயர் பெற்றார்;
பகலெனும் அறிவன் காரலோ இளைய
எகலியர் பக்கலில் நின்றான். 47

சட்டநூற் புலமை எட்டுவான் என்ற
தந்தையின் கனவுபொய் யாக
மட்டில தாய தத்துவ மலையை
மல்லிட இழுத்தனன்; 'எண்ணப்
பட்டறை' என்றே மற்றவர் போற்றும்
பான்மையன் ஆயினான்; காரல்
குட்டிய குட்டால் குனிந்தளத் தலையும்
நிமிர்ந்ததாக் கூறினார் இல்லை 48

மருவுறு-ஒன்றோடொன்று பொருந்திய, அடர்ந்தெழும்-நெருக்கிஎழும், படர்ந்து - விரிந்து, இகலினர் - வேறுபட்டவர்.

ஆ!இவன் சிறிய தோள்களின் மீதில்
அளப்பரும் மூளையா என்றே
கூவினர் வியந்து முதியவர் கூடக்
கோப்பன்என் றொருபெயர் கொண்ட
மாபெரும் வரலாற் றறிஞன்தான் வடித்த
'மாபெரும் பிரடெரிக்' கென்னும்
தாவிலா நூலைக் காரலுக் கென்று
தந்தவன் படைத்தனன் அன்றோ! 49

ஒருபுறம் காதல், மறுபுறம் கல்வி,
இடையிலே தத்துவ உலகம்;
இருதலைக் கொள்ளி உள்ளெறும் பாகி
இயங்கினன் ஆதலின் கல்வி
பெருகுறல் இன்றிப் பின்னடைவுறவே
பெயர்ந்தன நாள்களோ; அந்நாள்
வெருவுறச் செய்யும் பெரியதோர் இடிதான்
வீழ்ந்ததால் நிலைகுலை வுற்றான். 50

படிப்பினும் முடிந்த பாடிலை; நோய்வாய்ப்
பட்டதால் தந்தையின் உயிர்தான்
துடிப்பினை நிறுத்திக் கொண்டது; மாளாத்
துயரினுள் மூழ்கியோன் மீண்டு
பிடிப்பொடு கல்வி தொடரினும் முன்போல்
பெரும்பணம் அனுப்புவார் இல்லை;
முடிப்பதே கடனாம் என்றவன் முனைந்து
முடித்தனன்; சான்றிதழ் பெற்றான். 51

இனிமையும் மகிழ்வும் நிரம்பிய வாழ்க்கை
இறுதியை அடைந்தது; நீங்காத்
தனிமையையும் சுமையும் அழுத்திடக் கண்டான்
தந்தையின் பிரிவினால்; இனிமேல்
கனிவரும் காலம் எனஎதிர் பார்த்துக்
காத்தவண் இருக்கையில் துன்பச்
சனிவரல் என்னத் துயர்களின் வரிசைச்
சக்கரம் சுழன்றதால் அந்தோ. 52

கோப்பன்-ஒரு வரலாற்றறிஞன், தாவிலா-குற்றமிலா, தந்தவன்-தந்து+அவன், பெருகுறல்-பெருகிவளர்தல், வெருவுற-அஞ்சச்செய்யும், காத்தவண்-காத்து+அவண், அவண் - அங்கே

‘படிப்படி யான வளர்ச்சியின் போக்குப்
பாதையில் செல்வதிவ் வுலகம்;
அடிப்படை யான உள்முரண் பாட்டால்,
அதில்எழும் போரினால் உள்ளே
வெடிப்புறும்; சற்றே விலகுறும்; பின்னர்
ஒன்றென விதியுறக் கூடும்;
படிப்பினை இதனைச் சமுகத்தி னுள்ளும்
பார்’எனல் எகலியர் கொள்கை. 53

எகலினைப் பெரிதும்போற்றினான் எனினும்
இறுதியில் ஆய்முறை மாறிப்
பகலினை இருளே என்பவர் போலப்
பாழ்செயு மதந்தரு சேற்றுள்
புகலினைக் கண்டான்; எகலினை விடுத்துப்
போம்நெறி எதுவென ஆய்ந்தான்;
தகவுறக் கிரேக்கம் தந்தபே ரறிஞர்
தத்துவக் கடலில்முத் தெடுத்தான். 54

எபிக்குரர் மற்றும் தெமக்கரிட் டென்னும்
இருவரின் தத்துவ ஞானம்
புவித்திரள் பற்றிப் புகன்றிடு முறையில்
பொருத்தமும் பொருத்தமின் மையுமாம்
தனித்திறன் பற்றி இனித்திடும் வண்ணம்
சடுதியில் ஆய்வினை முடித்துப்
பளிச்சிடும் ‘சீனாப் பல்கலைக் கழகப்’
பார்வையர்க் கனுப்பியே வைத்தான். 55

ஆய்வியல் வல்லார் காரலின் படைப்பை
அடிமுதல் நுனிவரை ஆய்ந்து
சாய்வியல் மற்றும் சார்பியல் இலராய்த்
தகுந்தகும் என்றுளம் தழைத்தே
ஆய்வியல் முனைவர் என்னுமோர் பட்டம்
அளித்திடப் பரிந்துரைத் தனரால்
ஏய்தரும் பட்டம்வாங்கினான் எனினும்
என்றுமே சுமந்திட வில்லை. 56

புகலினை - புகுதலை, சீனா - ஜீனா, ஏய்தரும் - பொருத்தமான

4. புதிய வானம்; புதிய பூமி

தத்துவத்தில் முனைவனெனும் பட்டமிருந் தென்ன
சித்திரத்தில் உள்ளபழம் எப்பசியைத் தீர்க்கும்?
எத்துறையில் எந்நெறியில் எப்பணியில் சேரல்
பத்துமுறை எண்ணிஎண்ணிச் சித்தமொடிந் தானால். 57

பல்கலையின் விரிவுரைஞன் ஆகுமனத் தாசை
மல்கிவளர் வுற்றதொரு காலமவற் குண்டு;
வல்கொடிய ஆட்சியொடு மதத்தலைமை கூடிப்
புல்கியதால் அறிஞர்களைப் பொசுக்கியதக் காலம். 58

மெய்யறிஞன் நட்பினிலே மிகுபுருனோ பாவர்
உய்வறியா ஏழையர்க்கா ஓங்குகுரல் எழுப்பப்
பொய்யறிவுச் சாக்கடையில் புழுத்தஅர சாங்கம்
செய்யவனைப் பணிவிலக்கம் செய்தசெயல் வெறுத்தான். 59

ஆதலினால் பல்கலையின் ஆசிரியன் ஆதல்
சாதலினும் கொடியதெனும் ஓர்முடிவைக் கொண்டான்;
தீதுகளைந் தேசமுகம் ஆதலுறச் செய்யும்
காதலுறு பத்திரிகை மீதொருகண் வைத்தான். 60

தத்துவங்கள் பேசுவதால் வாழ்முறையில் மாற்றம்
இத்தரையில் தோன்றிவிடா; தத்துவங்கள் வாழ்வில்
ஒத்துவரும் முறையினிலே நடைமுறைக்குக் கொணரும்
வித்தகத்தின் வெற்றியன்றோ தத்துவத்தின் வெற்றி. 61

என்னுமொரு முடிவினனாய் இதழியலே இனிமேல்
தன்னுடைய துறையெனுமோர் நன்முடிவைக் கொண்டான்;
பன்னலுறு வாரைஎலாம் தன்னதிகா ரத்தால்
பின்னமுறச் செயுமரசின் முன்னெதிர லானான். 62

மல்கி - மிகுந்து, வல்கொடிய - மிகக்கொடிய, புல்கியதால் - கூடியதால், செய்யவன் - நேர்மையாளன், ஆதலுற - மேன்மையுற, இதழியலே - பத்திரிகைத் தொழிலே, பன்னலுறுவாரை - பேசுகின்றவர்களை, பின்னமுற - கேடுற, முன்னெதிரல் - எதிர்த்தல்

மதவியலும் அரசியலும் கைகளினைக் கோத்துப்
பதவியிலும் ஆட்சியிலும் பங்குகொளும் சூதை
இதமுறவா, இல்லையிலை எரிகனலின் சொல்லால்
சிதையிலுறு பிணமெரிக்கும் செயலெனவே எரித்தான். 63

வேண்டுதல்கள் செபதபங்கள் செய்வதனால் இங்கே
மூண்டுவிடும் ஓர்புரட்சி என்பதெலாம் மாயை;
தூண்டுதல்கள் அதன்விளைவாத் துலங்குதல்கள் நேர்ந்தால்
ஈண்டுமொரு புரட்சிவரும் என்பதனை யோர்மின். 64

புலம்புவதால், கலங்குவதால், புகழுரையால் வாயை
அலம்புவதால் சுதந்தரத்தை அடைந்திடுதல் இல்லை;
சிலம்புவதால், வாளெடுத்துச் செங்களத்தை நோக்கிக்
கிளம்புவதால் அல்லாமல் கிட்டிடுமோ சொல்வீர்! 65

'நீண்டநெடுங் காலமுதல் நிகழ்ந்தவரு மரபைத்
தாண்டநினை யாதிர்'என வேண்டல்அறி யாமை;
மூண்டபழந் தீமைகளை மரபெனுமோர் பேரால்
ஈண்டுமது நியாயமெனல் எவ்வகையில் நியாயம்? 66

கூரறிவும் மீறுணர்வும் குதித்துவரு மாறு
காரல்தரும் எழுத்தையெலாம் காசுபண மாக்க
ஆரவிழை வுற்றசிலர் அவனையழைத் தேதம்
ஊரறியும் பத்திரிகைக் காசிரியன் ஆக்க. 67

அரசியல்சார் கட்டுரைகள் பலஎழுதி விட்டான்;
உரசஎழும் தீப்பொறியாய் மக்களுளம் பற்றப்
பரசுபுகழ் பெருகியதால்; படித்தவர்கள் எல்லாம்
முரசதிரல் எனஅதிரும் இவன்எழுத்தில் மொய்த்தார். 68

தூண்டுதல்கள் - காரணிகளின் செயற்பாடு, துலங்குதல்கள் - எதிர்விளைவுகள், வேண்டல் - கேட்டல், கூரறிவு - மிகுந்தஅறிவு, மீறுணர்வு - எல்லைமீறிய உணர்ச்சி, ஆரவிழைவுற்ற சிலர் - நிறைந்த விருப்பமுற்ற சிலர், பரசுபுகழ் - போற்றற்குரிய புகழ்

கற்பனையில் சோசலிசம் கண்டதனை எங்கும்
விற்பனைசெய் கின்றவர்கள் பற்பலரி ருந்தார்;
தப்பிதங்கள் நிறைந்த அதை; ஏற்றிடுவீ ரானால்
அப்புறம்மீ ளாவடிமை ஆமெனவே சொன்னான். 69

சூடுபரக் கின்றஎழுத் தென்பதனால் எங்கும்
ஏடுபறக் கின்றதென ஒற்றர்தரும் கூற்றால்
கேடுவரக் கூடுமென அஞ்சியர சாங்கம்
மூடுவிழாச் செய்துவிட முன்னியவப் போது. 70

தணிக்கைமுறை கொணர்ந்தரசு நெருக்கியது, காரல்
இனிக்கை யொடிந் திடுவதலால் என்னசெய முடியும்?
பணிக்கையிடல் போன்றசெயல் மேற்கொளக்கட் டுரைகள்
திணிக்கலுறு பொதிகிழியச் சிதறுவன போல்ஆம். 71

கம்புகளைக் கொண்டொருவன் தாக்குகையில் தாள்செய்
அம்புகளைக் கொண்டெதிரல் அறிவுடைமை ஆமோ?
சிம்புளெனும் பறவையவன் சிறகொடிந்த தாலே
வெம்புமனம் மிக்கவனாய் வேதனையுள் ஆழ்ந்தான். 72

அதிகாரம் மிகவுடையார் அச்சுறுத்தல் கண்ட
சதிகாரர் சிலர்அவனுக் குபதேசம் செய்தார்;
மிதமாக நடந்துகொளின் துயரேது? நல்ல
விதமாகப் பத்திரிகை நடத்திடலா மென்ன. 73

படிப்பவர்கள் பத்திரிகைக் கொள்கையிது வென்றே
வடிப்பவர்கள் ஆவதுபோல் வறுமைபிறி தில்லை;
படிப்பவர்தம் கொள்கையினைப் பத்திரிகை யாளன்
வடிப்பதுதான் வாய்மையதை மாற்றுகிலேன் என்றான். 74

முன்னிய - கருதிய, இனிக்கையொடிந்திடுவதலால் - இனி+கை+ ஒடிந்திடுவது+அல்லால், பணிக்கையிடல் - குறைகளை நீக்கி ஒப்பனை செய்தல், தாள்செய் அம்புகள் - காகிதத்தால் செய்யப்பட்ட அம்புகள், வறுமை - அறிவு வறுமை, மாற்றுகிலேன் - மாற்றிக்கொள்ள மாட்டேன்

உள்ளிருந்தும் வெளியிருந்தும் தன்னைஎதிர்ப் பாரின்
கொள்ளிவரக் கண்டஅவன் கோபமிகக் கொண்டான்;
எள்ளளவும் இப்பணியில் இனித்தொடரேன் என்று
துள்ளி எழும் நெஞ்சினனாய் அப்பணிது றந்தான். 75

இருமூன்று மாதந்தான் பணிசெய்தான் எனினும்
செருமூண்டு வருதற்காம் அடிகோலி விட்டான்;
உருமாறும் படியாகச் சமுகத்துள் முரண்கள்
வருமாறு செய்தற்காம் வழிபோட்டு விட்டான். 76

செரு - போர்

5. இருமனம் ஒன்றிய திருமணம்

நடக்கு மென்றெதிர் பார்த்தன இவ்வணம்
நலியு மென்றெதிர் பார்த்திலன்; வாழ்க்கையின்
தொடக்க மேஎதிர் நீச்சலில் ஆயினும்
துளங்க லில்லையென் றுள்மனம் காழ்த்தனன்;
அடக்க வந்தன யாவையே யாயினும்
அடங்கு மாறெதிர் கொள்ளுவம் ஆமெனில்
கடக்க லாமதை; வெற்றியும் காணலாம்;
கடிய சிந்தைதான் இன்றையத் தேவையாம். 77

ஆறு திங்களின் ஆசிரி யப்பணி
அனுப வத்தினின் றோர்தெளி வுற்றனன்;
வேறு வேறெனும் அரசியல் வாழ்க்கையை
வெற்றி யாக்குதல் பொருளிய லாமெனும்
சாறு கண்டனன்; ஆகவே மக்களைச்
சார்ந்திடும்பொருட் பங்கினை ஆய்தலில்
வீறு கொண்டனன்; தத்துவப் போரினில்
வெற்றி யின்முதற் கல்லினைத் தொட்டனன். 78

செரும னிக்குளே வாழ்ந்திடல் என்பதும்
செய்ய நற்பணி பற்பல செய்வதும்
கரும ணற்குவை வீழ்ந்தஉ ழுந்தினைக்
கண்டெ டுத்திடல் போலிய தாமென
ஒரும னத்தரா ஆனதம் நட்பினர்
உடனிருந்தவர் தம்மொடும் ஆய்ந்தனன்;
'இருள்க விந்திடும் இத்தகு வேளையில்
என்ன செய்குவம் கூறுமின்' என்றனன். 79

அன்பு சான்றஅர் னால்டுரூ சென்பவன்
'அரசு பற்பல தொல்லைகள் தந்திடும்
முன்பு செர்மனி நீங்குவம்; பாரிசில்
முழங்கும் ஓரிதழ் நாம்விரைந் தாக்குவம்;
துன்பு செய்திடும் ஆட்சியர் கேட்டினைத்
தூள்ப ரத்துவம்; அவ்விதழ் முற்றிலும்
நண்பு காரலின் வெங்கனற் சொற்களின்
நடன மேடையா மாற்றுவம்' என்றனன். 80

துளங்கலில்லை - தளர்தல் இல்லை, காழ்த்தனன்-உறுதியாயினன்,
கடிய சிந்தை - உறுதியான மனம், சாறு - பிழிவு,மணற்குவை-மணற்குவியல்.

இற்றை நாளினில் தன்னுறு சார்பொடு
இழுத்து மூச்சினை விட்டிட ஓரிடம்
சுற்று முற்றிலும் பாரிசின் மிக்கதாச்
சொல்ல வேறிடம் இல்லையால்; ஆதலின்
மற்று மென்சொலப் பாரிசுக் கேகுவென்;
மனக்கி டக்கையை முற்றுறச் செய்குவென்;
உற்ற இத்தொழிற் காம்பணம் யாவையும்
ஒருவ னேஇடு வேனெனக் கூறினான். 81

'காரல் எண்ணிய வண்ணமே அவ்விதழ்க்
கட்ட மைப்பினைக் கொண்டுவி ளங்கலாம்;
நேரு மிவ்விதழ் ஆசிரி யர்க்கென
நியாய மானதொர் ஊதியம் ஈகுவென்;
சேர வந்திடும் அவ்விதழ்க் காவன
செய்ய வேண்டியான் பாரிசுக் கேகுவென்;
காரல்! இன்னுமொர் திங்களி ரண்டினில்
கண்டு பாரிசில் நாம்பணி செய்குவெம்' 82

ரூசு கூறிய செய்திகள் கேட்டபின்
நோய்மை நீங்கினன்; மேல்வரும் நாளினில்
தேசு பொங்கிடும்; செய்வன செய்யலாம்;
செலவுக் கூதியம் நிச்சய மானது;
பேச என்னினி உள்ளது; வாழ்க்கையில்
பேறு சூழ்கையில் நானதைத் தள்ளுதல்
ஏச லுக்குரித் தாமெனக் காரலும்
எண்ணி னானதற் கொப்புதல் தந்தனன். 83

வாய்மை மிக்கவன் போலுரை யாடினும்
வஞ்ச மிக்கவன் ரூசெனல் காண்கிலர்;
தாய்மை பொங்குறப் பேசினும் நெஞ்சினுள்
தன்ன லச்சுரங் கத்தினைக் கொண்டவன்;
ஆமை போற்பிறர் அஞ்சுற வாழ்வரேல்
அன்ன வர்தமை ஆளலில் ஓர்சுகம்
ஏய்ம னத்தினன் தன்னொடு காரல்தான்
இட்ட கூட்டுற வெத்தனை நாள்களோ? 84

நேரும் இவ்விதழ் - எதிர்வரும் இவ்விதழ், நோய்மை - வருத்தம், ஏய்மனத்தினன் - பொருந்திய மனத்தினன்

தந்தை என்றிகு மாண்டபின் தாயுடன்
சார்ந்த நேயமோ தேய்பிறை யானது;
பந்த மென்பது போயது மட்டுமா?
பகைஎ னச்சொலும் ஓர்நிலை உற்றதால்;
எந்த நாளிலும் தந்தையின் சொத்தினுள்
இம்மி கூடயான் ஈகிலேன் என்றுதாய்
சிந்தி னாளொரு தீச்சொலைக் காரலோ
சென்னி வீடுதன் வீடெனச் சேர்ந்தனன். 85

உள்ள மொன்றிய காதலில் ஈடுபட்
டோடி விட்டன ஆண்டுகள் ஏழினி
வெள்ள மோகிணற் றுள்ளநன் னீரினை
வேட்டெ டுத்திடல் இல்லையே என்றுயான்
கள்ள மாகஎன் நெஞ்சினைத் தேற்றலாம்;
கவலை மிக்கவள் துன்பினை மாற்றுமோ?
விள்ள ஒண்ணுதல் இல்லதோர் மாபுயல்
வீச்சொ ழிந்திடல் என்றுகை கூடுமோ? 86

இன்ன வண்ணமே வாழ்க்கையின் போக்கெனல்
இறுதி யானதால் காரலின் நெஞ்சிலே
வண்ண வண்ணமா இன்கனா ஊர்வலம்
வந்து வந்து மேல் தோன்றிடச் சென்னியை
நன்ம ணம்புணர்ந் தெல்லையில் இன்பினுள்
நாளும் மூழ்கினன்; தோன்றெதிர் நாளிலே
பன்ன லில்லதோர் துன்பமே என்பதைப்
பார்த்த றிந்தவர் போல்நலம் துய்த்தனர். 87

பக்க முள்ளஊர் பற்பல சென்றனர்;
பாச மிக்கவர் வாழ்மனைத் தங்கினர்;
தக்க தாம்எழிற் காட்சிகள் கண்டுளம்
தளிர்த்த இன்பினுள் ஆழ்ந்தனர்; இங்ஙனே
புக்க வாறிவர் போகமும் ஒன்றிடப்
போய தாலிரு திங்களும்; ஆதலின்
மிக்க ஆவலின் பாரிசை நோக்கியே
விரைய லாயினர் காரலும் சென்னியும் 88

வேட்டு - விரும்பி, கவலைமிக்கவள் - சென்னி, எல்லையில் - எல்லையில்லாத, பன்னலில்லது - சொல்லமுடியாதது.

6. செர்மன் பிரெஞ்சு மலர்

செருமன் பிரெஞ்சு மலரென்னும்
சிறப்புப் பெயரான் அமைந்தஇதழ்
இருமை மொழியில் வெளியிடவும்
இருநாட் டறிஞர் கட்டுரையால்
ஒருமை உணர்வை உருவாக்கி
உலகை இணைக்க வேண்டுமெனும்
அருமை மிகுந்த குறிக்கோளை
அகத்தே கொண்டு செயல்பட்டார். 89

புதுமை பொதுளும் கட்டுரையால்
உலகைப் புதுக்கும் உணர்வுடையீர்!
மதுவும் கனலும் இணைந்ததெனா
மருட்டும் சொல்லை ஆளவலீர்!
எதுநாம் இனிமேல் செயல்வேண்டும்
என்னல் குறித்துக் கட்டுரைகள்
பொதுமை தவழத் தருமினென
முடங்கல் போக்கிக் காத்திருந்தார். 90

என்ன நினைப்போ அறியகிலோம்
அழைப்பை ஏற்றுக் கட்டுரைகள்
நன்னர் வழங்கப் பிரான்சறிஞர்
நயந்தா ரில்லை; நேர்முகமாய்ப்
பன்னிப் பன்னிக் கேட்டபினும்
பாரா முகமாய் இருந்துவிட
முன்னர் இருந்த மனஊக்கம்
சற்றே முறியத் தளர்வுற்றார். 91

இரண்டு மொழியில் வெளியிட்டால்
எளிதில் இதழை விற்றிடலாம்;
திரண்ட சந்தா தாரர்களால்
செல்வம் கொழிக்கும்; என்றிமையில்
புரண்ட கனவு பொய்யாகப்
போமோ என்றே அர்னால்டு
மிரண்டு போனான்; அம்மட்டோ
மெலிந்தும் போனான் நெஞ்சுறுதி. 92

இருமை மொழி - பிரஞ்சு, செர்மன்மொழி, பொதுளும் - உள்நிறையும்,
பன்னிப்பன்னி - சொல்லிச்சொல்லி

ஆரும் எழுத விரும்பாமல்
அகல்தல் கண்ட காரல்மனம்
சோரும் நிலைதான் என்றாலும்
துளங்கா மனத்தன் ஆதலினால்
சேரும் இந்த நிலைமாற்றச்
செர்மன் பிரெஞ்சு மலரிதழில்
வீரம் மணக்கும் எழுத்தாலே
வெற்றி விளைப்பென் எனஇருந்தான். 93

கருத்து முதலா? புலனாரக்
காணும் பொருள்தான் முதலாஎன்
றருத்தி யுடனே தேடுகையில்
அறிஞன் பாயர் பாகென்பான்
'இருத்தல் கொண்ட பொருள்கொண்டே
எண்ணம் தோன்றும் மாறாகக்
கருத்துள் இருந்தோர் பொருள்தோன்றக்
கண்டா ரில்லை' எனல் தேர்ந்தான். 94

எகலின் கருத்து முதல்வாதம்
இற்றே யொழிய மெய்ம்மையுறு
தகவார் பொருண்மை முதல்வாதம்
தானே சரியாம் எனக்கண்டான்;
சகம்வாழ் கொள்கை புரட்சிகரச்
சனநா யகமா? இல்லை; அது
யுகம்வாழந் திடச்செய் பொதுவுடைமைக்
கொள்கை ஒன்றே எனத்தேர்ந்தான். 95

காரல் மனத்துள் இப்படி யோர்
கருத்து மாற்றம் வந்ததனால்
சீறல், சினத்தல், சொல்லுளியால்
செதுக்கல், நெருப்புத் துண்டுகளைத்
தூறல் எல்லாம் புத்திதழில்
துலங்கக் கண்ட அரசு சில
ஆறல் இல்லாச் சினத்தாலே
அதனைத் தடுக்க முனைந்தனவே. 96

அருத்தி - விருப்பம், ஆறல் - ஆறுதல், புத்திதழ் - செர்மன் பிரெஞ்சு மலர்

நாட்டின் உள்ளே இவ்விதழ்தான்
நாளும் நுழையின் அரசுக்குக்
கேட்டின் எல்லை என்பதனால்
கிலிகொண் டிதனை நுழைய விடா
தோட்டும் வழியில் இரண்டரசும்
ஒன்றா யினவால்; தம்நாட்டுள்
மீட்டும் ரூசு மார்க்சிவர்கள்
மேவின் கைது செயச்சொன்னார். 97

மொழிகள் இரண்டில் வெளியிட்ட
முறையை யாரும் விரும்பவிலை
தொழிற்கண் ணோட்டத் தொடுபார்த்தால்
தோல்வி என்றே சொலல் வேண்டும்;
அழிம்பன் ரூசு மார்க்சிற்கே
அளிப்பேன் என்ற ஊதியத்தைத்
துளியும் தாரா தொருநூறு
தந்தான் இதனை ஊதியமா. 98

வருவா யில்லை; எதிர்கால
வாழ்க்கை இருளாய்த் தோன்றுகையில்
ஒருநாள், முன்னம் ரைன்லாந்து
கெசட்டுக் குரியார் அனுப்பியதோர்
சிறிய தொகையும், ஒரு நண்பன்
செர்மன் பிரெஞ்சு மலர்நூறும்
தருக எனவே தான்வாங்கித்
தந்த தொகையும் வாழ்வுதர 99

தற்கா லிகமாச் சிக்கலெலாம்
தறிகெட் டோடப் பொருளியலைக்
கற்கா திருத்தல் முறையாமோ?
கருதும் நெஞ்சம் உடையவனாய்
முற்கா லங்கொண் டின்றுவரை
முளைத்த நூல்கள் பலவற்றை
அற்கா உளத்த னாய்க் கற்றான்;
அரிய உண்மை பல தேர்ந்தான். 100

இரண்டரசும் - செர்மன்அரசும் பிருஷ்ய அரசும், அழிம்பன் - கேடுசெய்வோன், தறிகெட்டோட - நிலைகெட்டு ஓட, அற்கா - சுருங்காத

துரத்தப் பட்ட செருமனியர்
துதைந்தே வாழ்ந்தார் பாரீசில்;
வருமா னத்தால் உயர்ந்தவரும்;
வறுமை மிகுந்தே தாழ்ந்தவரும்
இருவே றுலகாப் பிளவுற்றார்;
இன்னல் மிகுந்தோர் தமக்கெல்லாம்
ஒருவா றுதவி புரிவோனாய்
உயர்ந்தான்; வாழ்க்கை ஓடிற்றால். 101

இயக்க வியலைப் பொருளியலோ
டிணைக்கும் முயற்சி ஒருபக்கம்;
மயக்கை அறுக்கும் பகுத்தறிவு
வாதப் போரில் மறுபக்கம்;
தயக்கம் மிகவே புரட்சியினார்
தலைமறை வாகிச் செயலெல்லாம்
பயக்கும் விளைவை நாள்தோறும்
பார்த்துப் பார்த்துத் தெளிவுற்றான். 102

புரட்சியினார்-புரட்சிகர சனநாயகக் கட்சியினார். கற்பனைச் சமனியத்தார்.

7. 'முன்னேற்றம்' தந்த பின்னேற்றம்.

'நம்மனித சமுகத்தின் நாளாந்த வரலாற்றைச்
செம்மையுற ஆராய்ந்தால் சீர்மிகுந்த பொருளியல்போல்
பொம்மெனவே உயர்த்துவதும், பொசுக்கெனவே வீழ்த்துவதும்
இம்மையிலே வேறில்லை; எனக்காரல் மனங்கொண்டான் 103

பொருளியலின் ஆய்வுகளைப் புகழ்மிகுந்த ஏடுகளைத்
தெருளுறவே ஆய்ந்துண்மை திரட்டிவரும் அக்காலை
அருளொழுகும் முகச்சென்னி ஐயிரண்டு திங்கள்முதிர்ந்
திருளகல விரிகதிர்போல் இனியமகள் ஈன்றெடுத்தாள். 104

பெண்மகளா இல்லைஇலை, பேசரிய சித்திரம்பூம்
பொன்மகளே என்றுமனம் பூரித்து நின்றாலும்
மண்ணுலகில் மேலுமொரு சுமைவந்து வாய்த்ததெனும்
கண்ணிமைக்குள் சிறுதுரும்பு கரிப்பதுபோல் நினைவெழுமால் 105

குறைவுபடும் கூலிக்குச் செருமனியத் தொழிலாளர்
நிறைவுறவே பணிசெய்ய, நிலத்துரிமை உடையவர்கள்
அறைகுறையாம் கூலிக்கே அல்லலுற நேர்ந்ததனால்
இருவருக்கும் மூள்பகைமை எம்மருங்கும்வெடித்தெழவே 106

தத்தமது நலன்காக்கும் சங்கமிரு சாராரும்
வைத்தார்கள்; மறைவாக வளர்த்தார்கள்; அப்பொழுது
மெத்தஅதி காரமொடு மக்களையே மிரட்டினராய்
ஒத்துமையா தாரையெலாம் அரசியலார் ஒழித்தார்கள். 107

மறைவாக இயங்கிவந்த சங்கமெலாம் உரிமைபல
குறைவாகத் தொடங்கியதும் கொதிப்பேறி நின்றதொடு
முறைகோடும் இவ்வரசை முடித்துவிட எண்ணிடுமக்
கறையோடும் ஒன்றிணையக் கருதினவே பகைநீங்கி. 108

நாளாந்த வரலாறு - நாள்தோறும் நிகழ்ந்தவரலாறு, பொம்மென, பொசுக்கென - ஒலிக்குறிப்புகள், தெருளுற - தெளிவுற, நிலத்துரிமை உடையவர்கள் - பிரான்சு நாட்டுக்குடிமக்கள், முறைகோடும் - ஆட்சிமுறைதவறிய

கற்பனையில் சமனியத்தைக் கண்டவர்கள் எல்லாரும்
நற்சமயம் இதுவென்றே சங்கத்தை நாடிவரக்
கற்பிளக்கும் சிற்றுளியாம் கருதரிய சமனியத்தால்
அற்பர்களின் ஆட்சியினை அழித்துவிட எண்ணினரால். 109

நாத்தவழ்ந்த சமனியத்தால் ஈர்ப்புண்ட நல்லவர்கள்
கோத்தெடுத்த மாலையெனக் குழுக்குழுவாத் திரண்டார்கள்;
ஏத்தவரும் சமனியத்தை எண்டிசையும் பரப்பவெனத்
தீத்தவழும் ஏடொன்றைச் செருமனியர் தொடங்கினரால். 110

'முன்னேற்றம்' எனும்பெயரில் முளைத்துவந்த அவ்வேடு
பொன்னேற்றும்; வாழ்க்கையிலே பொலிவேற்றும் என்றெல்லாம்
தன்னேற்றம் மொழிந்ததுவாய்த் தவழ்ந்துவர அவ்விதழ்தான்
என்னாற்று மோவென்ற எதிர்பார்ப்பு மிக்குறவே. 111

'பிற்போக்கின் மேலான பிரதிநிதி' யாய்த்திகழும்
அற்பனோ செருமனியை ஆளுவதென் றேகாரல்
வெப்புமிழும் சொற்றொகுதி வெளிப்படுமோர் கட்டுரையை
எப்படியோ முன்னேற்றம் இதழாருக் கனுப்பிவைத்தான். 112

கட்டுரையைப் பத்திரிகைக் கண்டரசு கற்சுவர்மேல்
விட்டெறிந்த பந்தெனவே மேல்கீழாக் குதிபோட்டு
முட்டியது; மோதியது; 'முன்னேற்றம்' எனுமிதழைப்
பொட்டிலடித் தேவீழ்த்தப் புதியவழி தேடியது. 113

ஒன்றிணைந்து வாழுகின்ற மக்கள்தம் முள்ளத்தில்
நின்றுபல வேற்றுமையை நிகழ்த்திவிடும் ஆதலினால்
இன்றுமுதல் 'முன்னேற்றம்' பத்திரிகை யாளர்களைச்
சென்றொழிய நாட்டினின்றும் ஏற்பனவே செய்கவென 114

சமனியத்தால் - சமனியக் கோட்பாட்டால், என்னாற்றுமோ - என்னென்ன செய்யுமோ?, பிற்போக்கின் மேலான பிரதிநிதி - செர்மனியை ஆண்ட மன்னனைப் பற்றிக் காரல் கூறியது

செருமனியின் அரசாங்கம் பிரெஞ்சரசைக் கேட்டவுடன்
மறுநிமிடம் காரலுடன் மற்றுமுளார் பற்பலரும்
ஒருபொழுதும் தாமதியா துடனிந்த நாட்டினின்றும்
கரவாது வெளியேறக் கட்டளையை நீட்டியது. 115

ஓரலைக்குத் தப்பியவன் உவகையொடு தலைதூக்க
நூறலைகள் தாக்குமெனின் யாரவனைத் தேற்றுவதாம்;
ஊறிய ரூசுசெய்த உறுதுயரின் மீளுகையில்
காரிடிபோல் வந்துவிட்ட கட்டளையை என்னசொல்ல. 116

கட்டளையை மேற்கொளவோ கையிலொரு காசுமில்லை;
வட்டமதி முகச்சென்னி கண்ணிரண்டின் வழிநீரில்
எட்டுறுதி அத்தனையும் இணைந்துருகிக் கசிகையிலே
மொட்டுவிரிந் தாலனைய குழந்தைமலர் முகம்கண்டான். 117

பாசத்தை வெளிப்படுத்திப் பதைப்பதற்கோ நேரமிலை;
நேசத்தைக் கடமைக்குப் பலியிடல்தான் நிச்சயமாம்;
நீசற்றும் கலங்காதே! நெஞ்சுறுதி வேண்டுமடி!
மாசற்றாய் சின்னாளில் மறுபடியும் கூடிடுவோம். 118

திருமணத்தால் சென்னிக்குக் கிடைத்தசிறு செல்வத்தைச்
சிறியதொரு பெட்டியிலே சேர்த்தொன்றாய் வைத்திருப்பர்;
உரியவர்கள் உதவியென வருவாரேல் உள்ளிருந்து
வரும்சிறிய அப்பெட்டி; தேவைக்கு வழங்கிடுவார். 119

பெட்டிதான் இன்றுளது; பெறுஞ்செல்வம் ஏதுமில்லை;
கொட்டியும் ஆம்பலுமாய்க் கூடஇருப் பாருமில்லை;
ஒட்டிஉற வாடுகின்ற ஒன்றிரண்டு பொன்னகைகள்
வட்டிக் கடைக்காரன் வாயிலுக்கு வந்தனவால். 120

கரவாது - மறைந்தொளியாது, எட்டுறுதி - எட்டப்பட்ட உறுதிகள், கொட்டி, ஆம்பல் - நீர்வாழ் தாவரங்கள், பெறுஞ்செல்வம் - பெறுதற்குரிய செல்வம்

கொள்பொருளின் உதவியினால் பயணத்தை மேற்கொண்டான்;
பல்புகழார் தொன்னகராம் பாரீசில் வதிநாளில்
வல்சியென அறிவுநலம் வாரியுண்ட நினைவோடு
பெல்சியத்தின் தலைநகராம் பிரசல்சைச் சென்றடைந்தான். 121



கொள்பொருள் - அடைமானம் வைத்துக் கொண்டபொருள், பல்புகழார் (பல்+புகழ்+ஆர்) - பல்வகைப் புகழும் நிரம்பிய, வதிநாள் - தங்கிய நாள், வல்சி - உணவு

8. பெல்சியத்தின் தலைநகரில்

தொல்லையெலாம் இனியில்லை; சுதந்த ரத்தின்
தூதுவன்யான் எனஎண்ணிப் பெல்சி யத்தை
ஒல்லையவன் வந்தடைந்தான்; அந்தோ பாவம்
ஒழிவறியாத் துன்புகளும் உடன்இ றங்க
வல்லரசச் செருமனிய அரசாங் கத்தார்
வாய்ப்பனஎல் லாம்செய்து முடித்து விட்டார்;
எல்லையினைத் தாண்டிவிட்டான்; உண்மை; ஆனால்
இன்னல்களைத் தாண்டமுடி யாதி ருந்தான். 122

அதிகார வர்க்கத்தைக் கீழ றுக்க
அடிமைகளைத் தூண்டிவிடும் எழுத்து வன்மை
மதிகாரன் காரல்மார்க் சவனைக் கொஞ்சம்
மடக்கிவையா திருப்பீரேல் உமக்கும் நாளை
எதிரான செயல்களிலே ஈடு பட்டால்
என் செய்வீர்? துரத்துங்கள் நாட்டை விட்டு;
சதிநூறு செய்துசெரு மானி யத்தார்
சங்கடங்கள் பன்னூறு விளைவித் தார்கள். 123

பெல்சியத்தின் குடியுரிமை வேண்டிக் காரல்
பெருமுயற்சி செய்துவிட்டான்; ஆன போதும்
பல்விதத்தும் தடைஎழுப்பித் தாம தத்தின்
பாற்படுத்தி வைத்தார்கள் அரசாங் கத்தார்;
நல்குவரோ குடியுரிமை; அல்லால் என்னை
நாளும்அலைக் கழிப்பாரோ அறிய கில்லேன்;
கல்சிவந்து கனியாகும் என்று பார்த்துக்
காத்திருத்தல் போலவனும் காத்தி ருந்தான். 124

செருமனியக் குடியுரிமை யாள னாகத்
திகழ்வதுதான் சிக்கலுக்கு மூல மென்றால்
ஒருமுகமாய் அவ்வுரிமை துறப்ப தாக
ஓரறிக்கை வெளியிட்டுத் துறந்த போதும்
வருபொழுதில் அரசியலைப் பற்றி ஒன்றும்
வரைவதிலை எனுமுறுதி வாங்கிக் கொண்டே
திருமதியன் காரலங்கு வாழ்தற் கான
சிறப்புரிமை தனையரசு வழங்கிற் றம்மா. 125

ஒல்லை - விரைவாக, ஒழிவறியா - ஒழியாத, துன்பு - துன்பம், கீழறுக்க - சாய்க்க, மதிகாரன் - அறிவுடையோன், வருபொழுதில் - எதிர்காலத்தில், வரைவதிலை - எழுதுவதில்லை

ஆதிக்க சக்தியினை எதிர்த்த பன்னாட்
டரசியலார் நாடுகடந் திங்கே போத
மேதிக்கும் கீழாகப் பெல்சி யத்தார்
மிகையளவு தொல்லைகளைத் தந்த போதும்
சாதிக்க வேண்டுமெனும் உள்ளம் கொண்டோர்
சகித்துக் கொண்டி ருந்தார்கள்; இதனை விட்டால்
போதற்காம் இடம் வேறுஅவ் ஐரோப் பாவில்
பொட்டளவும் இல்லையெனல் தெளிந்த தாலே. 126

பேரளவு செருமனியர் துரத்தப் பட்டுப்
பிரசல்சை வந்தடைய அவருக் கெல்லாம்
காரல்தரும் ஆறுதல்கள் உபச ரிப்பால்
கண்ணிமைகள் நீர்த்துளியால் நன்றிகாட்டும்;
ஒருலகம் ஒருமனிதம் ஆகி வாழும்
உயருல கைத் தடைசெய்யும் தன்ன லத்தின்
கூரலகைப் பிளந்தெறியும் ஆற்றல் மிக்க
கோடரியாய் ஒருநூலைப் படைப்பேன் என்றான். 127

பொருள்வளமும் மிகுசெழிப்பும் ஒருபால் ஓங்கப்
பொழுதெல்லாம் உழைப்பவர்கள் வறுமை என்னும்
இருள்வலைக்குள் கிடந்துழலும் கொடுமை வீங்க
இருநிலைக்கும் இடையிலொரு முரண்கால் கொள்ளும்
பெரியஇடை வெளியொன்று விரிந்து செல்லப்
பெல்சியத்தார் சமுகத்துள் உள்மு ரண்கள்
ஒருவகையாய் இயங்குவதைக் காரல் கண்கள்
உற்றுணர்ந்து கண்டுகொள்ளத் தவற வில்லை. 128

அறிவியல்சார் சமனியத்தை நிறுவிக் காட்டும்
அளவைகளைப் பெல்சியத்துள் கண்டு கொண்டான்;
சிறியவரு வாய்கொண்டே மகிழ்ந்து வாழும்
செயற்கரிய வாழ்க்கையினைச் சென்னி தந்தாள்;
நறியமலர் அனையமகள் லாரா தோன்றி
நலிவுகளைப் புறந்தள்ளப் பாலைபுக்க
ஒருபயணி கோடையிலே இளைப்பா றற்காம்
உயரீந்தின் சோலையந்த வீடா யிற்று. 129

போத - வர, மேதி - எருமை, மிகையளவு - அளவுக்கதிகமாக, பொட்டளவும் - நெற்றியில் வைக்கும்பொட்டின் அளவும், பேரளவு - அதிக அளவு, கூரலகு - கூர்மையான பறவையின் அலகு, கால்கொள்ளல் - தோன்றுதல், அளவைகள் - தருக்க நூலின் விதிகள், லாரா - இரண்டாவது மகள், உயரீந்து - உயர்ந்த ஈச்ச மரம்.

வருந்தினராய் இருப்பாரின் துயர்து டைக்கும்
வாழ்க்கையே வாழ்க்கையெனும் இலக்கில் ஒன்றிப்
பொருந்தினவன், சமனியத்தை வடிவ மைத்துப்
புதுக்கவந்த போராளி, கார லுக்கோர்
அருந்துணைவன், பெரும்புகழன்; ஆய்வு மன்னன்,
அளப்பரிய கொடையாளி எங்கல் சென்பான்
விருந்தினனாய்ப் பிரசல்சை வந்த டைந்தான்;
வேறென்ன அறிவோடை பெருகிற் றங்கே. 130

எங்கல்சு மார்க்சுடனே இணைந்து கூடி
இருக்குங்கால் இங்கிலாந்துத் தொழிலா ளர்தம்
பொங்குதுயர் பற்றியநூல் வரைந்த வீட்மேர்;
புகழ்மிகுசெர் மன்கவிஞன் சார்சு வீர்த்து;
தங்குதடை இல்லாத சொல்ல டுக்கால்
தணல்பரப்பும் பிரிலிகிராத் திவர்க ளோடு
பங்கமிலாப் போராளி வில்லேம் ஓல்பும்
அனுபவத்தைப் பரிமாறி உடனிருந்தார். 131

எண்ணமுதல் வாதத்தை அகத்தே கொண்ட
இளையஎக லியர் மனத்தின் மயக்கை எல்லாம்
திண்ணமுற வெளிக்கொணர்ந்து காட்டி, மேலும்
தெளிவுறுத்த எழுந்த 'புனி தக்கு டும்பம்'
விண்ணுயர்ச்சி என உயர்ந்த அந்த நூலை
விற்றுவரும் ஊதியந்தான் இன்றுகாரல்
உண்ணஉடுத் தற்கெல்லாம் உதவி செய்ய
ஒருவழியாப் பெல்சியத்துள் வாழ்க்கை செல்ல. 132

நாட்டுமக்கள் அரசியலைப் பொருளா தார
நன்மைகளை ஆராய்ந்து பெரிய தோர்நூல்
காட்டாக விளங்கும்வணம் எழுதவேட்கும்
கருத்தினராய் நூற்கடலுள் மூழ்கிப் போனார்;
வேட்டபடி அந்நூல்தான் விளைய வில்லை;
படித்ததெலாம் வீண்தானா என்ன வேண்டா;
பூட்டுகளைத் திறந்துவிட்ட சாவி யைப்போல்
பொதுவுடைமை அறிக்கைக்கோர் துணையா யிற்று. 133

வருந்தினராய் - துன்பமுற்றவராய், காட்டாக - எடுத்துக்காட்டாக, வேட்கும் - விரும்பும், வேட்டபடி - விரும்பியபடி

ஒன்றுபட்ட உணர்வினராய் நண்பர் கூடி
உலகினையே உலுக்குவதாம் நூல்கள் செய்தார்;
வென்றுயர்ந்த மெய்யியலார் 'பாயர் பாகு
விரிவுரைகள்', 'செர்மன்சித் தாந்தம்' மற்றும்
தின்றுவரும் வறுமையின்தத் துவத்தைத் தந்த
திகழ்புருதோன் எழுத்திலுள முரணைச் சுட்டி
ஒன்றலிலாத் 'தத்துவத்தின் வறுமை' என்றே
உயர்நூல்கள் படைத்துலகைக் கலக்கி நின்றார். *134*

உற்பத்திக் கருவியெலாம் சமுதா யத்தின்
உடைமையென மாற்றுவதும், நாட்டில் உள்ள
அற்பத்தின் அற்பமெனும் உடைமை கூட
ஆருக்கும் தனியுரிமை ஆகா தென்றும்
மெய்ப்படுமோர் உழைப்புக்கும், மூளை சார்ந்த
வேலைக்கும் வேறுபா டில்லை என்றும்
பொய்ப்படுமோர் ஒற்றுமையை ஒழித்துக் கட்டிப்
புதுமைமிகும் ஒற்றுமையை வளர்ப்ப தென்றும் *135*

எந்தவொரு வர்க்கமுமே பிறிதொன் றன்மேல்
ஏறிமிதித் தாதிக்கும்செலுத்தா தென்றும்,
இந்தவகை நிகழ்வுகளை எதிர்ப்போர் தங்கட்
கிங்கரசு துணைபோதல் இல்லை என்றும்,
அந்தமிகும் நாட்டுநகர்ப் புறங்க ளூடே
அணுவளவும் பேதமிரா தென்றும், தத்தம்
சொந்தஅகத் தூண்டலினால் உழைப்பர்; வேறு
தூண்டலினால் உழைத்தலிலர் என்று சொல்லும் *136*

மந்திரம்போல் சிலவற்றை எழுதி வைத்தார்;
மாபெரிய செர்மன்சித் தாந்த நூலில்;
புந்தியுடை யாரெல்லாம் சிந்தித் தார்கள்;
புரையுடைய வேறுசிலர் நிந்தித் தார்கள்;
குந்தியிருந் தேயுண்ணும் முதலா ளிக்கோ
வெடிக்கவரும் குண்டெனவே தோன்றும்; வேர்வை
சிந்தியுழைப் பவர்க்கெல்லாம் இந்தச் சேதி
தித்திக்கும்! தித்திக்கும்! தித்திக் கும்மே! *137*

ஒன்றலிலா - பொருத்தமில்லா, அந்தமிகும்- அழகுமிகும், புந்தி - அறிவு,
புரையுடைய - குற்றமுடைய

நடைமுறைக்குக்கொண்டுவராத் தத்து வங்கள்
நன்மைதரல் இல்லையெனத் தெளிந்த தாலே
படைமுறைபோல் கடைப்பிடிக்கும் உழைக்கும் வர்க்கப்
பாட்டாளித் திரளினரின் வாழ்க்கைக் குள்ளே
இடையுருவிச் செலும்வண்ணம் தத்து வத்தை
இயக்கிவிடும் காலத்தை எதிர்பார்த் தோராய்
அடையிருக்கும் கோழியைப்போல் உழைக்கும் வர்க்கம்
அணிதிரளும் நாள்பார்த்துக் காத்தி ருந்தார். *138*

இடைப்பட்ட காலத்தில் ஆறு வாரம்
இங்கிலாந்து சென்றார்கள்; வாழ்க்கைப் போரில்
கடைப்பட்டு நலிந்தோர்கள் அனைவருக்கும்
காப்பான 'உரிமைச்சா சனஇயக்கம்'
தடைப்பட்டு 'நீதிவேண்டு வோர்கள் சங்கம்'
'சகோதரச னநாயகசங் கத்தார்' என்னும்
உடைப்பெடுத்த வெள்ளம்நிகர் அமைப்போ டெல்லாம்
உறவைவளர்த் தெடுத்தவராய்த் திரும்பி வந்தார். *139*

படைமுறைபோல் - இராணுவக்கட்டுபாடுபோல்,
உரிமைச் சாசன இயக்கம் - The Chartist movement
நீதிவேண்டுவோர் சங்கம் - League of the Just



9. பொதுவுடைமைச் சங்கம்

புருசியா செர்மன் எனுமிரு பிரிவாய்ப்
போனஅச் செருமனி நாட்டின்
இருபிரி விருந்தும் அரசியல் வாதி
யானவர் பலரையும் துரத்த
ஒருபுகல் தேடி அலைந்தன ராகி
ஓடியே உய்ந்தவர் பலரும்
வருமிடந் தோறும் நீதியை வேண்டி
வைத்தன ராலொரு சங்கம். 140

குடிபெயர்ந் தோருக் கரசுக ளாலே
குலைவுகள் நேரிடு மாயின்
நெடியவத் துயரை நீக்குவான் முனையும்
நீதியை வேண்டுவோர் சங்கம்;
படிமிசை அமைந்த கிளைபடு சங்கம்
பற்பல வும்தமக் குள்ளே
கொடிபடர்ந் தன்ன உறவினாற் செழித்துக்
குதிர்ந்தன வாயவை வளரும். 141

பெல்சியக் கிளையில் காரலின் சேவை
பெரியதாப் பொலிந்தது கண்டார்;
பல்வித மான கருத்துரு வடித்துப்
பரப்பினன்; இலண்டனில் உள்ளோர்
சொல்விதம் கற்ற காரலின் கருத்திற்
சொக்கினர்; சமனியம் பற்றி
நல்லுரை வடிக்கக் கேட்டனர்; அவன்மா
நாட்டினைக் கூட்டுக என்றான். 142

காரலின் கருத்தை நேர்ந்தன ராகிக்
கடிதினில் இலண்டன்மா நகரில்
பாருள 'நீதி வேண்டுவோர் சங்கம்'
பற்றியோர் யாவரும்கூட
சாருறும் வேறோர் காரணத் தாலே
சங்கமா நாட்டினில் காரல்
வாரலன் ஆக எங்கல்சு வந்தே
வழங்கினான் சமனியச் சாரம். 143

புருசியா- பிருஷ்யா, படிமிசை-பூமியின்மீது, குதிர்ந்தன-முதிர்ந்தன, கருத்துரு-கொள்கைவடிவங்கள், சொல்விதம்கற்ற-சொல்லைப் பயன்படுத்தும் முறையை நன்குகற்ற, நேர்ந்தனர்-உடன்பட்டனர், கடிதினில்- விரைவினில்

(வேறு)

இதுவரையில் நீதியினை வேண்டுவோர்
சங்கமென இருந்த பேரை
பொதுவுடைமைச் சங்கமெனப் பொழுதொன்றில்
மாற்றிவிட்டார்; போதா தென்று
விதிமுறைகள் புதிதாக விளக்கிடவும்
வேண்டுமென விதித்துச் சங்கப்
புதியகுறிக் கோளினையும் பொருத்தமுற
வடிப்பதென உறுதி பூண்டார். *144*

முன்னாளைச் சங்கத்தின் விதிமுறைகள்
அத்தனையும் முடக்கப் பட்டுப்
பின்னாளில் இதன்இயக்கம் மக்களுரி
மைத்தன்மை பிறங்கும் வண்ணம்
எந்நாளும் உறுப்பினரால் தேர்ந்தெடுக்கப்
பட்டவரே இச்சங் கத்தில்
தன்னாட்சி புரிபவராய்த் தானமர
வேண்டுமெனத் தக்க வண்ணம். *145*

ஆக்கமுறு விதிமுறைகள் அத்தனையும்
வடித்தபினர் ஒப்பம் வேண்டிப்
போக்கினரால் கிளைகளுக்குப் புதியவிதி
யைக்கிளைகள் ஆய்ந்து பார்த்தே
ஏற்கவிழைந் தொப்புதலை எதிர்ப்பின்றித்
தந்தபினர், இறுதி செய்ய
ஊக்கமுடன் மீண்டுமொரு மாநாட்டை
ஒழுங்குசெய உறுதி கொண்டார். *146*

ஆங்கிலரின் தலைநகரில் மாநாடு
தொடங்கியது; காரல் அங்கே
வீங்குமொரு மகிழ்ச்சியுடன் நடுவினிலே
வீற்றிருக்க, விதிகள் எல்லாம்
ஓங்கியகை யொலியுடனே ஒப்புதலைப்
பெற்றபினர் 'குறிக்கோள் மட்டும்
பாங்குறவே தெளிவுறுத்தப் படவில்லை
அதைமட்டும் பார்க்க வேண்டும் *147*

வீங்குமொரு - பெரிதாகிவளரும்

என்றுபலர் தம்கருத்தை எடுத்துரைத்த
பின்னாலே எழுந்த காரல்
'நன்று! நன்று! நும்கருத்தே நம்கருத்தும்'
என்றவனாய் 'நாட்டில் உள்ளார்
வென்றவர்கள் சிற்சிலரா வீழ்ந்தவர்கள்
பற்பலரா ஆன தென்ன?
தொன்றுதொட்டு வந்தகதை துலக்குவதாய்
அவ்வறிக்கை துலங்கல் வேண்டும். *148*

எங்கல்சின் உதவியுடன் அவ்வறிக்கை
ஈகுவன்யான்' எனவு ரைக்கப்
பொங்கிவரும் மகிழ்ச்சியுடன் மாநாடு
முடிந்துவிடப் புறப்பட் டார்கள்;
தங்கியுள பிரசல்சைச் சார்ந்தபினர்
கேள்விபதில் தன்மை வாய்ந்த
மங்கலிலா அறிக்கையினை எங்கல்சு
வடித்தவுடன் படித்துப் பார்த்தோன். *149*

'கொள்ளவரும் கொள்கை நெறி விளக்குவதில்
குறைவில்லை; எனினும் நெஞ்சை
அள்ளவிலை யேயதுதான் அடிப்படையில்
குறையாகும்; அதற்குக் கொஞ்சம்
உள்ளெழுமோர் தீக்கனலை உருவாக்க
வேண்டு'மென உரைத்த தோடு
புள்ளெழுந்து வான்பறத்தல் போலியதாம்
மொழிநடையால் புதுக்கித் தந்தான். *150*

காரணமும் காரியமும் நிகழ்வுகளில்
அமைந்துள்ள காட்சி கூறும்
ஏரணநூல் முறைதொடரப் பொருளியலால்
வாழ்வுமுறை இயங்கு மாற்றைப்
பூரணமாய்ப்பெல்சியத்துள் உள்முரணின்
போர்ச்செயலைப் புரிந்து கொண்டோன்
ஆரணம்போல் வரலாற்றின் அடிப்படையில்
அவ்வறிக்கை ஆக்கித் தந்தான். *151*

மங்கலிலா - ஒளி மிகுந்த, புள் - பறவை, ஏரணநூல் - தருக்க நூல், இயங்குமாற்றை - இயங்கும் முறையை, உள்முரண் - சமூகத்தில் நிலவும் முரண்பாடுகள், ஆரணம்போல் - வேதம்போல், போலியதாம் - போன்றதாம்.

10. பொதுவுடைமைக் கட்சி அறிக்கை

உறுதிமொழி கொடுத்தபடி அறிக்கையினை உருவாக்கி
இறுதிவடி வம்கொடுத்தான்; 'இங்கேயோர் புதுப்பூதம்
அறுதிதர வந்துளதால், ஐரோப்பா முழுமைக்கும்;
பெறுதிரொரு புதுவாழ்வு' எனப்பேசித் தொடங்கியதால். 152

தோன்றுசமு தாயத்துள் வர்க்கங்கள் தோன்றியதும்,
ஆன்றதொழி லாளிவர்க்க ஆட்சிமுறை தன்னியல்பும்
ஈன்றபொது உடைமைக்குள் எவைபோலி என்பதுவும்
மூன்றுபெரும் பிரிவுகளாய் அவ்வறிக்கை முழங்கியதால். 153

எத்தனையோ சமுதாயம் இங்கெழுந்து வந்ததுண்டால்
அத்தனையும் தங்களுக்குள் அமைந்தமுரண் பாடுகளால்
கொத்துவதும் குதறுவதும் குழிபறித்துத் தள்ளுவதும்
இத்தனையும் முடிந்தபினர் எஞ்சியதே இச்சமுகம். 154

உரிமையனும் அடிமையனும், உயர்குலனும் இழிகுலனும்
பரியநில உடைமையனும், பண்ணையடி மைப்பிரிவும்
அரியவினைத் திறனலினரும் அஃதில்லாப் பணியினரும்,
இரியஒடுக் கிடுபவரும் ஏற்றொடுங்கி வாழ்பவரும் 155

புளிப்படைந்து போனவராய்ப் புழுக்கமுற நேர்ந்தபினர்
வெளிப்படையா மறைமுகமா வெடித்தெழுந்த போர்முடிவில்
வளிப்பறக்கும் சருகுகளாய் வாழ்வொழிந்த சிலவர்க்கம்;
உளிப்பிறக்கும் மரச்சிலைபோல் உருவாகும் ஒருவர்க்கம் 156

தோன்றுவதும் மோதியபின் தொலைவதுமாய் வர்க்கங்கள்
மாண்டவிதம் வாழ்ந்தவிதம் மலர்ந்தவிதம் இவைஎல்லாம்
நீண்டுசெலும் வரலாற்று நிகழ்வு; முத லாளியத்தால்
ஈண்டிரண்டே வர்க்கமெனல் இன்றுள்ள நிலையாகும். 157

அறுதிதர-முடிவுதர, பெறுதிர்-பெறுவீர், ஆன்ற-நிறைந்த, பரிய-பெரிய, அரியவினைத்திறலினர்-தொழில்நுட்ப அறிவுடையோர், இரிய - அழியுமாறு, புளிப்படைந்து-வெறுப்படைந்து, புழுக்கம் - மனஎரிச்சல், வளி-காற்று, வாழ்வொழிந்த - வாழ்வு ஒழிந்தன, மலர்ந்தவிதம் -வாழ்ந்தவிதம், மாண்டவிதம் என மாற்றிக் கொள்க

உலகமயச் சந்தையினை உருவாக்கி வந்ததெது?
சுளகளவா உலகத்தைச் சுருக்கியதும் எதனாற்றல்?
அலகிலதாம் மனிதகுல ஆற்றல்களை வெளிப்படுத்திப்
பலகலகச் செயல்நிகழப் பண்ணுமுத லாளியந்தான். 158

தொழில்நுட்ப எந்திரங்கள் தொகைபெருகி வரும்போது
வலிமைமிகும் ஆடவர்கள் தேவையில்லை; மாற்றாக
எழில்மகளிர் கூடஅதிற் பணிபுரிவார் எனும் நிலையை
முழுமையுறச் செய்குவதும் முதலாளி வர்க்கந்தான். 159

ஆலைகளின் புதுவரவு; அறிவியலின் புத்தெழுச்சி,
மாலைகளைக் கூடஒளி மண்டிவரும் பகலாக்கல்;
சாலைகளைக் கடல்களிலும் சமைக்கின்ற முன்முயற்சி
பாலைகளில் கூடஒரு பயிர்விளைச்சல்; இவைஎல்லாம். 160

முதலாளி யம்தந்த முன்னேற்றம் தானெனினும்
இதனாலே எழுந்தபயன் எல்லார்க்கும் கிட்டியதா?
மிதவையென முதலாளி மிதக்கின்றான்; பாட்டாளி
புதையுண்டு போகின்றான்; இதுதானே பொல்லாங்கு. 161

பாட்டாளி முதலாளி என்னுமிரு பகுதியரும்
கூட்டாளி போற்சேர்ந்தார்;கொள்ளைமன முதலாளி
காட்டாளி யாய்மாறக் கண்சிவந்த பாட்டாளி
வேட்டாளி யாகிவிட வீழுமுத லாளியமே. 162

தங்கழுத்தைச் சுருக்கவரும் தாம்பை,முத லாளியர்கள்
இங்கெழுந்து வளருவதற் கேற்றவெலாம் செய்துவிட்டார்;
பொங்கிவரும் செல்வவெறிப் புயலிலகப் பட்டுலகம்
எங்குமுள உழைப்பினரை இணைத்தொன்றா வாக்கிவிடும். 163

அலகிலதாம் - எல்லையற்றதாகிய, காட்டாளியாய்- இரக்கமில்லாதவராய், வேட்டாளி-வேட்டைக்காரன், தாம்பை -கயிற்றை

வருந்தியுடல் உழைப்பவர்கள் மட்டுமிலை; மருத்துவர்கள்;
திருந்துமொழிக் கவிவல்லார்; திறமைமிகும் அறிவியலார்,
பெரும்புளுகர் சமயகுரு இவரைஎலாம் கூலிபெறும்
ஒருபிரிவுள் தள்ளியதின் ஒருகேடு வேறுளதோ. 164

பழந்தொழில்கள் நலிந்தொழியப் புதுத்தொழில்கள் வளர, நலம்
இழந்தொழிந்த சிற்றூர்கள் நகரத்தை எதிர்நோக்க,
அழிந்துவரும் வேளாண்நா டாதிக்க நாடுகளைத்
தொழும்படியாம் நிலையாக்கித் தொலைத்ததுதான் வரலாறு. 165

உற்பத்திச் சாதனங்கள் ஒருசிலரின் கையில்வர
அப்பொழுதே உற்பத்தி அளவுபல மடங்காக்கி
விற்பனைக்கு விடுவார்கள்; தேவையளிப் பிவையிடையே
ஒப்பளவு மீறுவதால் ஒடிந்துவிழும் வாணிபந்தான். 166

போட்டி மிகுந்துவர விற்பனையோ பொன்றிவிடும்;
நீட்டி மொழிவதென்ன! நிலத்தில்முத லாளியத்தை
ஓட்டி ஒழித்துவிடும் காலம்அதை உணருங்கள்;
பாட்டி கதையல்ல, பகுத்தாய்ந்த முடிவாகும். 167

எத்தகைய ஆயுதத்தால் நிலவுடைமைச் சமுகத்தைக்
கொத்திக் குதறினவோ முதலாளி யக்குழுக்கள்
அத்தகைய ஆயுதங்கள் ஆயத்த மாகிவந்து
புத்துருவம் பெற்றுளதால்; பொன்றும்முத லாளியமே. 168

கூற்றமெனப் போந்துலகைக் கொன்றமுத லாளியத்தின்
தோற்றமுதல் ஒடுக்கமெலாம் துரிசின்றி யாம்கண்டோம்;
ஏற்றதொரு பாட்டாளி ஆட்சிமுறை இவண்மலர
ஆற்றலர்கள் செய்தற்காம் அரும்பணியைக் காண்குவமே, 169

தேவை அளிப்பு-பொருளியலில் ஒரு விதி, ஒப்பளவு - சமஅளவு, பொன்றிவிடும் - அழிந்துவிடும், பொன்றும்முதலாளியம்- முதலாளியம் அழியும், கூற்றம் என - சாவைப் போல, ஒடுக்கம்- அழிவு, துரிசின்றி- குற்றமின்றி, ஆற்றலர்கள்-பொதுவுடைமையாளர்கள்.

சிறுதொழிலர், விவசாயி, சீர்மிகுந்த பாட்டாளி
வெறுமுடலான் உழைப்பவர்கள், வேறுவழி யற்றவர்கள்,
ஒருகுழுவாத் திரளும்வணம் உருக்கொள்ள வைப்பதற்காம்
பரியசெயல் புரிவதுதான் பொதுவுடைமை யாளர்பணி. 170

தேங்குமுத லாளியத்தைத் திரண்டதொழி லாளிவர்க்கம்
ஓங்குமதன் அடிவேரை உடைத்தெறியும் புரட்சியினால்,
தீங்கறியாப் பாட்டாளி வர்க்கத்தின் வல்லாட்சி
ஈங்குதனிச் சொத்துடைமை இல்லையென ஆக்கிவிடும். 171

மூலதனம் என்பதென்ன? முகஞ்சுளிக்கா திவ்வுலகில்
சாலஉழைப் பாளிவர்க்கம் தருமுழைப்புத் திரட்சியன்றோ?
ஞாலமிசை அத்திரட்சி தனியாளை நண்ணாமல்
கோலமிகு சமுகத்தின் பொதுவாக்கிக் கொளல்வேண்டும். 172

கடந்துசென்ற காலம்நிகழ் காலத்தின் மீதேறிப்
படர்ந்ததெலாம் முதலாளிச் சமுகத்தின் பயனாகும்;
உடைமைபொதுச் சமுகத்தில் நிகழ்காலம் உருத்தெழுந்து
கடந்தகால லப்பொருட்டுக் கடிவாளம் போட்டுவிடும். 173

'தனியாரின் சொத்துடைமை பறிக்காதீர்! தருமமிலை!'
முனிவார்கள் முதலுடையார்;முன்னிருந்த நிலவுடைமை
அணியார்கள் நூற்றுவரின் உடைமையெலாம் ஐயிரண்டு
தனிமுதலா ளியர்கைக்குத் தாவிவந்த தெவ்வாறு? 174

தொண்ணூறு உடைமையர்கள் பதின்மரிடம் தோற்றதனால்
மண்ணுரிமை பறித்தகதை மறந்தாரோ முதலாளர்;
மண்ணுரிமை பறித்த தெலாம் மன்னியதோர் நீதியெனின்
கண்ணறியத் தனியுடைமை கவர்வதுமோர் அறந்தானே! 175

பரியசெயல்-பெரியசெயல், வல்லாட்சி-வலிமையானஆட்சி, சர்வாதிகாரம், முதலாளிச் சமுகத்தில் கடந்தகாலத் திரட்சியாகிய மூலதனம் நிகழ்காலப் பாட்டாளிகளின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. பொதுவுடைமைச் சமுகத்தில் நிகழ்காலப் பாட்டாளி வர்க்கம் கடந்தகாலத் திரட்சியாகிய மூலதனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும். முனிவார்கள்-கோபப்படுவார்கள், பதின்மரிடம் -பத்துப்பேரிடம், முதலாளர் - முதலாளி.

உற்பத்திக் கருவியெலாம் உடைமைபொது ஆமெனவே
விற்புருவப் பெண்மகளும் விலைமகள் போல் பொதுதானோ?
அற்பத்தின் அற்பர்சிலர் அறைவார்கள்; அம்மகளிர்
உற்பத்தி உடைமையலர் உரிமையினார் எனஅறிமின். 176

பொதுவுடைமைச் சமுதாயம் பூத்துவர வேண்டுமெனில்
மதியுடைமை யாளரொடு பாட்டாளி வர்க்கத்தார்
எதுசெய்வ தெனக்கண்டோம்; இவ்வுலகில் சமனியத்தின்
முதுகெலும்பை முறிக்கின்ற போலிகளின் முகம்பார்ப்போம். 177

(வேறு)

பற்பல வாய சமனியச் சரக்கை
விற்பனை செய்யும் அற்பர்கள் பெருகினர்;
நிலக்கிழா ரியத்தை நிலமிசை வீழ்த்தித்
தொலைத்தமுத லாளியம் தொலைக்கும் நாளை
நிலக்கிழா ரியத்தார் நித்தலும் கருதினர்;
முதலாளி யத்தால் முதுகெலும் பொடிந்து
வதைபடும் தொழிலாளி வர்க்கத் தாருக்கு
இரங்குவது போல எழுந்த நிலக்கிழார்
அரங்கினில் ஏற்றினர், 'அற்புதச் சமனியம்'
பாட்டாளி மீதுள பரிவினா லாஇலை
நேற்றைய எதிரியின் கழுத்தை நெரிக்கவே;
சிறுமுத லாளியச் சமனியம் ஒன்றும்
பரபரப் பாகப் பரவிய துண்டு;
நிலவுடைமை யாளரின் எச்சமாய் நின்றும்
வலுமிகும் முதலா ளியத்தின் வாலாய்
ஆட்டம் காட்டியும் அமைந்தது அதுதான்;
உற்பத்தி உறவில் உள்ள முரண்களை,
கற்பிதப் பொருளிய லாளரின் கேட்டை,
தழைக்கும் மூல தனமும் நிலமும்
தொகையாய்ச் சிலர்பால் குவிந்து தொலைவதை,
மிகையுற் பத்தியால் விளைந்த தீங்கினைத்
திறம்படப் பேசினர்; எனினும் தேறிலர்,
செருமனிச் சமனியம் என்றொரு தத்துவம்
ஒருபகுதி மக்களை உலுக்கிய துண்டு;
பிரான்சு நாட்டில் பிறந்து செவிகளை
உராய்ந்து நின்ற ஒருவகைச் சமனியம்
செருமன்மெய் யியலொடு சேர்த்துக் குழைத்துப்
படைத்துத் தந்தனர்; அதுதன் பங்குக்கு

விடைத்துத் திரிந்து இறுதியில் வீழ்ந்தது;
முதலாளிச் சமனியம் என்றோர் முழக்கம்
விதவித மாக விரிக்கப் பட்டது;
முதலாளி முதலாளி யாக இருப்பதே
தொழிலாளி யர்க்குத் துணைபுரி தற்கே!
போராட்டக் குணத்தைப் பொசுக்கிக் கொண்டால்
சீராட்டி அவர்க்குச் சிலபல நன்மைகள்
வழங்குவோம் தொழிலாளி வர்க்கத் திற்கென
முழங்கிய அதுவும் மூச்சை விட்டது;
கற்பனைச் சமனியம் என்றொரு கருத்தும்
விற்பனைக் கிங்கே வெளியிடப் பட்டது;
அடிப்படைத் தடைகளைப் பொடிப்பொடி யாக்கும்
வெடிப்புடைக் கருத்துகள் விளங்கினும் அதுதான்
கோரிக்கை வைத்தே கொள்கைநிறை வேற்றும்
வேடிக்கைச் செயலால் இதுவும் வீழ்ந்தது;
ஆதலின் இங்கே அறிவியற் சமனியம்
காதலின் ஏற்றுக் கைக்கொளத் தக்கதாம்,
பொதுவுடைமை யாளர் என்னும் பொறுப்பினர்
எதுஇனிச் செய்தல்? என்பது தெளிக;
அரசியற் சமுக அடக்கு முறைகளை
உரசவும்,மோதி உடைக்கவும் நடக்கும்
எந்தமுயற் சிக்கும் இணைவாய் இருப்பர்;
மந்த நிலையை மாற்றுவ தற்கு
வன்முறை ஒன்றே வழியெனின் அதனையும்
நன்முறை என்றே நயந்து கொள்ளுவர்;
எங்கணும் உலகில் இவர்தம் எழுச்சி
பொங்கும் கடலாய்ப் புரண்டு வருகிறது.
நீளும் இந்த நெடும்படை காண்தொறும்
ஆளும் வர்க்கம் அஞ்சிநடுங் கட்டும்;
வெடித்தெழும் போரில் எதைநாம் இழப்போம்?
அடிமைச் சங்கிலி ஆம்! அதைத் தவிர;
வென்றால் நமக்கு வெகுமதி யாவது
நன்றாத் திருந்திய நானில மல்லவோ?
கலகத்தின் பின்தான் நியாயம் கைவரும்;
உலகத் தோழரே! ஒன்றுகூ டுமினே! 178

பதின்மரிடம் - பத்துப்பேரிடம், முதலாளர் - முதலாளி, நிலக்கிழாரியம் - நிலப்பிரபுத்துவம், நித்தலும் - நாள்தோறும், பரிவு - இரக்கம், எச்சமாய் - மிச்சமாய், மிகையுற்பத்தி - அதிக உற்பத்தி, விடைத்து - செருக்கோடு, அடிப்படைத் தடைகள் - முதலாளியம் எழுப்பும் சில தடைகளை, மந்தநிலை - சமுகத்தின் வளர்ச்சியற்ற தேக்க நிலை, நன்றாத் திருந்திய - நன்கு திருத்தியமைக்கப்பட்ட

11. புரட்சி அலையில் ஐரோப்பா

ஆட்சி யாளரின் தன்முனைப் பாணவம்,
அத்து மீறிய பற்பல தீங்குகள்,
நீட்சி கொள்ளவே மக்களின் நெஞ்சினுள்
நெருப்பெ ழுந்தது; நீள்துயர்ச் சூழலின்
மீட்சி எய்துதற் காவன செய்தனர்,
மின்ன லின்னிகர் வெந்திறல் நாயகர்;
வீழ்ச்சிப் பாயிரம் பாடிட லாயினர்;
வீறு கொண்டெழும் போர்முர சார்த்தது. 179

பிரெஞ்சு நாட்டினில் பொங்கிய மக்களால்
பேர்ந்து வீழ்ந்தனன் லூயிபிலிப்பவன்;
மறஞ்சு மந்தவம் மக்களோ பாரிசை
மக்க ளின்'குடி யாட்சி'யா மாற்றினர்;
திறமி குந்தவர் ஆத்திரி யாவினில்
திடுமெ னப்பபெரும் ஆர்ப்பொடு மோதினர்;
உரங்கு லைந்தவப் போர்ப்படை மக்களின்
ஓர ணித்திரள் கண்டுபின் வாங்கின. 180

கலைம லிந்துள வான்புகழ்ப் பெர்லினில்
கலக மூண்டதும் ஆட்சியர் நெஞ்சுரம்
நிலைகு லைந்தது; வேறுள பக்கமும்
நிமிர்ந்தெ ழுந்தது மக்களின் பேரணி;
தலைமை யாகிய ஆங்கிலர் எல்லையைத்
தாண்டி யப்புறம் உருசிய மண்வரை
குலைந டுங்கஐ ரோப்பிய நாட்டினுள்
குமுறி வீசிய டித்தது பேரலை. 181

எங்கும் ஓங்கிய இத்தகு பேரலை
இனிய பெல்சிய மண்ணையும் தாக்கவே
அங்கி ருந்தஅம் மன்னனோ 'ஊதியம்
அளித்தி ரேல்முடி நீங்குவென் யான்'என
மங்க லில்லதோர் வஞ்சனை பேசினான்;
மக்க ளும்மதை வாயென நம்பினர்;
இங்கி திவ்வணம் செல்கையில் மன்னனோ
இயலும் வாயெலாம் போர்ப்படை கூட்டினான். 182

நீட்சிகொள்ளவே-அளவுகடந்துசெல்லவே, மின்னலின் னிகர் வெந்திறல் நாயகர்-மின்னல்போல் விரைந்து செயல்படும் தலைவர்கள்,மறஞ்சுமந்த - வீரம்நிறைந்த, ஆத்திரியா-ஆஸ்திரியா, உரம்-வலிமை, வாயென-வாய்மையென, வாயெலாம்-இடமெலாம்

மக்க ளோர்புறம் ஆயுதச் சேர்ப்பினை
மறைந்து செய்தனர்; இத்தகு சூழலில்
அக்க ணத்திலே தந்தையின் சொத்தினால்
அடைந்த ஓர்தொகை தன்னையும் போரிடத்
தக்க ஆயுதம் வாங்குவதற் காமெனத்
தந்து வந்தனன் காரலும்; மன்னனோ
மிக்க தன்வலி மேலெனக் கண்டதும்
மிரட்ட லாயின கூறுதல்மேயினான். 183

போது மானதாம் ஆயுத மின்மையும்
போரி டற்குள தன்மைகள் இன்மையும்
மோது வேளையில் மக்களின் தோல்வியாய்
முன்னெ ழுந்தது; வென்றவம் மன்னனோ
ஈது நேர்ந்திடக் காரணி யானவர்
யாவ ரோஎனச் சல்லடை யிட்டனன்;
ஏது கண்டவர் காரலைச் சுட்டினர்;
இன்ன லாயிரம் சூழ்ந்ததே யக்கணம். 184

தன்னை நாடுக டத்தலாம் என்பதைத்
'தான றிந்தனன் காரல்; அவ் வேளையில்
முன்ன ரேசிலர்க் கூட்டின னாயொரு
முடிவெ டுத்திட முன்னிய போதிலே
வன்மு றைத்திறன் காவலர் நாற்புறம்
வந்து சூழ்ந்தனர்; ஆங்குள ஆவணம்
இன்ன வாயின கையகப் பட்டதால்
இவனும் வெஞ்சிறைக் காட்பட நேர்ந்தனன். 185

என்னி கழ்ந்தது காரலுக் கிப்பொழு
தெங்கு வைத்துளர்? என்பன காணுறச்
சென்னி காவலர் தம்நிலை யத்தினைச்
சென்ற டைந்தனள்; ஆண்டுள காவலர்
முன்னி வந்ததென்? நிற்கென சொந்தமா?
மொழிக? என்றவட் காயவி னாவலை
பின்னி வைத்தனர்; ஆயினும் சென்னியோ
பிழைப்ப டாதுவாய் பேசிமு டித்தனள். 186

தன்வலி - தன்வலிமை,ஏதுகண்டவர்-உண்மைக் காரணத்தைக் கண்டவர்கள், ஆவணம்-எழுத்துவடிவில் உள்ளவை, முன்னிவந்ததென்-நீ கருதி வந்தது என்ன?, நிற்கென - நின்+கு+என்ன.

வாயி ருந்தொரு சேதியும் தந்திலள்;
வருத்தம் மீதுற ஆத்திரம் கொண்டனர்;
பாயி ருட்சிறை ஒன்றினுள் தள்ளியே
படுந்து யர்க்கடல் மூழ்குறச் செய்தனர்;
நாயி னும்மிழி வானப ரத்தையர்
நாற்பு றத்தினும் சூழ்ந்திட வைத்தனர்;
தாயெ னும்மொரு மேம்படு சொற்பொருள்
தாமு டைப்பொருள் ஆமெனும் சென்னியை. 187

பெற்றெ டுத்ததம் பிள்ளைகள் ஓர்புறம்;
பிரிய மிக்கதன் நாயகன் வேறிடம்;
இற்று வீழ்ந்திடும் நெஞ்சொடு சென்னியோ
இருட்சி றைக்குளே; கூறுதல் யாரிடம்?
மற்று மவ்விரா முற்றிலும் நெஞ்சமோ
மக்கள் தாமுறை வீடுமற் றிச்சிறை
சுற்றிச் சுற்றியே வந்ததால் கண்களில்
தூக்க மென்பதை நீக்கினள் ஆயினள். 188

காலை வந்ததும் நீதியின் வாயிலில்
காவ லர்அவட் கொண்டுநி றுத்தினர்;
வேலை யற்றவள்; நாடிலி என்பதா
வியப்பு றுத்துமோர் குற்றமும் சாற்றினர்;
பாலை மத்தியில் சோலையும் உண்டரோ!
பாத கக்கொடும் பாதகர் பொய்யினைச்
சால வேபுறம் தள்ளிய நீதியர்
சாருங் குற்றமி லாதவள் என்றனர். 189

சாடு போர்க்குண மிக்கவர் தாக்குதல்
தாங்க லின்றியே வீழ்ந்தபின் பாரிசில்
கூடு மக்களின் ஆட்சிய மைந்ததும்
கொள்கை தந்தவக் காரலை முன்னினர்;
'நீடு சால்புகழ் மக்களின் ஆட்சியர்
நின்னை அன்புடன் வம்'மென வேண்டினர்;
'ஏடு கொள்புகழ் காரல்நீ எம்நகர்க்
கெழுந்த ருண்மினோ' என்றுரை போக்கினர். 190

பாயிருட் சிறை-இருள் பரவிய சிறை, நீதியின்வாயிலில்- நீதிமன்ற வாயிலில், நாடிலி-நாடற்றவள், நீடுசால்புகழ்-நீண்டபெரும் புகழ், வம்மென-வருக என.

துரத்தி யோட்டிய பாரிசே இற்றைநாள்
தொடரு மன்புடன் எம்மொடு வந்துநீ
இருத்தி என்றெனை வேண்டிநிற் கின்றதே!
இந்த மாறுதல் எவ்வணம் வந்தது?
பருத்தி யாடையாக் காய்த்தது கண்டிலேம்
பாரி சிங்ஙனம் மாறுதல் உற்றதே!
அருத்தி மீதுறப் பாரிசுக் கேகிடும்
அந்த நாளினை நோக்கியி ருந்தனன். 191

காரல் சென்னியர் வெஞ்சிறைப் பட்டதும்
கண்ட னக்குரல் எங்குமெ ழுந்ததால்;
நேரல் இச்செயல் காட்டுவி லங்கினை
நினைவு றுத்துமால் என்றன தாளிகை;
ஊரில் எங்கணும் போர்க்குரல் தோன்றவே
ஒடுக்க முற்றது காவலர் ஆணவம்;
சாரல் தூறலா மாறிட லாமெனும்
சமயம் காரலை யேவிடு வித்தனர். 192

'இன்னு மோர்பொழு தெல்லையுள் பெல்சியத்
தெல்லை நீங்குக' என்னுமோர் ஆணையை
முன்ன ரேயர சாங்கம் விடுத்தது
முடிந்து மேலுமோர் நாள்கடந் துள்ளதால்;
என்ன செய்திடல்? அவ்வர சாங்கமே
இனிய சென்னியைக் காரலை மக்களை
நன்னர் ஆங்கொரு வண்டியி லேற்றினர்,
நாட்டி னெல்லையைத் தாண்டியே விட்டனர். 193

இருத்தி-இருப்பாயாக, அருத்தி மீதுற- ஆசைமேலெழ, நேரல் - நேர்மையல்லாத, தாளிகை- பத்திரிகை, ஒடுக்கம் -சுருக்கம், சாரல்-நுண்துளி, தூறல்-பெருந்துளி

12. மகிழ்ச்சியில் துள்ளிய பாரிசு

'அன்னை நாட்டினுக் காக மரிப்பதே
அழகி னுக்கழ காகுமால்' என்றொரு
பண்ணி றுத்திய பாடலைப் பாடியே
பரவ சத்தராய் ஆடினர் பாரிசில்,
மன்னன் ஓடினன்; மக்களின் கைகளில்
மாறி லத்தர சாங்கம மைந்ததால்;
இன்ன வாறெலாம் பாடியும் ஆடியும்
இருக்கும் வேளையில் காரலும் வந்தனன். 194

அன்று கண்டதிப் பாரிசா? துன்பினால்
அழுது தேய்ந்தவர்க் காண்கிலேன்; மன்னனை
வென்று கொண்டதால் ஊற்றெனப் பொங்கிய
வெள்ள ஓகையில் தத்தளிக் கின்றதோ?
இன்று தோன்றிய இப்பெரும் வேட்கையை
என்று மேதணி யாதிவண் காப்பமேல்
ஒன்று கூறுவென்; மேலவர் ஆணவம்
உலக மெங்கணும் வீழ்வுறு மென்றனன். 195

ஆன்ற பாரிசு வாழ்செரு மானியர்
அணிதி ரண்டனர்; ஆயுத மேந்தியே
தோன்று செர்மனிக் குள்ளொர்பு ரட்சியைத்
தூவு வோமெனச் சொல்லிடக் காரலோ
போன்ற ஓர்செயல் செய்திடல் தீமையாம்;
புரட்சி என்பது தன்னுளே காலுற
ஈன்றெ டுப்பதாம்; இன்னபு ரட்சியை
இழுத்து ளேவிடல் ஏலுமோ என்றனன். 196

(வேறு)

செருமனியும் ஆத்திரிய நாட்டரசும் கூடி
ஒரு சிறிதும் புரட்சிமனப் பான்மையரும் பாமல்
கருவறுக்கும் வல்லரசுச் சக்திகளுக் கெல்லாம்
அருகுதுணை யாயிருந்தே ஆனவெலாம் செய்ய. 197

பண்ணிறுத்திய- இசைகூட்டப்பட்ட, வெள்ள ஓகையில் - மகிழ்ச்சி வெள்ளத்தில், போன்ற ஓர்செயல் - சரியானதல்லாத செயல், காலுற - முனைத்து வர, ஏலுமோ - இயலுமோ, அருகுதுணை - பக்கத்துணை.

இந்தஇரு நாட்டினுளும் ஒருபுரட்சி மூண்டு
வந்துவிடு மாயின்அவை தந்தமைக்காப்பற்ற
முந்துவதே அல்லாமல் மற்றுமுள நாட்டிற்
கெந்தவிதம் உதவிடுதல்? ஆதலினால் இன்னே. 198

செருமனிக்குள் யாம்புகுந்தே ஆன்வெலாம் செய்தல்
கருமமென எண்ணியவன்; பெருமைமிகு கோலோன்
திருநகரை வந்தணுகிப் பொதுவுடைமைச் சங்கத்
தொருகிளையைச் சீர்படுத்தி உரியபணி தொட்டான். 199

அந்திரியே கோட்சாக்கென் றொருதலைவற் கூடிப்
பந்தியுறு தொழிலாளர் வந்தணுகு மாறு
உந்துமுணர் வூட்டினனா ஓரமைப்பின் கீழே
முந்திவரு மாறுசெயும் மந்திரம்நேர் ஆனான். 200

உதயமுறும் பொதுவுடைமை ஓங்குறவே வேண்டின்
நிதியமென உதவுவது பத்திரிகை ஒன்றே!
மதியுறலே இதுசமயம் தொழிலாளர்த் தேவை;
புதியரெயின் லாந்தெனுமோர் புதியஇதழ் கண்டான். 201

தத்துவங்கள் பற்றியெலாம் மெத்தஎழு தானாய்
மொத்துறுவோர் தந்துயரம் எத்தகைய தென்றும்
இத்தரையில் மீட்சியுற என்னசெயல் வேண்டும்?
அத்தனையும் வரிசையுறச் சித்திரமாச் செய்தான். 202

எழுதுவதும்'அடிமைகளாய் இன்னலுறு வார்கள்
அழுதழுது புலம்புவதை அப்பொழுதே நீக்கிப்
பழுதொழிய வழியறிமின்' என்றுரையும் செய்தான்;
இழுதுருகல் எனஉருகித் தொழிலுறுவார் நிற்க. 203

கருமம் - கடமை, பந்தியுறு-வரிசையுறு, மந்திரம்-மந்திரவாதி, மதியுறலே- அறிவுபெறுதலே, மொத்துறுவோர்-துன்பங்களால் அலைக்கப்படுவோர், பழுதொழிய-கேடு அகல, இழுது உருகல்-வெண்ணெய் உருகல்

பத்திரிகைக் கட்டுரையால் பற்றிவிட்ட தீயோ
எத்திசையும் படருவதைக் கண்டஅர சாங்கம்
மெத்தமருள் கொண்டுவிட இராணுவச் சட்டத்தைப்
பொத்தெனவே கொண்டுவரச் சித்தமதிர்ந் தாரால். 204

அடக்குமுறை ஓங்கியது; பத்திரிகை எல்லாம்
முடக்கமுற நேர்ந்துவிட, அரசியலும் கூடக்
கடக்கமுடி யாததடைக் கற்களினால் வீழத்
தொடக்கமிது வாமாயின் முடிவுநிலை என்னோ? 205

ஒருகிழமை மட்டிலுமே அடக்குமுறைச் சட்டம்
விறுவிறென ஏறியது; மக்களின்எ திர்ப்பால்
சுருதிகுலை பாடலென அறுதியினை எய்தப்
பருதியெனக் காரல்புகழ் ஒளியுமிழக் கண்டார். 206

வரிகொடுப்ப தில்லையெனும் பெருகுணர்ச்சி யாலே
ஒருமுடிவை மக்களெலாம் எடுத்துவிடக் காரல்
சரி இதுதான் செய்கவெனக் காரணங்கள் காட்டி
விரிவுரைகள் எழுதியதால் அரசுசினம் கொண்டு. 207

சட்டமுறை கெட்டுவிடச் செய்யுமொரு நோக்கில்
கட்டுரைகள் எழுதியதாக் குற்றமவற் சார்த்தி
இட்டவனை நீதிபதி முன்னிலையில் ஏற்ற
மட்டிலதாம் மக்கள்திரள் முற்றுகையிட் டாரால். 208

வேறுவழி ஒன்றறியாக் காவலர்கள் அஞ்சி
காரலினை மக்கள்முனம் கொண்டுவந்து காட்ட
ஆறுதலாச் சிலமொழிந்து கலைந்துசெலச் சொன்னான்;
கூறுமொழி கேட்டபினர் யாவருங்க லைந்தார். 209

மெத்தமருள் - மிகவும் மருண்டு, ஒருகிழமை - ஒருவாரம், பருதி - சூரியன், மட்டிலதாம் - அளவிலதாம்.

மக்களுக்கு மத்தியிலே இத்துணைச்செல் வாக்கா
மிக்கதொரு பகையிவன்போல் எத்திறத்தும் இல்லை;
தக்கபடி இவன்வளர்ச்சி தடுக்கவிலை என்றால்
சிக்கல்மிகும் என்றரசு சிந்தனையில் மூழ்க. 210

படைத்துறையர் சிலர்வந்து 'எம்மவரைப் பற்றி
கடைத்தரமா எழுதியுளீர்! ஆதலினால் உம்மை
அடித்துநொறுக் கிடுவமென, மேற்சட்டைப் பையுள்
புடைத்திருக்கும் துமுக்கியினால் புலனொடுங்கிப் போனார். 211

தூண்டியொரு புரட்சியினை ஈண்டெடுத்தா னென்றே
மீண்டுமொரு வழக்கிடவே 'அதிகார வர்க்கம்
வேண்டியொரு புரட்சியின்பால் மக்கள்செலும்வண்ணம்
ஆண்டிருப்ப ராயின்அஃ தவர்பிழைஎம் பிழையோ? 212

இக்கருத்தைப் பல்வகையில் தக்கபல சான்று
தொக்கிருக்கக் கூறியதும் 'கூர்த்தமதி யாலே
சிக்கலெலாம் விடுவித்தாய், மிக்க நன்றி! என்றே
தக்கதிலை எனவழக்கைத் தள்ளுபடி செய்தார். 213

வழக்கினிலே வென்றுவிட்டான்,சிறியதொகை என்னும்
உழக்கினுளே எத்தனைநாள் பத்திரிகை யோட்டல்?
இழப்புகளோ ஏறுமுகம்; இறங்குமுகம் வருவாய்;
குழப்பமிக வேயவனும்செய்தவறி கில்லான். 214

பத்திரிகை மீதொருகை வைத்திட்லா மென்றால்
எத்திசையும் அச்செயலுக் கெதிர்ப்புவரும்; ஆக
வித்தகனைப் புருசியத்தை விட்டகலச் செய்தால்
எத்தகைய துன்புமிலை என்பதர செண்ணம். 215

வேண்டியொரு - விரும்பியொரு, தொக்கிருக்க - பலவகையாகத் தொகுத்தெடுத்து , வித்கனை - காரல்மார்க்சை, துமுக்கி - துப்பாக்கி

குடியுரிமை இல்லவர்க்கிங் கிடமுமிலை என்றே
அடிமடியைப் பற்றியிழுத் துலுக்கியது; காரல்
விடிவுபிறி தில்லையெனக் கண்டதனால் நாட்டின்
கடிதகன்று போவதுதான் நல்லதெனக் கொண்டான். 216

விடைபெற்றுக் கொள்ளுகிறோம்; கடைசிமுறை யன்று;
தடையகலும் மீண்டுமிவண் தலைநிமிர்ந்து வருவோம்;
படைக்கருவிக் கழிவதிலை போர்மறவன் ஆன்மா!
இடையிலொரு சிறுதடைதான்; பொறுத்தருள்வீர்! என்றே 217

சிவப்புநிற மையெழுத்தில் அச்சடித்த செய்தி
தவப்பெரிய எழுச்சியினைத் தந்துவிட மக்கள்
உவப்பவராய் ஒருவெள்ளிக் கோரிதழை வாங்கிச்
சுவர்ப்புறத்தே படம்போலத் தொங்கலிட வைத்தார். 218

அச்சகத்தை மற்றுமுள தட்டுமுட்டுச் சாமான்
மிச்சமிலா தத்தனையும் விற்றுமுத லாக்கிப்
பத்திரிகைக் குள்ளகடன் அத்தனையும் தீர்த்தான்;
எச்சமுறு சிறுதொகையோ டந்நகரை நீத்தான். 219

குடும்பமின்று சிறியதிலை; ஐவரென ஆனோம்
இடும்பைகளோ ஒருநூறா இருநூறாச் சூழும்
படும்பெரிய அவதிகளை வெல்லும்வழி யாதோ?
தொடும்நினைவு தொடர்ந்துவரப் பாரிசைப்போய்ச் சேர்ந்தான். 220

குடியுரிமை இல்லவர் - காரல், பிரசல்சில் குடியுரிமை கேட்டுப் புருகியக் குடியுரிமையைத் துறந்துவிட்டான், கடிதகன்று - விரைவாக அகன்று, தவப்பெரிய - மிகப்பெரிய, ஐவரென ஆனோம் - காரல், சென்னி, குழந்தைகள் இருவர், எலன் டெமூது, இடும்பைகள் - துன்பங்கள்.

13. பாரிசு வீழ்ந்தது

பாரிசில் மக்க ளாட்சி;
எஞ்சிய பகுதி எல்லாம்
வாரிசாய் மன்ன ராட்சி
வழங்குநாள்; படையி ரண்டும்
மூரிமை கொண்டு மோதக்
களங்களில்முடியாட் சிக்கே
பாரிய வெற்றி சேரப்
புரட்சியோ பதுங்கித் தேய. 221

புரட்சியின் தொடக்க நாளில்
பூத்தவர் முகங்கள் எல்லாம்
வரட்சியின் பிடியில் இன்று
வைகுதல் ஆயிற் றம்ம!
வெருட்படும் மனத்தி னோராய்
மக்கள்தாம் விளங்கும் நாளில்
திருப்பெரும் காரல் வந்தான்
வியப்பினால் திகைத்துப் போனான். 222

குடியர சான நாட்டுக்
கெதிராகப் பிரான்சின் கோன்மை
படையினை நடத்தா தென்றே
அரசியற் சட்டம் பன்னும்
தடையினை மதியா னாகிச்
சார்பிலா உரோமின் மீது
கடையனாம் லூயி மன்னன்
போர்க்கெனக் களம்அ மைத்தான். 223

இடப்புற அணியார் எல்லாம்
எதிர்க்குரல் எழுப்பி நிற்க
திடமுற மவுண்டன் கட்சி,
போரெனும் தீமை நீக்க
உடன்பட விலையேல் ஆட்சி
ஒழித்திடப் போர்தொ டுப்போம்;
அடஞ்செயல் விடுக! மன்னர்,
என்னவே ஆர்ப்ப ரித்தார். 224

மூரிமை-வலிமை, பாரியவெற்றி-பெரியவெற்றி, புரட்சியோ - புரட்சிப் படைகளோ, பூத்தவர்-மகிழ்ந்தவர், வைகுதல்- தங்குதல், வெருட்படும்-அச்சப்படும், கோன்மை - ஆட்சி, பன்னும் - சொல்லும், சார்பிலா - முடியாட்சிச் சார்பு இல்லாத, மவுண்டன் கட்சி- பிரான்சில் இருந்த ஒரு அரசியல்கட்சி, அடஞ்செயல் - அடாத செயல்

மறைமுகச் சமனி யத்தார்
'மக்களே கிளர்ந்தெ ழுந்து
முறையிலா அரசை வீழ்த்த
முன்னுமின்! மவுண்டன் கட்சி
நிறைஞரே! புரட்சி வெல்ல
நீர்துணை புரிமின்' என்றே
குறையிரந் தார்கள்; மவுண்டன்
கட்சியோ குழப்பம் செய்து. 225

'இப்பொழு தமைதி யாவோர்
ஆர்ப்பாட்டம் இயற்று கின்றோம்;
அப்புறம் நிலைமைக் கேற்ப
ஆவன செய்வோம்' என்றே
செப்படி வித்தை செய்தார்;
திரண்டவெண் ணெய்க்கு டத்தை
குப்புறக் கவிழ்த்தாற் போலக்
குடியாட்சிக் கனவொ ழித்தார். 226

ஆர்ப்பாட்டம் செய்தற் கென்றே
அணியணி யாத்தி ரண்டு
போர்ப்பாட்டு வாய ராகிப்
புறப்பட்டார் மவுண்டன் ஆள்கள்;
நேர்ப்படும் பேர வைமுன்
நெருங்கையில் இராணு வத்தார்
கூர்ப்படும் ஆயு தத்தால்
தாக்கியே கொல்ல லானார். 227

தறிகெட்ட மவுண்டன் கட்சித்
தொண்டர்கள் தலைவர் எல்லாம்
பொறியுற்றாற் போலச் சிக்கிப்
புலம்புறும் வேளை ஆர்த்து
'குறிகெட்ட ஆட்சி வீழ்த்தப்
படைக்கலம் கொண்மின்' என்றே
அறிவிக்கை செய்தார்; கேட்க
ஆள்கள்தாம் எவரு மில்லை. 228

மறைமுகச் சமனியத்தார் - தலைமுறைவாகிச் செயல்படும் சோசலிஸ்டுகள், முன்னுமின் - கருதுங்கள், நிறைஞரே-தலைவர்களே, குறையிரந்தார்கள்- தாழ்ந்துகேட்டுக்கொண்டார்கள், நேர்ப்படும்-எதிர்ப்படும், பேரவைமுன் - பேரவையின் முன்னிடத்தை, தறிகெட்ட - சிதறியோடிய, பொறியுற்றாற் போல-பொறிக்குள்ளே சிக்கினாற்போல, படைக்கலம் கொண்மின் - ஆயுதம் ஏந்துங்கள்

பாட்டாளி வர்க்கத் தோடு
பருவத்தே மவுண்டன் கட்சி
கூட்டாளி சேர்ந்தி ருந்தால்
குடியாட்சி மலர்ந்தி ருக்கும்;
பாட்டாளி வர்க்கத் திற்காம்
வல்லாண்மைப் பட்ட தான
ஈட்டாட்சி கிடைத்தி ருக்கும்;
எல்லாமே வீணா யிற்று. 229

பாரிசு நகர மெங்கும்
நெருக்கடி நிலைமைப் பாட்டைப்
பேரிகை முழக்கி ஆட்சி
பேசிற்று; மக்கள் தொண்டுச்
சீரியர் வாழ்க்கை எல்லாம்
சிதைவுற, அதிகா ரத்துப்
பூரியர் கையில் நாடு
குரங்கின்கைப் பூப்போல் ஆக. 230

மன்னனின் ஆதிக் கத்தை
மாற்றுமின் என்று பல்கால்
சொன்னவன் காரல்; இன்னோற்
சும்மாவா விட்டு வைக்கும்?
தன்னைஎப் பொழுதும் ஆட்சி
சிறையுனுள் தள்ளக் கூடும்
என்னுமோர் கருத்து நெஞ்சுள்
இடறிட அவனி ருந்தான். 231

கோலோனில் இருந்து சென்னி
குழந்தைக ளோடு வந்து
நாலாறு நாள்கள் கூட
நடந்திட வில்லை; கையில்
ஏலாத நிலைமை; தேவைக்
கென்செய்வ தென்று வாடித்
தோலாத நட்பின் மிக்கோன்
இலாசலே தம்பாற் சென்று. 232

ஈட்டாட்சி - ஈடான ஆட்சி, பூரியர் - கீழோர், இன்னோன் - இத்தகையவனை, ஏலாத - இயலாத, தோலாத நட்பு - தளராத நட்பு

தன்னிலை விளக்கிக் கூறி
'கடன்கொஞ்சம் தருக' என்றான்
இன்னவா றிவன்உ ரைக்க
இலாசலே மனம்நெ கிழ்ந்து
பின்னரும் பொருள்நா டாது
பெரியதோர் நிதிதி ரட்டி
அன்னவற் களிக்க எண்ணி
ஆவன எல்லாம் செய்ய. 233

இச்செயல் காதில் வீழக்
காரலோ எரிச்சல் கொண்டான்;
'அச்சுறச் செய்வ தான
வறுமையால் அழிந்த போதும்
பிச்சைநான் எடுக்க மாட்டேன்;
பேதைமை விடுக' என்றான்;
மெச்சுறும் குணத்திற் கெல்லாம்
மேல்வரிச் சட்ட மானான். 234

தோள்முற்றும் குழந்தைச் செல்வச்
சுடர்முகம் முத்தி முத்தி
ஆள்முற்றும் துன்பை எல்லாம்
அவன்மாற்ற முனையும் காலை
தேள்கொட்டத் துடிது டித்துச்
செயலறி யாத நேரம்
வாள்வெட்டிச் சாய்த்தல் போல
வந்ததோர் அரசின் ஆணை. 235

'இன்னுமோர் நாளைக் குள்ளே
இந்நாட்டி னீங்க வேண்டும்;'
என்னவே கண்டி ருந்தார்
எத்தனை முறைதான் ஓடல்?
முன்னரும் பிரான்சு கோலோன்
பெல்சியம் முதலாம் நாட்டின்
பன்முறை துரத்தப் பட்டான்;
பழங்கதை தொடர்ந்த தம்மா. 236

அச்சுற - அச்சம் கொள்ள, பேதைமை விடுக - நிதி திரட்டும் அறியாமையை விடுக, மேல்வரிச் சட்டம் - மேலான எடுத்துக்காட்டு, முத்தி முத்தி - முத்தம் தந்து முத்தம் தந்து, ஆள்முற்றும் - தன் ஆளுமையை முற்றுகையிடும்

நிறைசூலி யான ஜென்னி;
மூச்சினை நெருக்கும் சூழல்;
பிறைநிலா வளர்ச்சி போலப்
பிறங்கிடும் குழந்தைச் செல்வம்;
அறைவெளிக் காசும் இல்லா
அவலம்; ஆம் உருக்கைப் போன்ற
திறனாளி என்ற போதும்
திக்குமுக் காடிப் போனான். 237

ஜென்னிக்கும் குழந்தை கட்கும்
மேலும்சின் னாள்கள் தங்கப்
பண்ணிய ஏற்பாட் டுக்குப்
பணிந்ததால் அரசும்; கண்ணில்
முன்னிற்கும் துளிகள் சிந்தக்
குழந்தைக்கு முத்தம் ஈந்து
பன்னரும் இலண்டன் நோக்கிப்
பயணத்தைத் தொடங்கி னானால். 238

அறைவெளிக்காசும் - அரை வெள்ளிக்காசும்.

14. இலண்டனில் மார்க்சு

காரலைத் தொடர்ந்து பின்னொரு கிழமை
கடந்தபின் ஜென்னியும் வந்தாள்;
ஏருறும் மார்க்சின் இன்னொரு பாதி
எனத்தகும் எங்கல்சும் வந்தான்;
ஓரிடம் இலண்டன் சேரிடம் ஆனார்
ஒன்றலால் மாறுதல் இல்லை;
பாரிடம் பெரிதால் ஆரிடர் களைவோம்;
பார்க்கலாம் என்றவர் இருந்தார். 239

மாநகர் இலண்டன் வாழ்நிலை மிகவும்
மாற்றமுற் றிருந்ததைக் கண்டார்;
ஆனபல் தொழிலில் ஈடுபட்டு ழைத்தோர்
அமைப்பெலாம் சிதறியே கிடந்த;
ஏனவர்க் கிந்த நிலையெனக் கேள்வி
எழுப்பவும் வலிமையற் றிருந்தார்;
வானெலாம் நடுங்க இங்குமோர் புரட்சி
வருமெனக் கனவுகண் டிருந்தார். 240

வேற்றுநாட் டிருந்து தஞ்சமென் றடைந்து
வேலையொன் றின்மையால் வருந்திக்
காற்றையே உணவாக் கொண்டுவாழ் கின்றோர்
கண்ணினீர் துடைத் திடற் காக
ஏற்றதோர் அமைப்பை ஆக்கினன் காரல்
எங்கணும் பொருளினைத் திரட்டிப்
போற்றுறப் பிரித்தே அன்னவர்க் கீயும்
பொதுப்பணி தலையெனக் கொண்டான். 241

மற்றவர் துயரைப் போக்கியே பெற்ற
மகிழ்ச்சியால் தன்குடும் பத்துள்
உற்றதோர் வறுமைத் துயரினை மறந்தான்;
உத்தமர்க் கிதுகுணம் போலும்;
சுற்றிலும் இருந்த பொதுவுடை மைச்சங்
கங்களோ சோர்ந்திட இலண்டன்
பெற்றதோர் சங்கம் மட்டுமே வளர்ச்சிப்
பேற்றினைக் காரலால் எய்த. 242

ஒருகிழமை - ஒருவாரம், ஏருறும் - அழகிய, களைவோம் - நீக்குவோம், ஆன - வளர்ந்த, கிடந்த - கிடந்தன, தலைஎன - தலையாய பணி என

பல்வகைத் தொழிலா ளர்க்கெலாம் ஞானம்
பயிற்றினால், தோன்றுமோர் புரட்சி
வெல்வகைக் கான காலமொன்றிங்கே
விளைகையில் உதவிடும் என்றே
சொல்வலன் காரல் எண்ணினன்; ஆனால்
தொழிலரின் எண்ணமோ இன்று
கொள்வதற் குரிய இலாபமொன் றையே
குறிக்கொளும் தன்மையா யிருக்க. 243

கரையினை நோக்கி இழுத்திடும் எலியாய்
காரல்தன் செயலினைத் தொடர்ந்தான்;
இரைபெறற் காக ஆற்றினுள் தவளை
இழுத்தல்போல் தொழிலரோ இருந்தார்;
விரைவினில் பேதம் இருதிறத் துள்ளும்
வேர்விடத் தொடங்கவே சங்கம்
சரிவினை நோக்கிப் புறப்படக் கண்டும்
சமரசம் கண்டிட விரும்பான். 244

போர்க்குணம் மிக்க இயல்பினன் எனவே
புன்தொழி லாளரின் மீது
மார்க்சும் எங்கல்சும் தங்களின் கருத்தை
வற்புறுத் தினர்; எம தெண்ணம்
ஏற்குமேல் இருக்க; இல்லையேல் அகல்க;
என்றதி காரமாய் இசைத்தார்;
நீர்க்குமிழ் ஒன்றிங் குடைவது போலே
உடைந்ததால் நிலைத்தவச் சங்கம். 245

உடைந்தது சங்கம்; உறுப்பினர் பலரும்
ஒருவர்பின் ஒருவராச் சென்றும்
தொடர்ந்தனன் அதனை; அரசியல் மற்றும்
பொருளியல் காரணி தொடர்பா
நடைமுறை மாற்றம் நிகழ்தலைப் பற்றி
நாடறி அறிஞர்கள் நடுவே
தடைவிடை யாகப் பொழிவுகள் நிகழ்த்தத்
தலைமிசைக் கொண்டனர் அறிஞர். 246

ஞானம் - அரசியல் அறிவு, தொழிலர் - தொழிலாளர், புன்தொழிலாளர் - போதிய அறிவிலாத் தொழிலாளர்.

மானுடம் தருக்கம் நீள்வர லாறு
மற்றுள பொருளர சாதி
வானுறும் வளர்ச்சி அடைந்ததெவ் வாறென்
றியங்கியல் வழிமுறைத் தேற
ஆனபன் னூறு நூற்கடல் தேடி
அருங்குறிப் பனைத்தையும் திரட்ட
மாநகர் இலண்டன் நூலக மொன்றை
வாழிட மாக்கினன் காரல். 247

காலையில் நுழைந்தே இரவினில் திரும்பும்
கதைதொடர் கதையென ஆக
நூலகர் வந்து வாயிலைப் பூட்டும்
நொடிவரை படிப்பது மானான்;
வேலையுள் அமிழ்ந்து முத்தினைத் தேடும்
வித்தகன் போலவே கருத்து
மாலையைத் தொடுக்க உதவிடும் பூக்கள்
மன்னிய குறிப்பொடு மீள்வான். 248

தாயினை யொத்த நண்பனெங் கல்சு
தன்னிடம் ஒருமுறை சொன்னான்;
வாயிலார்க் கென்றே நாளெலாம் உழைத்தோம்,
மறந்தன ராநமைப் பிரிந்தார்
ஏயதே செய்தார்; இல்லையேல் இனிநாம்
இருவரும் இணைந்துமேற் கொள்வ
தாயஇப் பணியை எப்படி முடித்தல்?
தக்கதே செய்தனர் நமக்கு. 249

தொடங்கிய சங்கம் அனைத்திலும் இருந்து
தொடர்பினை அறுத்தனன் ஆகி
கடக்கரும் நூலா ராய்ச்சியுள் மூழ்கிக்
களித்தனன்; உலகினர் வாயை
அடக்கிய மூல தனமெனும் நூலின்
அடிப்படைச் செய்திகள் யாவும்
சுடச்சுடத் தொகுத்த தின்றுதான் என்றால்
வேறென சொல்வதற் குளதோ! 250

மானுடம் - மானிடவியல், பொருளரசாதி - பொருள் + அரசு + ஆதி, பொருளியல் அரசியல் முதலாக, வேலையுள் - கடலினுள், ஏயதே - பொருத்தமானதையே, ஆயஇப்பணியை - ஆகிய இப்பணியை, கடக்கரும் - கடத்தற்கரிய

நம்புதற் குரிய வெய்டிமேர் என்னும்
நண்பருக் கெழுதிய மடலில்
'அம்புவி இதனில் பல்வகை வர்க்கம்
அமைந்தன பற்றியோ, அவைதாம்
தம்முளே முரணிப் போரிட லான
தன்மையைப் பற்றியோ கூறல்
எம்பணி அன்றால்; இவையெலாம் பற்றி
எண்ணிலார் எழுதியுள் ளாரால்? 251

'இருந்திடும் வர்க்கம் உற்பத்திக் காக
இணைதல் ஓர் காலகட் டத்தே;
பெருந்திரள் வர்க்கப் போர்முடி வதனில்
பீடுபாட் டாளியர் வர்க்கம்
அருஞ்சரு வாதி காரமாய் வளர்தல்,
அச்சரு வாதிகா ரத்தால்
இருந்திடும் வர்க்கம் ஒழித்திடல்; வர்க்கம்
இல்லதோர் சமுகமாய் ஆக்கல்' 252

'இன்னவை தாமே எதிர்வருங் காலத்
தியங்கியல் முறைப்படி நடக்கும்
முன்னிய ஆய்வின் முடிவில்யான் கண்ட
முடி'வென அவன்மொழிந் துளனால்;
பன்னரும் இந்தப் படிமுறை வளர்ச்சிப்
பாதையில் தொடர்ந்தன னாகி
நன்னரம் மூல தனமெனும் நூலின்
நடுவமை கருத்தென வைத்தான். 253

பெருநகர் இலண்டன் அல்லவா? காரல்
வறுமையும் பெரியதா வளர்ந்து
திருகிட அவனோ திகைத்தனன்; சென்னி
தெளிவுறு பொறுமையள் எனினும்
வறுமையைப் பணத்தால் துரத்தலாம், பொறுமை
வறுமையைத் துரத்துமோ நாளும்
சிறுமைகள் வந்து பெருகுதல் கண்டு
செத்தனன் நாள்தொறும் காரல். 254

முன்னிய- கருதிச் செய்த, நன்னரம் - நன்னர் + அம், நன்னர் - நன்கு

ஆய்வுகள் தொடர வேண்டுமேல் வறுமை
அகற்றுதல் முதற்பணி என்றே
தாய்மன எங்கல் சோர்பணிக் கேகித்
தருகுவென் உதவிஎன் றனனால்;
ஓய்விலா னாகி உழைத்திடும் காரல்
ஒருபெரும் ஆய்வினுள் மூழ்க
வாய்மை எங்கல்சோ பணிபுரிந் திடமான்
செட்டரை வந்தடைந் தனனால். 255

நூல்களை எழுதிக் கட்டுரை வரைந்து
நோக்கிலா ராகியே குதிப்போர்
வால்களை நறுக்கி வாய்த்திறத் தாலே
வளரறி வாளரை ஈர்த்தான்;
ஆல்விழு தாகித் தாங்கிட எங்கல்
சமைந்தனன்; ஆயினும் வறுமை
கால்களான் மிதித்துத் துவைத்ததே; இந்தக்
கவிதையில் எப்படிச் சொல்ல! 256

நோக்கிலாராகியே - குறிக்கோள் இல்லாதவராகி, மான்செட்டர் - மான்செஸ்டர் நகரம்

15. வறுமைப் போராட்டம்

படிப்பதுவும் குறிப்புகளைத் தொகுத்தெ டுத்துப்
பகுத்தவற்றை வகைப்படுத்தி வைத்த லோடு
வெடிப்புறுதல் போலஎழும் நாட்டின் சிக்கல்
விளக்கமுற எழுதியதை அமெரிக் காவின்
துடிப்புமிகும் நியுயார்க்குத் திரிபூன் ஏட்டில்
தொடர்ந்தெழுதி வரலானான்; இதன்பொ ருட்டு
வடித்தஒரு கட்டுரைக்கா ஒருபொன் வீதம்
வழங்கிவர இவன்துயரம் கொஞ்சம் வற்ற. 257

வேறுபடும் கோணத்தில் அலசிப் பார்க்கும்
வித்தகத்தால் வாசகர்கள் தொகையோ நாளும்
ஏறுமுகம் ஆகிவரக் கட்டு ரைக்கா
இரண்டுபவுன் தரலானார்; துயர மின்றி
ஆறுதலாய் வாழ்க்கைநிதம் நடந்து செல்ல
ஐரோப்பாக் கண்டத்து நிகழ்வை எல்லாம்
கூறுபடுத் தெழுதுவதில் மார்க்சைப் போலக்
கூருடையார் இல்லையெனப் பேரெ டுத்தான். 258

இப்படியே தொடர்ந்திருந்தால் சிக்கல் இல்லை;
இன்னலின்றி அவன்வாழ்வு சென்றிருக்கும்;
தப்படியாய் அவ்விதழின் ஆட்சி யாளர்
தடம்மாற லானார்கள்; ஆய்வெ ழுத்தின்
ஒப்பருமை கருதியஅன் பளிப்பா இன்றி
உவப்பருமை கருதியதா இருக்கக் கண்டு
வெப்பினனாய் வெறுப்புற்றான்; இதழி னாரோ
வேண்டாவென் றேசிலநாள் விலக்க லானார். 259

பிள்ளைகளோ நால்வருளர் எலன்டெ மூது
பெரியவர்கள் இருவரொடும் எழுவ ரானார்;
உள்ளுறையும் பாம்புடனே வாழ்தல்கூடும்;
ஒருநாளும் வறுமையுடன் வாழ்தல்ஆமோ?
விள்ளமுடி யாதபணத் தேவை யோடு
வியாதிகளின் படையெடுப்பும் சேர்ந்து கொள்ள
அள்ளலிலே பாரவண்டி அழுந்தல் போல
அழுந்தியதே அவன்வாழ்க்கை துன்பம்! துன்பம். 260

வெடிப்புறுதல் போல் - திடீரென்று, நியுயார்க்கு திரிபூன்- நியூயார்க் டிரிப்யூன், கூருடையார் - நுணுக்கம் உடையார், தப்படியாய்- தவறான முறையில், ஒப்பருமை - கட்டுரையை ஒப்பிட்டு அதன் அருமையை உணர்தல், உவப்பருமை கருதியதா - தன் மகிழ்ச்சியின் அளவைக் கருதியதாக, வெப்பினனா - கோபங்கொண்டவனாக, அள்ளலிலே - சேற்றிலே

எங்கல்சு தருகின்ற தொகையே யன்றி,
இதரவரு வாயேதும் இல்லா தாகத்
தங்குதடை இல்லாத வறுமை யாட்சி
தலைவிரித் தாடியதால்; எழுது தற்கோ
அங்கெழுது தாளில்லை; தாளி ருந்தால்
அதையனுப்ப அஞ்சலகத் தலையி ருக்கா
தெங்கும்நிறை வாகியவன் இல்ல மெல்லாம்
இருந்ததென்ன? 'இல்லாமை' மட்டு மேதான். 261

குப்பாயம் காற்சட்டை இவைகள் கூடக்
கொஞ்சநாள் அடைமானச் சிறைக்குச் சென்று
தப்பாமல் ஒருநாளைப் பசியைப் போக்கும்;
தானணிந்து கொள்ளவே றாடையின்றி
அப்பாலே வெளிச்செல்ல முடியா னாகி
அறைக்குள்ளே சிறையிருந்த நாள்கள் உண்டால்;
எப்பாலும் இருந்தவர்கள் 'வழக்குப் போட்டே
என்செய்கின் றோம்! பார்!' என் றலைக்க ழித்தார். 262

கடன்வாங்கப் பலவிடத்தும் அலைதல் ஒன்றே
கருமமென ஆயிற்றால்; நெஞ்சி னுள்ளே
திடன்மூழ்கிக் கொண்டிருந்தால் ஆய்வு நோக்கம்
செம்மையுற நடைபெறுமா? இந்த நாளில்
படர்தீர்க்க வந்தவன்போல் மகன்பி றந்தான்
பாசமிகு தன்தந்தை நினைவைப் போற்ற
மடல்வாழைக் குருத்தனைய மைந்த னுக்கு
மறவாமல் 'என்றிகு'எனப் பேரும் இட்டான். 263

பிள்ளைமுகம் பார்த்துக்கொண் டேயி ருந்தால்
பிரச்சனைகள் தீர்ந்திடுமா? நாளும் நாளும்
வெள்ளமென வருந்துயரம் பாதை மாறி
விலகித்தான் போய்விடுமா? குடியி ருந்து
கொள்ளவந்த வீட்டுரிமைப் பெண்ம ணிக்குக்
கொடுக்கவேண் டியதான பாக்கிக் காக
உள்ளபொருள் அத்தனையும் தூக்கிச் செல்ல
ஒருகூட்டம் ஆர்ப்பாட்டம் செய்த தோர்நாள் 264

குப்பாயம் - மேல்கோட்டு. கருமம் என-பணியென. திடன் - உறுதி. படர் - துன்பம்

இடிமுழக்கம் போலவர்கள் கூச்சல் போட
இதைக்கண்ட ஒருநண்பர் சிராம்என் பார்தான்
'நொடிப்பொழுதில் பணம்திரட்டி வருவேன்' என்று
நுவன்றவராய் ஒருகுதிரை வண்டி யேறக்
கடிவாளம் பிடித்தவுடன் குதிரை பாய்ந்து
கட்டறுத் தோடிவிடக் கீழே வீழ்ந்தார்;
அடிபட்ட உடம்பெல்லாம் குருதி பொங்க
அவரைமருத் துவரிடத்துக் கூட்டிச் சென்றான். 265

கெஞ்சுதல்கள் கூத்தாடல் இவைகள் எல்லாம்
கீழ்மனத்தர் முன்னர்எடு படவே யில்லை;
மிஞ்சுமொழி பேசினராய்ப் பொருளை எல்லாம்
மேலெடுத்துக் கொண்டுவர முயன்ற போது
கொஞ்சமுள்ள பகற்பொழுதும் மறைந்து செல்லக்
கூரிருளில் பிறர்பொருளைக் கொண்டு செல்லல்
அஞ்சவரு குற்றமெனல் சட்டம் அங்கே
ஆதலினால் அன்றுதப்பிப் பிழைக்க லானார். 266

என்றாலும் மறுநாளில் பணம்பு ரட்டி
எப்படியோ அக்கடனைத் தீர்த்து விட்டான்;
நின்றார்க்கும் உலகத்தின் துன்பை எல்லாம்
நீக்கவழி சொன்னஅந்தக் குற்றத் திற்கோ
ஒன்றாகத் துன்பமெலாம் திரண்டு வந்தே
ஒழிக்கவெனத் தாக்கினவோ? ஒருநாட் போது
சென்றாலே அதுபெரிய வெற்றிபோலச்
சிந்தையெலாம் மகிழ்ச்சிகொள நேர்ந்த தம்மா! 267

பின்முதுகில் கொடியவலி இருந்த தாலே
பிள்ளைக்குப் பால்கொடுக்க முடியாச் சென்னி
இன்னொருபெண் வழியாகப் பால ருத்த
எண்ணிடினும் வறுமையினால் இயல வில்லை;
தன்வலியைப் பொறுத்தவளாய்ப் பாலை ஊட்டும்
தறுவாயில் அக்குழந்தைக் கிசிவு தோன்ற
முன்பல்லால் கடித்துவிடக் குழந்தை வாயோ
முன்னொழுகும் இரத்தத்தால் சிவந்த தம்மா! 268

நுவன்றவராய் - சொல்லியவராய். மிஞ்சுமொழி-தரக்குறைவான சொற்கள். மேலே - பிறகு. கூரிருளில்- மிக்க இருளில். நின்றார்க்கும்உலகத்தின் - உலகத்தில் நின்று ஆரவாரம் செய்யும் துன்பங்களை எல்லாம். பாலருத்த - பாலை ஊட்ட

இங்குமவர் நிலைத்திருக்க முடிய வில்லை;
இன்னுமொரு வீட்டிற்குக் குடிபெ யர்ந்தார்;
தங்குதடை இல்லாமல் தொற்று நோய்கள்
தனியாட்சி நடத்துகின்ற சோகோப் பேட்டை
அங்கிருந்த போதவர்கள் பட்ட தெல்லாம்
ஆர்படுவார்; ஆறாண்டுக் காலம் அங்கே
பொங்குவதும் புழுங்கவது மாயி ருந்தார்
பூப்பதுவும் பொலிவதுவும் காணா ராக. *269*

வறுமையொரு பக்கத்தில் இடிக்கும்; நோயின்
வாய்ப்பற்கள் மறுபக்கம் கடிக்கும்; சூழும்
சிறுமைகளின் வரிசைவந்து மோதும்; பூத்துச்
சிரிக்கும்பூக் குழந்தைமுகம் மயக்கும்; நெஞ்சக்
குறுமைகொளும் பகைவந்து கொத்தும்; சென்னி
குணமென்னும் மருந்தவனைக் காக்கும்; இந்த
இருமைகளின் இடையிலவன் ஊச லாட
இருந்திருந்து நகர்ந்தவன் வாழ்க்கை அம்மா! *270*

இத்தனைக்கு மத்தியிலும் கிடைத்த நேரம்
எள்ளளவே என்றாலும் நூல கத்துப்
புத்தகத்துள் மூழ்குவதும், குறிப்பெ டுத்துப்
பொருத்தமிது தானாவென் றறிந்து கொள்ளப்
பத்துமுறை பத்துவழி எண்ணிப் பார்த்துப்
பதிவுசெய்து கொள்ளுவதும் செய்தான் என்றால்
சித்தத்தைத் தன்வசத்தே வைத்துக் கொள்ளத்
தெரிந்தஒரு ஞானியிவன் போலார் சொல்வீர். *271*

சோகோப்பேட்டை - இலண்டனில் உள்ள வசதியற்ற மக்கள் வாழும் ஒரு பகுதி. இருமை - துன்பம், இன்பம் என்னும் இரண்டு தன்மை.

16. சோகோப் பேட்டையில் ஒரு சோகம்

எல்லையிலாக் கடிய உழைப் பீரநிலத்
துறைவாழ்க்கை இவற்றி னோடு
நல்லவகை உணவின்மை, நடுக்குறுத்தும்
பலகவலை என்றால் நோயின்
தொல்லையிலா திருந்திடுமா? நுரையீரல்
தொற்றியநோய் துளக்கு றுத்த
சொல்லமுடி யாததுயர் சூழ்ந்துவரக்
கண்டவனும் சோர லானான். *272*

வருநோயை மருந்தாலே விரட்டியதா
ஒருநாளும் வரலா றில்லை;
பெருமனத்தோ டந்நோய்தான் வருத்தியது
போதுமெனப் பெயர்ந்தால் உண்டு.
திருநாளாய் அவர்மதித்த நாளெந்நாள்
தெரிவீரா? நோயே இல்லா
ஒருநாள்தான். அத்தகைய திருநாளை
ஒருநாளும் கண்ட தில்லை. *273*

மருந்துக்குக் காசில்லை; மருத்துவர்க்குத்
தருதற்கும் மடியில் இல்லை;
தெரிந்தமருத் துவர்பாலே செல்லவண்டி
தேவையதைச் செலுத்து வோற்குத்
தரும்பணமும் கையிலில்லை; தன்கையில்
உளதெல்லாம் 'வறுமை' ஒன்றே;
மருந்துக்கு வறுமையினை மாற்றிக்கொள்
மருத்துவர்கள் மண்மேல் இல்லை. *274*

இத்தகைய சூழலிலே இளையமகள்
பிரான்சிக்கா மருந்தொன் றின்றிக்
கொத்துமலர் கிடப்பதுபோல் மார்ச்சளியின்
கொடுமையினால் மூச்சு முட்டிச்
செத்துவிட்டாள்; சவஅடக்கம் செய்யவழி
என்னவெனச் சிந்தித் தாராய்
மத்துழலும் தயிரானார்; மழைபொழியும்
விழியானார்; மயங்க லானார். *275*

துளக்குறுத்த - வருத்தஞ்செய்ய, மருந்துக்கு - மருந்துவாங்க, பிரான்சிக்கா - பிரான்சிஸ்கா.

'தொட்டிலிலே கிடத்தத்தான் வறுமையினால்
தோதில்லை; சவம்அ டுக்கும்
பெட்டியினை வாங்குதற்கும் வறுமையெனைப்
பிசைகிறதே' என்று காரல்
முட்டிவரும் விழிநீரை முகம்துடைத்துப்
பொருமுகையில் பிரெஞ்சு நண்பன்
சட்டெனவே இரண்டுபவுன் தந்ததனால்
பிரான்சிக்கா சவம்போ யிற்று. 276

தந்தைபெயர் தாங்குமகன் ஓராண்டு
வரைவாழ்ந்தான்; தணியா வெப்பால்
அந்திமத்தைச் சென்றடைந்தான்; அதன்பின்னர்ச்
சென்னிகரு உயிர்க்குங் காலை
வந்துபிறந் ததுகூட அப்பொழுதே
வாழ்க்கையினை முடித்துக் கொள்ள
இந்தவிதம் ஆறாண்டு வாழ்க்கையிலே
மூன்றுபிள்ளை இழந்து விட்டார். 277

வறுமைக்கு வறுமையினை வழங்கிவிட
வழிகண்ட காரல் வாழ்க்கை
வறுமைக்கே இலக்காகி வற்றியதை
என்சொல்ல! மனிதப் பண்பில்
வறுமைக்கே உறவான மனிதர்களின்
பேராசை மிக்க வாழ்க்கை
வறுமைக்கிவ் வுலகமிசை வாழ்க்கையினைத்
தருவதுமோர் வஞ்சம் அன்றோ! 278

'தப்பாமல் பற்றிடுவோம்' என்றுவரும்
கடன்காரர் தம்மைக் கண்டால்
'அப்பாவீட் டினில்இல்லை. அவசரமாய்
ஒருவர்வந் தழைத்துப்போனர்;
எப்பொழுது வருவேனென் றிசைத்திடவும்
இல்லை' எனப் பொய்யைத் தாமே
செப்புகின்ற குழந்தைகளின் திறமையினைக்
கண்டுமனம் திகைத்துப் போனான். 279

தணியாவெப்பால் - குறையாத காய்ச்சல் நோயால், அந்திமத்தை - சாவை, கருஉயிர்க்குங்காலை - பிள்ளை பெறும்போது, வற்றியதை - தேய்ந்ததை, பற்றிடுவோம் - பிடித்திடுவோம்.

பிள்ளைகளின் பொய்ம்மொழியால் பிரச்சனைசற்
றொதுங்கியது பேறே என்னும்
குள்ளமனம் அவற்கில்லை;கூறுகின்ற
மெய்ம்மொழிகள் கேட்டுக் கேட்டு
வெள்ளமென மகிழ்ச்சியுற வேண்டிய நான்
பொய்ம்மொழியை விரும்பிக் கேட்கும்
கள்ளனென ஆனேனே' எனக்கசிந்து
கண்வழியக் கவலை கொண்டான். 280

'சூழ்நிலைதான் மனிதனுக்குச் சொல்லரிய
அறிவுநலம் துலங்கச் செய்யும்;
சூழ்நிலைதான் அன்புமுதல் பண்பீறா
விழுமியங்கள் துளிர்க்கச் செய்யும்
சூழ்நிலைதான் பொய்களவு வஞ்சனைகள்
போன்றனவும் சுரக்கச் செய்யும்;
சூழ்நிலையின் கைதியடா மனிதகுலம்'
என்றமொழி தொல்லோர் ஆணை. 281

இன்னலிலே துடித்தவர்கள்; ஏதிலியாய்
வந்தவர்கள்; இவர்கட் கெல்லாம்
முன்னணியில் நின்றவனா உதவிகளால்
முற்றுவித்து முடிந்த மட்டும்
அன்னவரின் வாழ்க்கையிலே அவலங்கள்
துடைத்தானே! அந்தோ! அந்தோ!
பின்னமுறும் அவன்வாழக்கைப் பேரவலம்
துடைக்கஒரு பேரும் காணோம். 282

கட்டுரைகள் எழுதிவரும் காசுகளைச்
சேகரித்தும், உழைப்புக் காகப்
பெற்றுவரும் ஊதியத்தில் பெரும்பகுதி
சேமித்தும், காரல் மார்க்சின்
கொட்டுகின்ற வறுமையினைக் குறைத்துவிட
எங்கல்சு குறிக்கொண் டானாச்
சற்றவர்கள் வறுமையினால் சாவாமல்
உயிர்த்தெழுந்த சரிதம் பெற்றார். 283

அவற்கில்லை - அவன்+கு+இல்லை, தொல்லோர் ஆணை - முன்னோர்களின் கட்டளை, ஏதிலியாய் - அகதியாய், பின்னமுறும் - சிக்கலுறும்

எண்ணரிய துயரங்கள் இணையிணையாய்
வந்தாலும் அவற்றை எல்லாம்
சென்னிஇதழ் தாண்டிவரும் செவ்வியதீஞ்
சொல்லொன்றால், சிரிப்பைச் சிந்திப்
பண்ணொழுக மிழற்றிவரும் பத்தரைப்பொன்
குழந்தைகளின் பரிசம் ஒன்றால்
விண்ணகத்தின் அப்பாற்போய் வீழுவணம்
எற்றிவிடும் வீரம் மிக்கான். 284

'இன்னுமொரு வாழ்க்கையுனக் கெய்திடுமேல்
எவ்வாழ்க்கை விரும்பி ஏற்பாய்
பன்னு'கென அவன்மொழிந்தான்; 'ஏழையர்கள்
படுந்துயரம் போக்க இன்று
துன்னுகின்ற துயர்வாழ்வே தொடர்கவென
வேண்டிடுவேன்; ஆனால் கேட்பீர்!
என்னநிலை வந்தாலும் பெண்ணொருத்தி
தனைமணக்க இசையேன்' என்றான். 285

தன்மனையாள் பிள்ளைகள்மேல் தாங்கமுடி
யாவெறுப்பா? இல்லை! இல்லை!
பொன்மனையும் தன்மகவும் வறுமையினால்
பொசுங்கியதைப் பார்த்துப் பார்த்துக்
கன்மனத்த னாயிருந்த காட்சியெலாம்
கண்ணில்எழக் கருணை மிக்கு
இன்னமொழி சொன்னதலால் இரக்கமின்றிச்
சொல்லியதா எண்ண வேண்டா. 286

பன்னுக - சொல்க, துன்னுகின்ற - நெருங்குகின்ற, பொன்மனையும் - பொன்போன்ற மனையாளும், கன்மனத்தன் - கல்போன்ற மனத்தினை உடையவனாகி, இன்னமொழி - இத்தகைய சொல்லை

17. துன்பங்கள் தொடர்கின்றன

காய்வதுவும் துளிர்ப்பதுமாய்க் காட்சிதரும் ஒருசெடிபோல்
சாய்வதுவும் எழுவதுமாய்த் தடுமாறிக்கொண்டிருந்தான்;
தேய்வதுவும் வளர்வதுவும் தீராத நோயானால்
ஓய்வதுவும் உறங்குவதும் ஒருபோதும் ஏலாதே. 287

நெடியபுகழ் இதழான நியுயார்க்குத் திரிபூனின்
முடிவுகளில் சிலமாற்றம் முகிழ்த்தனால் புதியதொரு
விடியலினை அவன்கண்டான்; வாரத்திற் கிரண்டுமுறை
தொடர்ந்தெழுதப் பணித்தார்கள்; துயரங்கள் ஓடினவே. 288

தினத்தொல்லை யாக்கிளம்பித் திகைப்புறுத்தும் தொல்லைகட்குப்
பணத்தொல்லை காரணமாம்; என்றதொரு பனிவிலக
இனித்தொல்லை இல்லையென இருக்கின்ற மகிழ்ச்சியின்மேல்
மனத்தெல்லை தாண்டியதோர் மகிழ்ச்சியொன்று பூத்ததுவே 289

கருவுற்ற சென்னிக்குக் கீழ்கடலின் கதிர்போல
ஒருபிள்ளை பிறந்துவர உவப்பிற்கோர் எல்லையுண்டோ?
மருவற்ற அம்மகளுக் கெலியனார் மார்க்சென்று
திருமுற்றும் பெயரிட்டுத் திளைத்தார்கள் இன்பத்தில். 290

இன்பங்கள் அடுக்கிவரல் இவ்வுலக இயல்பிலையே
துன்பமொன்றா? இல்லையிலை;துளக்குமொரு பேரிடிதான்
என்புநடுக் குற்றொழிய இதயத்தை நொறுக்கியது;
அன்புமகன் எட்காரை அநியாய மாயிழந்தார். 291

குடும்பத்தார் பரம்பரையாக் கொடுவந்த நோயான
அடுந்தன்மை மிக்குடைய அடிவயிற்றில் ஈளைகட்டல்
இடும்பரிசாய்ச் சிறுகுழந்தை எட்கார்மேல் காதல்கொள
படும்பாடு யார்படுவார்? பசுங்குருத்துப் பட்டானே! 292

மனத்தெல்லை - மனத்தின் எல்லையை, திருமுற்றும் - அழகு நிரம்பிய, துளக்குமொரு - பிளக்குமொரு, என்பு - எலும்பு, அடுந்தன்மை - கொல்லுந்தன்மை, ஈளை - கோழை

எட்டு வயதுடையான்; எட்டாத கூரறிவன்;
மொட்டு முகமுடையான்; மூரல்இளந் தாமரையான்;
தொட்ட அளவினிலே பெற்றோர் துயரமெலாம்
கெட்டுத் தொலையும்வணம் கீழறுக்கும் தீண்டலினான். 293

காரலைப்போல் படிப்பினிலே கரையில்லாக் காதலினான்;
சேரவரும் காரல்குணச் சிறப்பெல்லாம் பெற்றமக்கள்
யாரெவரோ எனவினவின் எட்காரே அவனாமென்
றூரவரே சொல்லுவணம் உயர்ந்தவனை இழந்தாரே! 294

ஓராண்டில் ஈராண்டில் ஒழிந்தவர்போல் போயிருந்தால்
பேராறாய்த் துன்பவெள்ளம் பெருகிவர மாட்டாதே!
நீராரும் விழியினராய் நினைவாரும் நெஞ்சினராய்
வேரோடே மரஞ்சாயும் விதம்போலே அவரானார். 295

'என்தலையில் தீப்பற்றி எரிகிறதே; இதயத்தில்
செங்குருதி வழிகிறதே; என்செய்வேன்! என்செய்வேன்!
பெண்மக்கள் சென்னியிவர் பேதலிப்பார் என்பதனால்
நன்கமைதி காத்தவனா நடித்திருந்தேன்' என்கின்றான். 296

வில்லியம் லீப்னெட்டு, விடுதலிலாப் பேரன்பர்
சொல்லரிய துணையாக மார்க்சுக்குத் துலங்கியவர்;
நல்லினியன் தன்மரண நாள்நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக்
கல்லினையும் உருக்குவணம் கழறுவதைக் கேளுங்கள். 297

'பார்த்தவிழி வாங்காமல் பையன்முகம் பார்த்தபடி
ஆர்த்தலின்றி வருமருவி ஆயினவே சென்னிகண்கள்;
கோத்தெடுத்த முத்தாரம் நூலறுந்து கொட்டுதல்போல்
சீர்த்தபணி யாட்டிஎலன் கண்ணீரைச் சிந்துகிறாள்' 298

தீண்டலினான் - தொடுகின்றவன், நீராரும் - கண்ணீர் நிரம்பிய, நினைவாரும் - நினைவுகள் நிரம்பிய, நல்லினியன் - எட்கார், கழறுவதை - கூறுவதை, ஆர்த்தலின்றி - ஆரவாரமில்லாமல்.

'ஆறுகவே நின்துயரம்' என்றாறு தல்கூறின்
சீறுவதும் சினப்பதுமாய்ச் சிந்தைவசம் இழந்துநிலை
மீறுவதும் மிரளுவதும், மென்குரலில் விம்முவதும்
வீறுதளர் காரல்படும் வேதனையோ சொல்லரிதால். 299

மூத்தமகள் இளையமகள் முன்வருதல் கண்டசென்னி
சேர்த்தவரை அணைத்தபடி மெய்யோடிறுக்குகிறாள்;
ஆர்த்துவரும் கொடுஞ்சாவுக் களித்ததெலாம் போதுமுமைக்
காத்திடுவேன் என்பதுபோல் ஆவேசம் காட்டுதையோ! 300

புதைத்தார்கள் சடலத்தைப் போனவனின் நினைவுகளோ
விதைத்தவைகள் எழுதுவபோல் வீறுடனே முளைத்துவரப்
பதைத்தார்கள்; பரிந்தார்கள்; பாசத்தால் மனஅமைதி
சிதைத்தானை மறக்கவழி தேடுகின்ற அவ்வேளை. 301

மறப்பரியாப் பெருந்துயர வாய்ப்பட்டீர்! அத்துயரம்
துறப்பரிய தாதலினால் மான்செட்டர் நகர்வந்து
இருப்பீரேல் எம்முடனே இத்துயரம் ஆற்றிடலாம்;
புறப்படுவீர்! எனஎங்கல் சன்போடு புகன்றனனால். 302

எங்கல்சோ டிருந்தாலே அஃதினிய தென்பதனால்
இங்கவரும் மறுப்பேதும் இசையாராய்ப் புறப்பட்டார்;
பொங்கிவரும் அறிவூற்றுப் புனலில்நிதம் ஆடியதால்
அங்கவர்தம் மனப்புண்ணுக் கரியமருந் தாகியதால். 303

என்றாலும் முற்றாக எட்காரின் நினைவுகள்தாம்
சென்றொழிந்து விடவில்லை; காலங்கள் சென்றாலும்
அன்றையநாள் நிகழ்ச்சிகளை அறிவுறுத்தும் பொருள்களினால்
இன்றுமவன் நினைவுகளாம் இடியேற்றால் தாக்குறுவார். 304

ஆர்த்துவரும் - ஆர்ப்பாட்டமாகவரும், ஆவேசம் - ஆவேசத்தை, பரிந்தார்கள் - இரங்கினார்கள்

‘எத்தனையோ துயரங்கள் எனைவருத்திச் சென்றதுண்டால்;
அத்தனையும் தூசெனநான் அவமதித்து விரட்டியுளேன்;
சித்திரம்நேர் என்மைந்தன் செத்தொழிந்த அத்துயர்தான்
இத்தரையில் துயரென்றால் என்னவென உணர்த்தியது.’ 305

‘ஒளிபரப்பி நின்றமகன் ஒழிந்துவிட்டான்; இல்லமெலாம்
நளிஇருள்தான் திணிந்துளது; நானறியா ஒருவெறுமை
கழிவெறுப்பைத் தருகிறதே’ எனக்காரல் எங்கல்சிற்
கெழுதுமொரு மடலினிலே இதயத்தைத் திறக்கின்றான். 306

‘எட்காரை இழந்தபினர் இவண்வாழும் நாள்கள்தொகை
மிக்கதுவாய் நீள்கிறதே! மெலிவிக்க வருகின்ற
துக்கமிக அதிகரிக்கும் தோழி’எனச் சென்னிதன(து)
அக்கைநிகர் வெய்டிமேர் அம்மையார்க் கெழுதுகிறாள். 307

காலமெனும் மருத்துவனார்கைவிசிறும் ஒருமருந்தும்
ஞாலமெலாம் துயரின்றி நல்வாழ்வு பெறுதற்காம்
மூலதன நூலெழுத மேற்கொண்ட முயற்சிகளும்
ஆலமென வாட்டுதுயர் அத்தனையும் மாற்றியதால். 308

நளிஇருள் - மிகுந்த இருள், கழிவெறுப்பு - மிக்க வெறுப்பு, இவண்- இங்கு, அக்கை - அக்காள், கைவிசிறும் - கையினால் வீசும், ஆலமென - நஞ்சைப் போல

18. சென்னி

காதலென் றுரைப்ப தென்ன?
கயிறின்றிப் பிணிக்கும் அந்தக்
காதலின் ஆற்றல் என்ன?
கசிந்திடும் ஊற்றுக் கண்ணாம் -
காதலின் ஆழ மென்ன?
கனலிடைக் கருக்கி வாட்டும்
காதலின் கொடுமை என்ன?
காட்டாகச் சென்னி உள்ளாள். 309

உணர்ச்சியும் உயிரும் ஒத்த
உழுவலன் புடைய ரானார்
புணர்ச்சியும் உடைய ராயின்
அவர்நிலை புகலல் உண்டோ?
இணர்ச்சிறு மலரும் தேனை
எடுத்துணும் வண்டும் ஆனார்;
குணச்சிறப் புடைய சென்னிக்
கொடிகாரல் மரத்தைச் சேர. 310

படிப்பினில் இமயம் போன்றாள்;
பரிவினில் கங்கை போன்றாள்;
வெடிப்புறும் மகிழ்ச்சி வெள்ளம்
விளைத்தலில் மேகம் ஆனாள்;
அடிப்படைக் குணத்தில் மூத்த
அன்பினுக் கில்லம் ஆனாள்;
பொடிப்புற்றுத் துயரம் சாகும்
புன்னகை முகத்துச் சென்னி. 311

காரலால் பெற்ற இன்பம்
கடுகெனின் அவனால் பெற்ற
ஆரள வாய துன்பம்
அலைகடல் என்பர்; ஆனால்
நேருற வந்த துன்ப
நெருப்பையும் பனியாக் கொண்டாள்;
சீருறும் காரல் தந்த
சிறப்பினைப் பெற்ற தாலே. 312

உழுவலன்பு - ஆழ்ந்த அன்பு, இணர் - கொத்து, பரிவு - இரக்கம், பொடிப்புற்று - தூளாகி, ஆரளவு - பேரளவு, பனியா - பனியாக

நாடுகள் விட்டு நாடு
நடந்திட நேர்ந்த போதும்
கேடுகள் மாறி மாறி
வாழ்க்கையுள் கிளர்ந்த போதும்
வாடுறும் அன்பன் என்றே
வழக்கறா நகையை என்றும்
சூடுவாள் முகத்தில்; பண்பிற்
சோர்விலா அகத்துச் சென்னி. 313

எத்தகு பொருள் குறித்தும்
எதிரெதிர் வாதம் செய்யும்
வித்தகம் உடையாள்; காரல்
விரித்துரை செய்யும் நூலின்
நத்திறம் பற்றிச் சென்னி
சொல்லிடும் நடுவு ரைக்கா
மெய்த்தவம் செய்வான் காரல்;
மேலென்ன சொல்ல வேண்டும். 314

மனைவியா மட்டும் சென்னி
வாழ்ந்திலள்; உணர்ச்சி யொத்த
துணைவனா, உதவி யாளா,
சூழ்திறச் சான்றோ ராக,
புனைவியற் சுரங்க மாக,
காரலின் புதுப்ப டைப்புள்
இனையவை பொருந்தா என்றே
இசைப்பவ ளாயும் வாழந்தாள். 315

''வெறுப்பொடும் எரிச்சலோடும்
எழுதுதல் வேண்டா;பேனா
அறுத்திடும் வாளும் இல்லை;
தாள்பகை மார்பும் அன்றால்;
விறைத்துநில் படையைப் போலத்
தொடர்கள்ஏன் விளங்க வேண்டும்;
முறைப்பட மென்மை யாக
எழுதிட முனைதல் நன்றால்.'' 316

கிளர்ந்தபோதும் - மேலெந்தபோதும், வழக்கறா நகை - நீங்காத சிரிப்பை, நத்திறம் - சிறப்பானதிறன், புனைவியல் - கற்பனை, இனையவை - இவை இவை, தாள் - காகிதம்.

'அணிவகுத் தேகும் போது
மிடுக்கதற் கழகு செய்யும்;
துணிந்துபோர் உடற்றும் காலை
மிடுக்கென்ன துணையா செய்யும்;
பிணிப்பட வைக்கும் அந்த
மிடுக்கினைப் பேணல்' என்றே
மணிச்சிறப் புடைய தான
விமர்சனம் மதிக்கச் சொல்வாள். 317

'எங்கல்சென் றொருவன் இங்கே
இலனெனில் உலகம் போற்றும்
பங்கமில் லாத 'மூல
தன'த்தினைப் பார்த்தல் இல்லை;
திங்கள்நேர் முகத்துச் சென்னி
இல்லையேல் தீரம் மிக்க
இங்கொரு காரல் மார்க்சே
இருந்திடல் இல்லை' என்பார். 318

'என்னரும் அன்புச் சென்னி!
எனக்கருள் உன்றன் காதல்
ஒன்றினால் மீண்டும் மீண்டும்
மனிதனா உருக்கொள் கின்றேன்!
நின்னொரு முத்தத் தாலே
பார்ப்பனர் நிகழ்த்து கின்ற
இன்னொரு பிறவி பற்றி
எடுத்தவர்க் குரைப்பேன்' என்றான். 319

'அயலவர் வருவ ராயின்
அன்பொடு வரவு கூறல்,
செயலராய் அமைந்து காரல்
செய்வன எல்லாம் செய்தல்;
புயலெனு மாறு கட்சிப்
பொறுப்பினை நிறைவு செய்தல்.
பெயலுறு மழையா மாறிப்
பிள்ளைகட் கன்பு செய்தல்;' 320

மிடுக்கு அதற்கு - படைக்கு மிடுக்கு அழகுசெய்யும், பிணிப்பட - துன்பப்பட, மிடுக்கினைப் பேணல் - அத்தகைய மிடுக்கினைப்பேணாதே, (பேண்+அல்) மணிச்சிறப்புடைய - மணிபோலும் சிறப்புடைய

'ஏரலின் கீறல் போல
விளங்குதற் கியலா தான
காரலின் எழுத்தைக் கண்டு
கட்டுரை படிஎ டுத்தல்;
போரிடும் வறுமை யோடும்
நேரத்தைப் போக்கல்; கீழோர்
நீரல கூறு வாரேல்
நெஞ்சொடு புழுங்கல் என்றே' 321

'ஆயிரம் முகங்கள் கொண்டாள்;
ஆயினும் எங்கட் கெல்லாம்
தாயினும் சிறந்தாள்' என்பர்
வில்லியம் லீப்னெட் 'டெம்மைச்
சேயென உடன்பி றப்புச்
செல்வமாய்க் கருதி அன்பால்
ஏயின செய்யும்' என்றே
பால்லபார்க் கெழுது கின்றார். 322

'பொறுத்திட இயல வில்லை;
நம்பிக்கை புலர வில்லை;
ஒறுத்திடும் துன்பத் துள்ளே
எத்தனை காலம் ஓட்டல்?
மறுத்திடல் வேண்டா! நஞ்சை
மக்களும் நாமும் உண்போம்;
இருத்திடல் ஒழிவோம்' என்றாள்
இதனின்வே றவலம் உண்டோ! 323

ஒருபுறம் வறுமை உச்சம்;
மறுபுறம் உழைப்பின் உச்சம்;
இருபெரும் நிலையி னூடே
வலிமையோ டிளமை எல்லாம்
பொருபொரு வெனவே சிந்தும்
சுண்ணாம்பு போலச் சிந்த
வெருவுறு நோய்கட் கெல்லாம்
வீடாயிற் றவள்உ டம்பே. 324

ஏரலின் கீறல் - நத்தை ஊர்ந்துசெல்லும்போது தரையில் தோன்றும் கீறல், நீரல - நீர்மை அல்லாதன, பால் லபார்க்கு - மார்க்சின் இரண்டாவது மகள் இலாராவைத் திருமணம்செய்து கொண்டவர், ஒறத்திடும் - வருத்திடும், வெருவுறு - அஞ்சத்தக்க, இருத்திடல் - இருத்தல்

புருசிய நாட்ட மைச்சர்
குடும்பத்துப் புதல்வி யாகப்
பெருமதிப் புடைய ளாகிப்
பிறங்கிய சென்னி இன்று
கருகிய மலரா ஆனாள்;
காதலின் விளைவா? அன்றி
இறுகிய கேடு கெட்ட
சமூகத்தின் இயல்பா சொல்வீர்; *325*

புருசியா - பிருஷ்யா (இன்றைய செருமனியின் ஒரு பகுதி)

19. பிரடெரிக் எங்கல்சு

மார்க்செனும் விந்தை மனிதனின் மூளை
மாபெரும் தத்துவச் சுரங்கம்;
பார்க்கெலாம் விடிவைத் தந்திடும் பகலோன்;
பரிந்தவர்க் கூன்றுகோல் அனையான்;
போர்க்குணம் அவற்குப் பிறவியில் அமைந்த
பொதுக்குணம் என்பதைக் கூர்த்த
நோக்கினால் அறிந்து கொண்டஎங் கல்சே
நுவலரும் நட்பினிற் சிறந்தோன். *326*

பிறப்பிடத் தாலே ஒத்தவ ரானார்;
பேசரும் சிந்தனை என்னும்
சிறப்பிடத் தாலும் ஒத்தவ ராகிச்
சிறந்தது மட்டுமா? சொல்லும்
நிரப்பெனும்ஒன்றை மானுடத் திருந்தே
நீக்குதற் கானபோர்க் களத்தில்
இறப்புறும் காறும் தோளொடு தோளாய்
இணைந்தவர் இவரலால் யாரே! *327*

பற்பலர் நண்பர் காரலைத் தொடர்ந்து
பயணமேற் கொண்டனர் எனினும்
அற்பரா மாறி இடையிலே பயணம்
அறுத்தனர் ஆகியே ஓட
விற்பயில் ஒருவன் இலக்கையே அல்லால்
வேறெதும் நோக்கிலா னாகி
முற்றொடர் வதுபோல் காரலைத் தொடர்ந்தோன்
மூத்தஎங் கல்சலால் யாரே! *328*

வாழ்ந்திடும் போதும் கூடவே வாழ்ந்தான்;
வஞ்சகர் சூழ்ச்சியால் சாய்ந்து
தாழ்ந்திடும் போதும் கூடவே தாழ்ந்தான்;
தணலெனும் வறுமையுள் இடறி
வீழ்ந்திடும்போதும் கூடவே வீழ்ந்தான்;
வீறுடன் சாவெனும் ஓர்வாள்
போழ்ந்திடும் போதும் அவன்பணி முடித்தே
பொன்றினான் போன்றுளார் யாரே! *329*

நிரப்பு - வறுமை, இறப்புறும்காறும் - சாகும்வரைக்கும், முற்றொடர்வது - முன் தொடர்வதுபோல், போழ்ந்திடும் - பிளந்திடும், பொன்றினான் - இறந்தான்

காரலென் றொருவன் பிறந்திலன் ஆயின்
கருதுமெங் கல்சிவண் இல்லை;
நேருறும் எங்கல் சில்லைஎன் றாலோ
நீள்புகழ்க் காரலும் இல்லை;
சீருற அவர்தாம் சேர்ந்திலர் ஆயின்
சிறப்புறும் சமனியம் இல்லை;
வேரறும்உழைப்போர் குலத்தினுக் கிங்கே;
வீறுறும் சுரண்டலின் கொடுமை. 330

போற்றுதற் குரிய தந்தைமார்க் சிற்கு;
புகழுமெங் கல்கினுக் கந்தக்
கூற்றுவன் மாறித் தந்தையா வாய்த்தான்;
கொடியள்தாய் காரலுக் கென்றால்
ஆற்றவும் சிறந்த தாயினை எங்கல்
சமைவுறப் பெற்றனன்; இங்கே
ஏற்றவர்க் கமைந்த தந்தைதாய் வாய்த்த
இயல்பினுள் எத்துணைப் பொருத்தம்! 331

கர்த்தரின் அருளைப் போற்றலே தந்தை
காட்டிய வழி; இவன் மகனோ
இத்தரை வாழ்நர் இன்னலை அகற்றல்
எம்மனக் கோளெனச் சொன்னான்;
எத்தர்கள் படைத்த கர்த்தரால் அன்றோ
இத்தனை துயர்களும் என்றான்;
ஒத்துற வின்றித் தந்தையும் மகனும்
ஒருபெரும் வேற்றுமை உற்றார். 332

'தந்தொழிற் சாலை அமைந்தமான் செட்டர்த்
தங்கிநீ பணிபுரி வாயேல்
மைந்தனா நீயும் தந்தையா நானும்
மாற்றமில் உறவிலே திளைப்போம்;
புந்தியின் வழியே போம்வழி எனநீ
புகல்வையேல் இனிவரு நாளில்
எந்தவொர் பயனும் என்வழிப் பெறுதல்
இல்லைநீ' என்றனன் தந்தை. 333

வேரறும்-வேர்+அறும் வேர்அறுந்து போகும், வீறுறும் - வலிமைமிகும், கூற்றுவன் - எமன், ஒத்துறவின்றி - ஒத்த +உறவின்றி, தந்தொழிற்சாலை - தம்தொழிற்சாலை, புந்தியின் வழியே - (உன்) அறிவின் வழியே

சுரண்டிடும் வர்க்கத் தொருவனா வாழ்தல்
துயரமே ஆயினும் இன்று
முரண்டினால் நாளை விளைபயன் என்னாம்?
மோசமாம் ஆதலின் எங்கல்
சிரண்டகம் கொண்ட மனிதனா மாறி
ஏகிமான் செட்டரை அடைந்தான்;
திரண்டெழும் உரிமைச் சாசன இயக்கச்
செயல்களில் ஈடுபா டுற்றான். 334

இடையிலே கோலோன் நகர்தனில் காரல்
இவனுடன் கொண்டமெய்ந் நட்பு
தடையிலா தாகிப் பாரிசில் வளர்ந்து
பெல்சியத் தலைநகர் தன்னில்
புடைவளர் ஆல மரமெனப் படர்ந்து
பொன்னிழல் பரப்பியே வானைத்
தொடஎழுந் ததுபோல் ஓங்கிய நட்பாய்த்
துலங்கிய திலண்டன்மா நகரில். 335

சட்டெனச் சினக்கும் இயல்பினன் காரல்
சமரினும் அமைதியன் எங்கல்
சிட்டமாய் யாரும் காரலை நெருங்க
அஞ்சுவர்;யாருமெங் கல்சை
ஒட்டுற வாட விழைந்திடும் அன்பன்;
ஒள்ளியன் காரலோ தலைமை
முற்றியோன் பிறப்பில், மூத்தஎங் கல்சோ
பிறப்பிலே தோழமை முதிர்ந்தோன். 336

தன்னுடைத் தேவை, நுகர்வுகள் அனைத்தும்
தவிர்த்தஎங் கல்சுசெய் தியாகம்
மண்ணிடைக் காரல் வாழ்வுறச் செய்ய
மார்க்சியம் என்றொரு கொள்கை
பொன்னுல கொன்றைப் படைத்திடற் காகப்
புதியதோர் பாதையைத் திறக்க,
இன்னலே அல்லால் வாழ்தலை அறியா
ஏழையர் இன்பினைக் கண்டார். 337

இரண்டகம்- இரண்டுமனம், பெல்சியத்தலைநகர்-பிரசல்சு, புடைவளர்-பக்கம் திரண்டு வரும், சமரினும்-போர்க்களத்திலும்

மார்க்சியம் என்றே காரலின் பெயரால்
வழங்குவ தாயினும் அதுதான்
போர்க்குணத் திருவர் உழைப்பினில் பூத்த
பொன்மலர் அல்லவோ? மார்க்சே
'சீர்த்தவன். எங்கல் சென்பவன் என்னிற்
செறிந்தவோர் பாதியன்' என்றான்.
ஊர்க்கொரு வியப்பாம் இருதலைப் புள்ளின்
ஒருயி ராயினர் உண்மை. 338

காரலை வளர்க்கும் கருத்தினால் தன்னைக்
கருக்கினோன்; தன்னொடும் கூடிச்
சேரலால் அன்றே சிக்கலொன் றின்றிச்
சிறந்தது சமனியக் கொள்கை;
யாரெவ ராலே பயன்மிகப் பெற்றார்
என்பதைக் கண்டிடல் ஆற்றில்
போரெனக் குவியும் மணலினை எண்ணிப்
புலப்படச் செய்தலே போலாம். 339

முன்னிய 'மூல தன' முதற் றொகுதி
முடித்ததும் காரலெங் கல்சிற்
குன்னுடை யுதவி ஒன்றினால் அன்றே
உருப்பெற முடிந்ததிப் பனுவல்;
பண்ணிய தியாகம்; சொல்லிய திருத்தம்
பகரவோ? நெஞ்சினில் ஊறும்
நன்றியால் நின்னைத் தழுவினேன்' என்றே
நவின்றனன் எழுதிய மடலில். 340

எஞ்சிய இரண்டு தொகுதியைக் காரல்
எழுதிடும் முன்னரே மறைய
கொஞ்சமும் முரணா வகையினில் காரல்
வைத்துள குறிப்பினை வைத்தே
மிஞ்சிடும் வண்ணம் அவ்விரு தொகுதி
வேலையை முடித்துவைத் தானை
துஞ்சிய காரல் ஆவியும், காரல்
தொண்டரும் என்றுமே மறவார். 341

சீர்த்தவன் - சிறந்தவன், பனுவல் - மூலதனம் (நூல்)

எல்லையில் லாத 'இயற்கையின் இயக்க
இயலி'னை எங்கல் செழுத
நல்லுளங்கொண்டே தொடர்கையில் காரல்
நமனுல கெய்திட நண்பன்
சொல்லரும் 'மூல தன'த்தினை முடிக்கச்
சூளுரை மொழிந்தன னாகி
வல்லவன் காரல் புகழினை வளர்த்தான்
வாய்த்ததன் புகழினைத் துறந்து. 342

'இயற்கையின் இயக்க இயல்' என்ற நூலை எழுதுவதாக எங்கல்சு முடிவு செய்து அதற்காகப் பூர்வாங்க வேலைகளையும் முடித்துவிட்டான். இடையில் மார்க்சு மறைந்துவிட்டதால்தனக்குப் புகழ் தரும் நூலை எழுதாது. மூலதனத்தின் எஞ்சிய தொகுதிகளை எழுதி முடித்தான்.

20. அனைத்துலகத் தொழிலாளர் கூட்டமைப்பு [அகிலம்]

உழைப்பவர்கள் படிப்படியா இளைப்பவராய் மாறப்
பிழைப்பவர்கள் செல்வர்களாய் நிலைப்படவே, குற்றம்
இழைப்பவரார் என்பதையும் முறைப்படவே காணாப்
புழைப்படுமோர் அறிவினராய் உழைப்பவர்கள் தேய்ந்தார். 343

ஆலைமுத லாளியரோ சுரண்டுவதில் வென்றார்;
மாலைமரி யாதையெலாம் அரசியலார் பெற்றார்;
காலைமுதல் உழைத்தவர்கள் பெற்றதென்ன? வாழ்க்கை
பாலைவன மானதலால் பயனையறி யாரால். 344

அணிதிரண்டு போரிடற்குத் துணிவுவர வில்லை;
பிணிசுரண்டு மேனியராய் நனிபயத்தில் மூழ்கித்
திணிதுயரம் நீக்குகென அரசியலார்ச் சார
'துணிவுடனே இருமின்' என அரசியலார் சொன்னார். 345

கூட்டமிகக் காட்டுதற்கும் கொடிபிடிப்ப தற்கும்
பாட்டாளிக் கூட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டார்;
வாட்டமெதும் தீரவிலை; என்றாலும் நாளை
நாட்டம்நிறை வேறுமெனக் கோட்டைகட்ட லானார். 346

பாம்புகளும் நோவாமல் பாம்படித்த கம்பும்
தீம்படைய விரும்பாமை தேர்ந்தஅர சியலார்
ஆம்பெரிய முதலாளிக் ககம்காட்ட லானார்;
சாம்பருவத் தேழையர்க்கோ முகம்காட்ட லானார். 347

இரண்டுபடும் வேடத்தார் இயல்பறிந்து கொண்டோர்
திரண்டவராய் அரசியலார்ச் சேரல்விடுத் தாராய்ப்
புரண்டுவரும் மனக்குமுறல் மிக்கவராய்த் தாமே
சுரண்டலினை எதிர்ப்பதென உழைப்பவர்கள் தேர்ந்தார். 348

பிழைப்பவர்கள் - பிழைசெய்பவர்கள், புழைப்படுமோர் அறிவினர் - உள்ளீடற்ற அறிவினர், பிணிசுரண்டு மேனியராய் - நோயினால் சுரண்டப்படும் உடம்பினராய், திணிதுயரம் - மிக்க துயரம், நாட்டம் - நோக்கம், முதலாளிக்ககம்காட்டலானார் - முதலாளிக்கு அகம் காட்டலானார், அகம் - மனம்,சாம்பருவம் - சாகும் பருவத்தில் உள்ள

நோயுடையார் மருந்துண்டால் மட்டுந்தான் அந்நோய்
போயகலும்; மற்றொருவர் உணிற்போத லுண்டோ?
ஏயதொரு தலைமையினை நமக்குள்ளே தேர்வோம்;
ஆயபணி அத்தனையும் அவரிடத்தில் ஈவோம். 349

செருமனியில், பிரிட்டனிலே பிரான்சினிலே எல்லாம்
பெருமளவில் தொழிலாளர் சங்கமமைத் துள்ளார்;
வருதுயரம் அறிந்ததனைத் துடைத்திடவு மானார்;
ஒருசெயலை மனத்தெண்ணிப் புதியவழி காண்போம். 350

என்றவராய் ஐரோப்பா எங்கணுமே உள்ள
மென்றொழிலர், வன்றொழிலர் யாவருமே கூடி
'ஒன்றுதொழி லாளர்துயர்; உலகமெலாம் உள்ளீர்!
வென்றிடவே வேண்டுமெனில் ஒன்றிணைவோ' மென்றார். 351

முனைத்தெழுந்த பன்னாட்டுத் தொழிலாளர் கூடி
அனைத்துலகத் தொழிலாளர் கூட்டமைப்பைக் கண்டார்;
வினைத்திறலன் மார்க்சங்கே விதிமுறைகள் வார்த்தான்;
எனைத்தரப்பும் அவ்விதியை ஏற்றுமகிழ் கொண்டார். 352

ஒன்றிணைந்து பணிபுரிதல்; புள்ளிவிவ ரங்கள்;
நன்குதிரட் டித்தருதல்; தொழிலாளர் நிலைமை;
இன்றிவரின் தேவை; இதழ் ஒன்றினைந டத்தல்
என்றுபல பணித்திட்டம் நன்குவரைந் திட்டான். 353

'அடிமையிலை அரசியலில் தொழிலாளர்; ஆட்சி
முடிவுரையை எழுதுவது தொழிலாளர் என்ற
படிநிலையின் வளர்ச்சிவரப் பாடுபடும் சங்கக்
கொடியுயரத் தொழிலாளர் வாழ்வுயரும்' என்றான். 354

உணிற்போதல் - உண்டால் போதல், ஏயதொரு - பொருத்தமானதொரு, ஆயபணி-நடத்த வேண்டிய பணி, வினைத்திறலன் - செயல்திறன் மிக்க, வார்த்தான் - வடித்தான்

கிளர்ச்சியுறு தொழிலாளர் கூட்டமைப்பின் கிளைகள்
வளர்ச்சிபெறு நிலைகண்டு வல்லரசோ அஞ்ச
தளர்ச்சிமிகும் வயதினிலும் இளைஞனைப்போல் காரல்
மலர்ச்சியொடு பணிபுரியும் மனவலிமை பெற்றான். 355

கூட்டமைப்புத் தலைமையிவன் வசமிருந்த தாலே
சாட்டைசுழற் றல்போலப் பேனாவைச் சுழற்றி
நீட்டறிக்கை பலதந்து கிளைச்சங்க மெல்லாம்
கோட்டையென வலிமையுற ஆக்கியவன் வைத்தான். 356

இத்தனையும் எழுச்சியுடன் இவன்புரியும் போதே
மெத்தபுகழ் மூலதன எழுத்துருவிற் கான
தத்தனையும் ஒன்றுவிடா தவன்தொகுத்த தாலே
கொத்தவரும்நோய்கள்சில மொய்த்திடவே வந்த. 357

செருமனியின் பிசுமார்க்கு செய்தவொரு சூழ்ச்சி
பெருமைமிகு பாரிசுகம் யூனைமட்டு மின்றி
அருமையுட னமைந்தகூட் டமைப்பினையும் சென்றே
இருமையுறத் தாக்கியதை என்னவென்று சொல்ல. 358

இரண்டுடனே ஏழாண்டுப் பேருழைப்பி னாலே
திரண்டுவந்த கூட்டமைப் பிரண்டுபட்ட போதும்
மருண்டுவிட வில்லையவன்;கூட்டமைப்பால் நாட்டில்
இருண்டநிலை மாறியதை எண்ணிமகிழ் கொண்டான். 359

'காரலுடை வாழ்வுவைர மோதிரமாம் என்றால்
நேருறுமோர் வைரமணி கூட்டமைப்பே யாகும்;
சேரலுறும் வைரமணி பெயர்ந்ததனால் நண்பன்
மூரின்நிலை என்சொல்வேன்' எங்கல்சு மொழிந்தான். 360

மொய்த்திடவே வந்த - மொய்த்திட வந்தன, பிசுமார்க்கு - பிஸ்மார்க், செருமனியின் இராசதந்திரி, இருமையுற - இரண்டுபடுமாறு, மூர் - காரலின் செல்லப்பெயர், இரண்டுடனே ஏழாண்டு - ஒன்பதாண்டு

நிலைநீரில் விழுங்கல்லொன் றமிழ்ந்திடலாம்; ஆனால்
அலைபரவிக் கரையைச்சென் றிடிக்காமல் விடுமோ?
மலையனைய கூட்டமைப்பு நிலைகுலைந்த போதும்
விலையரிய பலமாற்றம் வெளிக்கொணர்ந்த துண்டே! 361

இன்றுதொழி லாளர்உல கெய்துபல நன்மை
அன்றமைந்த கூட்டமைப்பின் ஆயபயன் அலவோ!
வென்றுதொழி லாளர்யுகம் மேல்வளர்தற் கெல்லாம்
நின்றுதவல் கூட்டமைப்பின் அன்றையநாள் தொண்டே 362

தோன்றுவதும் வளருவதும் உள்முரண்கள் தோன்ற
மீண்டுவரு போரினிலே ஒன்றழிந்து போதல்
ஆன்றபுகழ் இயக்கவியல் என்பதை யறிந்தோன்
ஈண்டிதற்கா வருந்துவனோ? எள்ளளவும் இல்லை. 363

விலையரிய - விலைமதிக்க முடியாத, ஆயபயன் - ஆகிய பயன்.

21. மார்க்சும் தார்வினும்

திரிந்தமை வாகி வளர்ந்திடும் உயிர்கள்
சிறந்திடும் முறையினை எல்லாம்
அறிந்தவ னாகி உலகையே வியப்பில்
ஆழ்த்தினோன் சார்லசு தார்வின்;
விரிந்துசெல் வகையில் தாவரம் முதலா
வீறுகொள் மானுடம் வரைக்கும்
பொருந்துமோர் உறவில் இயற்கையின் விதியைப்
புகுத்தியே காட்டிட லானான். 364

'உயிரின மூலத் தோற்ற'மென் றொருநூல்
உலகையே கலக்கிய துண்டால்;
இயற்கையின் மடியில் மறைந்துள தாய
இரகசியம் அனைத்தையும் உடைத்து
மயற்கையை நீக்கித் தெளிவினை அளித்த
மாபெரும் அறிவியல் என்றார்;
புயற்படும் சருகாய்ப் பழையநம் பிக்கைப்
புன்மைகள் மாய்ந்தன அன்றே! 365

'இயற்கையின் தேர்வில் உயிரின வளர்ச்சி'
என்னுமோர் நூலையும் தந்து
மயற்கையுள் தள்ளும் மான சீகத்தை,
மதத்தினர் வாய்மலர்ந் தருளிச்
'செயற்கையாய் இந்த உலகையும், உலகின்
செல்வமா யினவெலாம் கடவுள்
முயற்சியால் படைத்தார்' என்பதை எலாம்நிர்
மூலமா ஆக்கினான் தார்வின். 366

உள்ளது சிறத்தல் கொள்கையைத் தார்வின்
உலகினுக் களித்தஅந் நாளில்
விள்ளரி தான'அரசியல் மற்றும்
பொருளியல் விமர்சன ஆய்விற்
குள்ளபங் களிப்'பென் றொருபெரும் தலைப்பில்
உதவினன் காரலோர் நூலை;
அள்ளுதற் குரிய இருவர்நூ லும்மோர்
அடிப்படை கொண்டன வாகும். 367

திரிந்தமைவாகி - பரிணாமமடைந்து, மயற்கை - மயக்கம், புயற்படும் - புயலில் அகப்பட்ட, மானசீகம் - கற்பனை, நிர்மூலம்-அடியோடழித்தல், உள்ளது சிறத்தல் - பரிணாமம், விள்ளரிதான - வெளிப்படுத்தற்கு அரிதான.

இயற்கையின் இயக்க இயல்தரும் விதியை
எங்கணும் தேடியே தொகுத்தான்
மயற்கையின் நீங்கு மதியினன் தார்வின்;
மாபெரும் மானுடக் குலத்துள்
இயற்கையாய் எழுந்த சமுகஉள் முரணின்
இயல்பையும், அதன்வர லாறு
செயற்படும் வளர்ச்சி விதியையும் தொகுத்தான்
சிந்தனைச் சிற்பியாம் காரல். 368

இருவரும் இயற்கை விதியையே தேடி
எழுதினர் அவரவர் நூலை;
ஒருவரும் தனக்குத் துணைவரா நிலையில்
உச்சிமேற் கொளத்தகு தார்வின்
பொருவறு நூலால் துணை செயக்கண்ட
காரலோ பொங்கிய மகிழ்வால்
பெருமையாத் தார்வின் அறிவினைப் போற்றிப்
பேசியோர் மடலினை விடுத்தான். 369

முந்துற மூல தனமெனும் நூலை
முனைப்புடன் தார்வினுக் கனுப்ப
வந்ததோர் மடலும் தார்வின்பா லிருந்து;
வணக்கம்நும் மாபெரும் படைப்பைத்
தந்தெமை மேன்மைப் படுத்திய மைக்குத்
தவலிலா நன்றியை உடையேன்;
விந்தைசால் அந்நூல் விளக்கிடும் பொருளை
விரைந்துயான் படித்திட முயல்வேன்' 370

'இருவரின் படிப்பும் இருவரின் தளமும்
இயல்பிலே ஒன்றிலை; எனினும்
இருவரும் கொண்ட அறிவியற் பார்வை
இதனினும் விரிவுறல் வேண்டும்;
இருவரும் கொண்ட ஆய்வினால் போந்த
எண்ணிலா நன்மைகள் உலகை
ஒருபெரும் மகிழ்வில் ஆழ்த்துதல் காண
உன்னுவோம்;' இங்ஙனம், தார்வின். 371

பொருவறு - ஒப்பற்ற, முந்துற - முன்கூட்டியே, தவலிலா - குறையிலா, உன்னுவோம்- கருதுவோம்.

இப்படித் தார்வின் எழுதிடக் காரல்
எல்லையில் மகிழ்ச்சியுள் ஆழ்ந்தான்;
'செப்பரும் மூல தனமெனும் நூலைச்
சேர்ந்ததாம் மற்றுமோர் தொகுதி
இப்பொழு தேயான் வெளியிடற் குளதால்
இனியரே! நுமக்கிதைப் படைக்க
ஒப்புதல் தரவே வேண்டினேன்' என்றே
உளம்திறந் தானொரு மடலில். 372

உடன்படும் கடிதம் வரும்வரும் என்றே
உவகைய னாயவன் இருந்தான்;
திடுமென ஒருநாள் தார்வினின் கடிதம்
திகைப்பினை அளித்தது; 'நண்ப!
மடலினுக் கிசைய ஒப்புதல் அளிக்க
மனமிலை; பொறுந்தருள் செய்க;
இடர்தரும் எதற்கும் விலகிநின் றிடுதல்
என்னியல் பென்பதை அறிக' 373

'நூலினுள் உரைக்கும் செய்திகள் பற்றி
நுண்துளி அறிவும்எற் கில்லை;
சாலஅந் நூலில் கடவுளை மதத்தைச்
சாடுறும் செய்திகள் உளவால்;
மேலும்நான் இதற்கா ஒப்புதல் அளித்தால்
மிகவும்என் உறவினர் வெறுப்பைக்
காலுவர்; எனவே ஒப்புதல் தரயான்
கருதிலேன்;' என்பது கண்டான். 374

உள்ளது சிறத்தல் பற்றிய தார்வின்
உயிர்க்குல வளர்ச்சியின் விதிகள்
விள்ளரும் மார்க்சின் சமுகவிஞ்ஞானம்
விளக்கிடத் துணையென நிற்கும்;
உள்ளுரம் பாய்ந்த காரலின் தருக்கம்
உதவிடும் விதிகளோ தார்வின்
கொள்பரி ணாமம் பொருள்முதல் வாதக்
கொள்கையோ டொத்திசை வாக்கும். 375

செப்பரும் - சொல்லற்கரிய, உவகையன் - மகிழ்ச்சியன், காலுவர் - வெளிப்படுத்துவர், உள்ளது சிறத்தல்- பரிணாமம்

அடிப்படைக் கருத்தில் இருவரும் ஒத்தே
அமையினும், அனைத்திலும் அதனை
முடிப்புறக் கொண்டு நடத்திடற் கவரால்
முடிந்திட வில்லையே; இஃதோர்
துடித்திட வைக்கும் அதிர்ச்சிதான்; நெஞ்சில்
துணிவினை யார்தரல்? இந்த
வெடிப்பினால் ஒத்தோர் வேற்றுமை கொண்டு
விலகிய தையகோ கொடுமை. 376

கருத்தினால் தார்வின் ஒத்தவன்; அதனைக்
காட்டிட முடிந்திடா னாகி
வெறுத்தவன் போலே விலகிய தென்னோ?
வேர்விடும் மதத்துறை யாளர்
ஒறுத்திடு வாரேல் தன்னுடை வளர்ச்சி
ஒழிந்துபோம் என்றபேர் அச்சம்
வருத்தவே அதனால் மறுத்ததே யல்லால்
மனத்தொடு மறுத்திலன் அவனே! 377

ஆட்சியும் மதமும் நீள்கரம் கோத்தே
ஆடிய ஆட்டமிம் மண்ணில்
மீட்சியே இல்லாத் துயரினுள் மனிதம்
வீழ்த்திய கதைகளோ கோடி;
காட்சியில் சிலுவை கருணைஎன் றெல்லாம்
கதைத்திடு வாரவர் செய்யும்
சூழ்ச்சியுள் அறிஞர் கலிலியோ போன்றோர்
தொலைந்ததைப் பார்த்துளேம் அன்றே. 378

தார்வினைப் போல 'இதம்பத மா'கத்
தான்நடந் திருப்பனேல் காரல்
ஓர்துய ரின்றி வளமிகும் வாழ்வில்
ஒளியுடன் வாழ்ந்துபோ யிருப்பான்;
பார்படும் அரசைப் பாழ்செயும் மதத்தைப்
பகைத்தவன் எழுந்ததால் அன்றோ
சீர்பெறும் வாழ்வை வறுமையின் கோரம்
சிதைத்தது மென்மெலும் அந்தோ! 379

முடிப்புறக்கொண்டு - முடிவுவரைகொண்டு, வெடிப்பினால் - பிளவினால், ஒறுத்திடுவாரேல் - தண்டிப்பாரேல், இதம்பதமாக- ஒத்திசைவாக, கண்டும் காணாமலும்

அறிவியல் அரங்கில் உரியவர் சிலரால்
ஆண்டிலே சிற்சில நாள்கள்
குறிகொளும் தார்வின் பெயர்சில போது
குறிப்பிடப் படுதலும் உண்டு;
தறிபட லான காரலின் நினைவோ
தாரணி மீதுளா ராலே
வெறிகொளும் குரலால் 'காரல்வாழ்' கென்றே
வீதிகள் தொறுமிவண் முழங்கும். 380

'கடவுள்தான் இங்கே அனைத்தையும் படைத்தார்
கருணையால்' எனச்சொலும் கருத்தை
உடைபடு மாறு செய்தனன் தார்வின்;
'ஒரு 'விதி' அல்லவோ மனிதர்
கெடலுறு மாறு வறுமையைத் தருதல்,
கிளத்திடும் கருத்தினைக் காரல்
இடைநொறுக் கினனால்; இருவரும் உடைக்க
ஏந்திய தறிவியல் வாளால். 381

தறிபடலான -தறிபோல்படலான, வாளால் - வாள்+ஆல், ஆல்-அசை

22. மூலதனம்

மனித குலத்தின் மாபெரும் அறிவு
மூல தனமெது? மூல தனந்தான்!
பதினைந் தாண்டுக் காலப் படிப்பால்
ஆயிரத் தைந்நூறு அரிய நூல்களைப்
பிழிந்துசா றெடுத்துப் பிழையிலாத் தருக்க
வழிமுறைச் சூட்டில் வற்றக் காய்ச்சி
வரலாறு நடந்த வழித்தடத் திருந்து
பெறலரும் மெய்ம்மை பெயர்த்தெடுத் ததனைப்
பொடிசெய்து தூவிப் பொதுமை மணக்க
வடிவுற இறக்கி வைத்தது மூலதனம்;
குளிர்மிகும் அறையில் குந்தி யிருந்தும்
எழில்மிகு சூழலில் ஏவலர் துணையொடும்
எழுதப் பட்ட தில்லையிந் நூலே,
பழுதாய்ப் போன வாழ்க்கையின் நடுவே
வறுமை ஒருபால் வாய்பிளந் திருக்க
சாவுகள் அடிக்கடி சந்திக் கிழுக்க
நோவும் துயரமும் தாவிப் பிணிக்க
அவமானம் என்பதோ அன்றாட வாழ்வின்
வெகுமான மாகி வெறுப்பை மூட்டிட
இத்தனைக் கிடையே எழுதப் பட்ட
மொத்தச் சாதனை உருவம் மூலதனம்;
மூன்று தொகுதிகள் கொண்டது மூலதனம்;
காரல் வாழ்ந்த காலத்தி லேயே
முதலாம் தொகுதி வெளியா கிடவே
எஞ்சிய இரண்டு தொகுதியும் இணையிலா
நண்பன் எங்கல்சால் பின்புவெளி யாயின;
கன்னன் கவச குண்டலத் தோடு
மண்ணிற் பிறந்ததா மாபா ரதம்சொலும்;
மார்க்சும் இந்த மண்ணிற் பிறக்கையில்
மார்க்சியம் என்னும் தத்துவத் துடனே
ஒட்டிப் பிறந்திட வில்லை; ஆனால்
வெட்டிப் பிளக்கும் வறுமை வேரின்
மூலத்தைக் காணும் முயற்சியில் மார்க்சு
காலத்தை வெல்லும் இதைக்கண்டு பிடித்தான்;
என்னதான் அந்த மூல தனத்தில்

பன்னினான் காரல் என்னுவிர் ஆயின்;
பொருள்உற் பத்தி முறையினுள் நடந்துள
மருள்கொள வைக்கும் வளர்ச்சியும் மாற்றமும்,
தொழில்முத லாளர்க்கும்,தூணென விளங்கும்
தொழிலா ளர்க்கும் உளதாம் தொடர்பும்,
உற்பத்தி யான பொருளை எங்கும்
விற்பனை செய்ய விரிந்த களங்களும்,
நாணய மாற்றில் நடக்கும் நிகழ்வுகளும்,
ஆக்குவோர், நுகர்வோர் ஆமிவர் திறத்துப்
போக்கும், அதனால் போந்த நிலைமையும்,
முதலா ளியமென முகிழ்த்ததோர் தீமை
முதலை இழக்கும் முடிவுரை நிகழ்ச்சியும்,
ஆக்கும் தொழிலாளி வர்க்கஆ திக்கம்
வர்க்கமே இல்லா வாழ்நிலை நோக்கிக்
கொண்டு செலுத்தும் குறிக்கோள் வரைவும்,
என்று பலவும் இயங்கியல் முறையில்
நின்று நிலையுறும்எனவே நிகழ்த்தினான்;
எகலிய வாதியா இருந்தவன் காரல்;
தகவிலா இடங்களில் எகலினைத் தாக்கினான்;
தருக்க வியலின் தலைவனே ஆயினும்
கருத்துமுதல் வாதக் களத்தில்அத் திறனைக்
கொட்டினான் என்ற குறையினால் எகலைக்
குட்டினான் தலையில்; கருத்தின் தோற்றம்
காரணத் திருந்தா? காரியத் திருந்தா?
காரணத் திருந்துதான் கருத்து தோன்றும்
உலகில் இல்லா ஒருபொருள் பற்றி
நிலவும் கருத்துகள் எவையும் நிலைக்கா;
மேலும் அவற்றை மெய்ப்பித்தல் இயலாது;
கடவுள் என்றொரு காட்டே போதும்;
இப்படி எகலைத் தலைகீ ழாகக்
குப்புறத் தள்ளினான் என்று கூறுவர்;
முதலாளி உற்பத்தி முறையின் ஆய்வில்,
தருக்க வியல்தரும் ஒளியின் தயவில்,
வளர்ச்சி விதிகள், கருத்தமைவு ஆதிய
அனைத்தின் உதவியையும் துணைக்கொள் கின்றான்;

பன்னினான் - சொன்னான், ஆக்குவோர் - பொருளை ஆக்குவோர், ஆக்கும் - உண்டாக்கும் (புரட்சியை) வரைவும் - திட்டமும்

அளவு மாற்றமும் அதுவே தொடர்ந்து
குணமாற்ற மாகும் கொள்கை விதிகள்;
எதிரெதிர் ஆற்றலின் ஒற்றுமை வேற்றுமை;
நிலைம றுத்தலின் நிலைமறுப் பிதனொடு
குணமும் அளவும் அளவீடென் பனவும்;
சாரப் பொருளின் தோற்றமும் சாயலும்;
உள்ள டக்கமும் மற்றதன் உருவமும்;
உள்ளார்ந் தவையும் வெளியார்ந் தவையும்
காரணம் மற்றும் விளைவென் பவையும்;
அவசிய மானவும தற்செயல் நிகழ்ச்சியும்;
சாத்தியப் பாடும் உண்மை நிலையும்
தனித்தன்மை யாகிச் சார்பிலா திருப்பதும்;
குறிப்பிட்ட தானதும் அனைத்துவகை தழுவியதும்;
அருவம் ஆனதும், திண்மம் ஆனதும்;
வரலாறு தழுவியதும், தருக்கம் தழுவியதும்;
எனப்பல விதிகள் கருத்தமை வின்னன
தந்துணை கொண்டு முந்துநூல் யாத்தான்;
பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையெனும் இலக்கணம்;
இயல்பாக் கழிவது எது? அது பழைமை;
இயல்பாய் முளைப்ப தெதுஅது புதுமை;
பழைமையாய்ப்போன விதையுள் ளிருந்தே
புதுமைத் தளிர்கள் புன்னகை காட்டும்;
பிளந்த விதையின் சிதைந்த பகுதிகள்
மண்ணுள் பழைமையாய் மட்கி மடியும்;
விதையுள் ளிருந்து செடிமுளைப் பதுதான்
புதுமையும் பழைமையும் ஆமெனப் புகன்றான்;
பூக்கள் உதிர்கையில் காய்கள் தோன்றும்;
கனிகளில் இருந்து விதைகள் தோன்றும்;
விதைகளில் இருந்து மீண்டும் செடிகள்;
பழைமை புதுமையின் சுழல்முறை இதுதான்;
பழைமையே இல்லாப் புதுமையும் இல்லை;
புதுமையே இல்லாப் பழமையும் இல்லை;
இரண்டும் ஒன்றினுள் ஒன்றாய் இலங்கும்
ஒண்டுக் குடித்தன உறைவிட வாசிகள்;
இந்த உண்மைகொண் டெதனை விளக்கினான்.

எந்த ஆற்றலும் ஏறுமுக மாகிச்
செல்லும் காலை அதனைச் சிதைத்துக்
கொல்லுமோர் ஆற்றல் அதனுள் ளிருந்தே
தோன்றும் என்பதைத் துலக்கிடற் காகவே;
முதலா ளியமெனும் ஒருபெரும் மூர்க்கம்
மிதமிஞ் சியதாய் மீறிவிட் டதனால்
இதனை ஒழிக்கும் இன்னொரு ஆற்றல்
அதனுள் ளிருந்தே அரும்பி வளர்கிறது;
அழிக்கத் தோன்றிய அஃதென் என்றால்
தொழிலாளி வர்க்கத் தோற்றமே! என்றவன்
ஏரண முறையில் எடுத்துக் காட்டினான்;
மனித சமுகத்தின் தனித்துவ உறவுகள்
எதனைப் பொறுத்ததாய் இங்கமை கின்றன?
பொருள்மீ துள்ள உரிமை முறையும்,
பொருள் உற்பத்தியுள் போந்த முறையும்,
பொருளின் பங்கீட்டில் பொதிந்துள முறையும்
ஆன இவற்றின் அமைவினுக் கேற்பவே
மானுடக் குலத்துள் உறவுகள் மாறும்;
காலங்கள் தோறும் சமுகக் கதையின்
ஏற்ற இறக்கம் இதனை உணர்த்தும்;
நீண்டநாள் முன்னர் உறவாய் நிலைத்தது
ஆண்டான் அடிமைத தொடர்பா யமைந்தது;
நிலக்கிழார் ஆதிக்கம் நிலைத்த போது
பண்ணை யடிமை உறவைப் பயந்தது;
முதலாளி வர்க்கம் முகிழ்த்த போது
தொழிலாளி வர்க்கமாய் உறவு தொடர்ந்தது;
எத்தனை உறவுகள் செத்துப் பிறப்பினும்
அத்தனை உறவும் அரும்பிடக் காரணம்
பொருளின் உரிமை, உற்பத்தி பங்கீடே
அடிப்படை யாக அமைந்து கிடந்தது;
முதலாளி என்றொரு முதன்மை வர்க்கம்
முதன்முதல் தோன்ற முதன்மைக் காரணம்
மிஞ்சிய மதிப்பே; என்றனன் மார்க்சு;
உபரி மதிப்பென உரைத்தலு முண்டு;
தொழிலா ளிக்குத் தினக்கூலி யாக

ஏரண முறை - தருக்கமுறை

ஐம்பது ரூபாய் அளிப்பதாக் கொள்வோம்;
பத்துமணி நேரப் பணியவன் செய்கிறான்;
முதல்ஐந்து மணியில் முடித்தபொருள் மீதே
ஐம்பது ரூபாயை விலையில் அமைத்துச்
சேர்த்து விற்பனை செய்யுமுத லாளியம்;
எஞ்சிய ஐந்துமணி நேர உழைப்பும்
மிஞ்சிய மதிப்பாய் முதலாளி மேலுற
வழிசெய் கின்றது; வற்றாத இந்தச்
சுரண்டல்தான் முதலாளி திரண்டவர லாறு;
சுரண்டுவது தெரிந்தும் உழைப்பவர் சும்மா
அஞ்சிக் கிடப்பதேன்; அஞ்சிக் கிடக்கவே
மதத்தைக் கடவுளை மாபெரும் விதியை
படைத்து வைத்துளர்; பழிசெய அஞ்சா
மனிதனே மதத்தை உண்டு பண்ணினான்;
மனிதனை மதமிங்கே வார்த்திட வில்லை;
'மதமென்ப தென்ன? மனம்ஒடுக் குண்ட
ஒற்றைப் பிராணியின் உள்முகப் புலம்பல்;
மனமிலா உலக உணர்ச்சியின் வடிவம்;
உயிரிலா நிலைகளின் உயிர்'அம் மதந்தான்;
பொறுமை அடக்கம் நிறைவு இவை புனிதம்
நிறைந்தவை என்றோர் நெடுங்கதை கட்டிப்
போராட்டக் குணத்தைப் பொசுக்கிய திம்மதம்;
பொருளில்லா தாருக் கவ்வுலகம் காட்டும்;
பொருள்உள் ளவர்க்கோ இவ்வுலகம் காட்டும்;
இதுதான் மதத்தின் இரட்டைமுகத் தோற்றம்;
வாழும் மக்களை மயக்கும் அபினி;
போலி மகிழ்ச்சியைப் புகட்டுவ தாச்சொலும்
மதத்தை ஒழிப்பதே உண்மையில் மக்களின்
மகிழ்ச்சியைக் கோரும் மனிதனின் கடமை;
எல்லாம் பொதுவாய் இருத்தலே முறைமை;
வல்லான் ஒருவன் தனியாய் வளர்தல்
ஒல்லா தென்பதை உணர்த்துவது கூட
முதலாளி யந்தான்; முன்நாளில் ஒருவன்
ஆடை ஒன்றினை ஆக்கினான் என்றால்
பருத்திபயி ரிட்டதும், பஞ்சினை நூலாத்

முதலாளி - முதலாளியம், வார்த்திடவில்லை - படைத்திடவில்லை, ஒல்லாது - பொருந்தாது, அபினி - போதைப் பொருள்

திரித்ததும் சாயம் சேர்த்ததும் துணியாய்
நெய்ததும் அவன்தான் என்பதை நினைமின்;
ஆடையை முழுமையா ஆக்கிய உரிமை
அவன்ஒரு வனுக்கே உரியதா யிருந்தது;
இன்றைய ஆடையின் நிலைமை எப்படி?
நிலம்உழு கருவியை எவனோ செய்தான்;
நிலத்தை உழுதவன் எவனோ அறியோம்;
பருத்தி எடுத்தவர் யாரோ? அதனைத்
திரித்துநூ லாக்கியது எந்தத் தேயமோ?
வண்ணம் கண்டு பிடித்தவர் யாரோ?
வாங்கிச் சாயம் ஏற்றினோன் எவனோ?
ஆடையா மாற்றும் ஆலையின் அகத்தும்
எத்தனைக் கைகளோ இணைந்துபணி யாற்ற
வந்த தல்லவோ இந்த ஆடை;
மேற்சொன் னோரில் யாரிதற்குரிமை
கோருதல்? சமுகம் கூட்டாய் ஆக்கிய
தல்லவோ இந்த ஆடை என்பது
முதலாளி யத்தார் நமக்குமுன் னிறுத்திய
கருத்தாம் என்பதைக் கவனத்திற் கொள்மின்;
உலகையே சமுகப் பொதுமையா ஆக்கும்
நிலைவரின் அதுதான் நேர்மையென் றறிமின்;
இன்றைய சமுகம் எப்படிப் பிறந்தது?
முதலாளி யத்தின் மூலத்தி லிருந்துதான்;
முதலாளி யத்தின் மூலத்தில் பிறந்த
தொழிலாளி வர்க்கம் தோன்றிய இடத்தையே
முற்றும் அழித்து முடிக்கும்; எப்படி?
உற்பத்தி என்பது சமுகத் தேவையை
ஒட்டிய தாக ஒருகாலத் திருந்தது;
இன்றோ தேவையை எண்ணி உற்பத்தி
செயப்பட வில்லை; செல்வ வெறியானால்
அதிக உற்பத்தி, அதிக இலாபம்
என்பது முதலாளி எண்ணமா யுள்ளது;
இதனால் போட்டி எல்லை மீறவே
தேவையின் குறைவும், அளிப்பின் மிகுதியும்
எதிர்விகித மாகி இன்னல் விளைக்கும்;

அளிப்பின் மிகுதி - உற்பத்தி மிகுதி, இன்றைய சமுகம் - தொழிலாளிச் சமுகம்

தேங்கும் பொருள்கள்; வாங்குவா ரில்லை;
ஓங்குவது நட்டம் ஒன்றுதான் என்னும்
நிலையில் இலாப நினைவின் ஊக்கலால்
பெரிய புதிய இயந்திரப் பெருக்கம்
உதயம் ஆகும்; ஆகவே அதனால்
உழைப்பவர் வேலை இழப்பவர் ஆவார்;
புதிய இயந்திரம் புகுத்தப் படலால்
உற்பத்தி எல்லையோ உச்சியைப் போய்த்தொடும்;
தொழில்துறை மந்தம் சோர்வினை ஊட்ட
முதலாளி யர்பலர் முனைந்தொன்று கூடி
உற்பத்தி அனைத்தையும் ஒன்றா இணைப்பர்;
இதன்வழி யாகப் பொருளின் சந்தையை
கைக்குள் வைப்பது என்பதிவர் கருத்து;
புதிய இயந்திரப் போக்கினால் உழைப்போர்
வறிய ராகுவர் வேலைவாய்ப் பிழந்து;
வாங்கும் சக்தியோ வரவரக் குறையும்;
ஆக்கிய பொருளோ விற்பனை யாகாது
தேங்கிய அதனை அழித்துத் தீர்ப்பர்;
முதலாளி யத்திற்கு முதலடி விழுகிறது;
ஒருபுறம் பார்த்தால் வளமையின் சிகரம்;
மறுபுறம் பார்த்தால் வறுமையின் பள்ளம்;
இரண்டு பிரிவாய் இறுகிடும் சமுகம்;
இல்லாத வர்களின் எரிச்சலும் சினமும்
உள்ளாரை நோக்கி உருத்துப் பார்த்திடும்;
உற்பத்திச் சாதனம் ஒருசில ரிடத்தில்
இருப்பதால் தானே இந்தத் தொல்லைகள்!
என்ற கருத்தின் ஏறுமுக வளர்ச்சி
புரட்சியாய் வெடித்துப் பொங்கும் ஒருநாள்;
தனிச்சொத் துரிமைக்குச் சாவுமணி அடிக்கும்;
உரிமையைப் பறித்தோர் உரிமையை இழப்பர்;
உரிமையை இழந்தோர் உரிமையைப் பெறுவர்;
இதற்குமுன் னிகழ்ந்த புரட்சிக்கும் இதற்கும்
வேறு பாடுகள் வெறிப்படை யானவை.
ஆட்சியை அந்நாள் அவாவிய குழுவினர்
திரண்டு புரட்சியைச் செய்தனர். உண்மைதான்;

உருத்து - கோபித்து, அவாவிய - ஆசைப்பட்ட

அதனால் அதிகார மாற்றம் மட்டுமே
விரைவா நடந்தது; வேறொன்று மில்லை;
இப்படி நிகழ்ந்த புரட்சியா வற்றிலும்
சமுக மாற்றம் சாத்தியப் படவிலை;
எதிர்வரும் புரட்சியோ அதிகார மாற்றம்
கருதிய தெனினும் கால்கொண் டுள்ள
வர்க்கத்தை எல்லாம் வழித்துத் துடைத்தே
எறிந்திடல் என்னும் குறிக்கோள் இயைந்தது;
சமுகச் சொத்தாய் உற்பத்திக் கருவிகள்
அமையும் போது வர்க்கங்கள் அங்கிரா.
உரிமை இழந்த ஒருபெருங் கூட்டம்
நடத்தும் புரட்சிபோல் தோற்றம் நல்கினும்
மானுட சாதியே மறுபடி தன்னைப்
புதுப்பித்துக் கொள்ளத் தோன்றிடும் புரட்சி
என்றே உரைத்தான்; இஃதுண்மை தானே!



23. விளக்கு அணைகின்றது

குதறுகின்ற வறுமையினால், சத்துணவுக் குறைபாட்டால்,
பதறவைக்கும் தினத்துயரால், பலமிழந்த சென்னியுடல்
விதவிதமாப் பலபணிகள் விழவிழவே சுமந்ததனால்
சிதறியதே; பலநோய்க்குச் சிறைக்கூடம் ஆகியதால். 383

தள்ளரிய பலபணிகள் தாங்காமல் தளர்வுறுவாள்;
விள்ளரிய கவலைகளோ வேல்செருகும் நெஞ்சினுளே;
உள்ளிருந்தே அரிக்கின்ற கொடுநோய்கள் உடலெங்கும்;
பள்ளமிருந் தால்வெள்ளம் பாய்ந்துவரல் இயல்பன்றோ! 384

நுரையீரல் நோயாலே நொந்துழன்ற சென்னிக்குப்
புரையோடும் நோயான புற்றுமவள் ஈரலினை
இரைகொள்ளத் தொடங்கியதால்; நலமெல்லாம் இற்றொழிய
அரைமேனி எனவானாள், ஆவியினித் தங்கிடுமோ? 385

தன்நோயைப் பற்றியவள் தன்மகளுக் கெழுதுங்கால்
'உன்னன்னை பெற்றநோய் ஒருநாளும் தீராநோய்;
என்னையது தீர்க்காமல் அதுதீரா தெந்நாளும்
என்னருமைச் சென்னியே! என்செய்வேன்' என்றாளால். 386

நோய்த்துயரம் மிக்குறவே நுரைவளரும் அலைகரையைப்
போய்த்தழுவும் கடற்கரையில் போய்வாழ்ந்தால் நலம்கொஞ்சம்
வாய்த்திடலாம் என்பதனால் வந்தார்கள் கடற்கரைக்கு,
தீய்த்ததுயர் சிறிதகலச் சென்னிவிழை வொன்றுரைத்தாள். 387

'மூத்தமகள் சென்னியையும் மூரல்மிகு பேரரையும்
பார்த்துமகிழ் கொளவேண்டும்' என்றவள்தான் பகர்ந்திடவே
ஆர்த்தஅவள் மனக்கிளர்ச்சி அடங்குவணம் மூத்தவள்பால்
சேர்த்துவிடப் பிரான்சிற்குச் சென்னியொடு காரல் வந்தான். 388

புரையோடும் - உள்ளுக்குள்ளேயே அரித்துச்செல்லும், இரை - உணவு, அரைமேனி - பாதி உடம்பு, சென்னியே - மகள் சென்னி, மிக்குறவே - மிகுதியாகவே, விழைவு - விருப்பம், ஆர்த்த - பொங்கிய

பேரர்மகட் பார்த்தவுடன் பெருமகிழ்வில் திளைத்தவளாய்த்
தீரரிய நோயெல்லாம் தீர்ந்ததுபோ லேயிருந்தாள்;
நேரவரும் இந்நிலையில் இடியொன்று நெஞ்சிறங்கிக்
கோறலென ஒருசெய்தி கொடுவந்தான் ஒருகாலன். 389

'இளையமகள் எலியனார் இன்னுயிருக் காபத்து;
களையிழந்து கிடக்கின்றாள்; எனவந்த கடிதத்தால்
மலைசரிந்து தலைவீழ மனைவியினை விட்டுவிட்டுத்
தளையவிழா நெஞ்சினனாய் இலண்டனைத் தானடைந்தான். 390

சிந்தையுடல் சோர்ந்தவளாய்ச் செயலிழந்த எலியனார்
தந்தைமுகம் கண்டதனால் தகுந்தமருத் துவமதனால்
விந்தையுற நலமுற்றாள், விலகியது பெருந்துயரம்;
இந்தநிலை இங்கிருக்கச் சென்னிநிலை இனிக்காண்போம். 391

'ஓய்வுகொள வந்தஎனை எலியனார் உற்றதுயர்
சாய்வுகொள வைத்ததையோ! சரிவுதரும் காலமிதோ!
மாய்வுவந்து கொடுசெலுமோ! மதுரமொழி கேட்குவெனோ!
போயவளைக் காண்ப'னெனப் புறப்பட்டாள் இலண்டனுக்கே. 392

நலமுற்ற மகட்கண்டும் சென்னிநல முறவில்லை;
பலமுற்றும் இழந்தவளாய்ப் படுக்கையினின் றெழலின்றி
மலமற்றும் பிறவெல்லாம் மற்றவர்தாம் எடுப்பதெனும்
நிலைமுற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் காரலுக்கோ 393

உள்ளுறுப்பாம் நுரையீரல் அழற்சிநோய் ஊறுசெய
விள்ளரிய சளித்தொல்லை, வெப்புநோய் ஒன்றிணைந்து
மெள்ளமெள்ள அவனுரத்தை மெலிவிக்க அவனுயிரோ
தள்ளியுடல் நீங்குநிலை தருமென்றார் மருத்துவர்கள் 394

தீரரிய - நீக்குதற்கரிய, கோறலென -கொல்லுதல் போல, தளையவிழா - (மன) இறுக்கம் தளராத, மாய்வு - மரணம், வெப்புநோய் - காய்ச்சல்நோய், உரத்தை - வலிமையை

இருவரையும் தனியறையில் கிடத்தியவர் இருவர்க்கும்
ஒருவர்நிலை மற்றவர்க்கே உரையாமல் வைத்திருந்தார்;
மருத்துவர்கள் தம்திறமும், மக்கள் செயும் பணிவிடையும்
வருத்து துயர் நோய்மாற்ற மார்க்சு நலம் சிறிதுற்றான். 395

உடல்சிறிது தேறியதும் உயிரனைய சென்னியின்கண்
பட்லுறுமா றவள்பக்கல் போயவளைப் பார்த்திருப்போம்;
கெடல்வருமுன் அவள்குரலைச் செவியாரக் கேட்டிருப்போம்;
இடையிலிவர் தடைபுரிவார் எனத்தருணம் பார்த்திருந்தான். 396

இல்லத்தில் யாருமில்லை; இதுவேநல் அமயமென்று
மெல்லத்தன் கையூன்றி மேலெழுந்து சென்னியுள
உள்ளறையை நோக்கினனாய் ஊர்கின்ற காரல்மனம்
பள்ளத்தை நோக்கிவரும் வெள்ளத்தை நினைவூட்டும் 397

மவுனமெனும் ஒருமொழியால் மனந்திறந்து பேசினரால்;
கவனமெலாம் மற்றவரின் நலம்பற்றிக் கவலைகொள
நயனங்கள் ஒருநான்கும் நயகாரா வாமாறச்
செயலொழிந்த நிலையினராய்த் தீண்டியுயிர் தளிர்க்கின்றார். 398

அவரிருந்த நிலைபற்றி அருமைகள் எலியனார்
சுவரிருந்த சித்திரம்போல்சொன்னாளோர் மடலினிலே;
'தவமிருப்பார் போலவர்தான் தனித்திருந்த காட்சியினை
எவர்மறக்க முடிந்தாலும் யான்மறக்க முடியாதே' 399

'நொடிந்துகிழ மானவர்போல் நோக்குங்கால் அவரில்லை;
முடிந்துவிடும் வாழ்க்கைஎனும் மூர்க்கத்தால் ஈருயிர்கள்
படிந்தொன்றாய் இருப்பதுபோல் பற்றிக்கொண்டி ருந்தார்கள்;
விடிந்துவரும் வைகறையின் விளக்கமவர்முகத்தினிலே. 400

கண்படலுறுமாறு - கண்ணில் படுமாறு, கெடல் - சாவு, இவர் - வீட்டில் உள்ள மற்றவர்கள், அமயம் - சமயம், நயகாரா - நீர்வீழ்ச்சி

'விடைபெற்றுக் கொள்கின்ற வேளைவந் திப்பொழுது
நடைபெற்றுக் கொண்டுளதை நன்கறிந்த காரணத்தால்
தடைமுற்றும் தாண்டினராய்ச் சஞ்சலங்கள் ஏதுமிலா
மடைமாற்ற மாம்உலகில் மனங்கலந்தார்' என்கின்றாள். *401*

சடக்கென்று மற்றொருநாள் தவிதவித்த சென்னியுயிர்
கிடக்கென்றே உடல்நீங்கிப் பறந்ததனைக் கேட்டவுடன்
திடக்காரல் என்பதெலாம் தேய்ந்துவிடத் தாங்கவொணா
இடர்ச் சேற்றுள் அமிழ்ந்தவனா நினைவொழிந் திருக்கையிலே *402*

சென்னியுடல் கிடந்தஅறை சென்றுவந்த எங்கல்சோ
தன்னிலையை மறந்தவனாய்த் தாங்கரிய துன்பத்தால்
இன்னினி மேல் 'மூரும் இறந்துவிட்டான்' என்றுரைத்த
சொன்னினைந்து அங்கிருந்தோர் சுழற்சிக்கே ஆளானார். *403*

துறந்தாளோ தன்னுடலை; தொல்லைகளைத் தாங்காமல்
பறந்தாளோ? தோழனுமாய்த் தம்பியுமாய்ப் பழகுமெனை
மறந்தாளோ? மறந்தாளை மறந்தறியேன்; இவள்போலே
பிறந்தாளும் யாரென்றே பேதுற்றான் எங்கல்சு. *404*

கல்லறையில் செயவேண்டும் கடமைகளை எங்கல்சே
நல்லவணம் செயலானான்;'நலிவுற்று மயங்கியவன்
செல்லுவனேல் கல்லறையில் செய்ந்நிகழ்வைக் காணுகின்ற
வல்லமை இல்லை'யென மருத்துவர்கள் சொல்லியதால். *405*

இரவலர்போல் ஏதிலியாய் இன்னலுறும் ஏழையரைக்
கரவிலளாய் விலையுயர்ந்த மேசையினுட்காரவைத்தே
அரசகுடும் பத்தினரை உபசரிக்கும் அழகேபோல்
பரசிஉப சரிப்பாளாம்; பால்லபார்க் குரைக்கின்றார். *406*

கிடக்கென்றே (உடல்) - கிடக்க என்றே நீங்கி, மயங்கியவன் - காரல், கரவிலளாய் - வஞ்சனையில்லாதவளாய், பரசி - பாராட்டி, பால்லபார்க் - இலாராவின் கணவன்



24. நோயின் பிடியில் மார்க்சு

சென்னியை இழந்த துன்பம்;
சீரழி நோயின் துன்பம்;
முன்னினும் பன்ம டங்கா
வேலையுள் மூழ்க வொட்டா
திந்நிலை தடுத்த தேயென்
றெழுந்ததோர் மனத்தின் துன்பம்;
இன்னன சுற்றி நின்றால்
எளியவன் என்ன செய்வான்? 407

தலைவலி, தூக்க மின்மை,
செரியாமை தாமி வற்றால்
கலையழி முகத்த னாகிக்
கடுந்துயர் உற்ற காரல்
அலைகடற் புறத்தே தங்கிக்
கடற்காற்றை ஆர்வா னாகில்'
நிலையினி மாறும் என்ற
மருத்துவர் கூற்றை நேர்ந்து. 408

தீவகம் வைட்டில் தங்கித்
தினந்தொறும் இனிய காற்று
மீவர உயிர்த்த தாலே
மெலிவுகள் தணிய, வேலை
ஆவலால் படிப்பா ராய்ச்சி
மூழ்கினான் அந்தப் போதில்
மேல்வரும் காலம் பற்றி
மருத்துவர் கிளத்த லானார். 409

'இளவேனிற் காலம் இந்த
இலண்டனில் தீது செய்யும்;
புலம்பெயர்ந் துறைதல் நன்று;
தென்திசை போதல் நன்றாம்;
அளம்நிறை கடல்சூழ்ந் துள்ள
அல்சீரி யாபோய்த் தங்கல்
நலம்பல தருவ தாகும்
என்னவே நவில லானார். 410

சீரழி - சீரழிக்கின்ற, இன்னன - இவைபோல்வன, கலையழிமுகம் - அழகிழந்தமுகம், ஆர்வானாகில் - காற்றை வாங்கி மூச்சுவிடுவானாகில், தீவகம் - தீவு, வைட்தீவு, மீவர - மேலேவர, புலம்பெயர்ந்து - நாடுகடந்து, அளம் - உப்பளம்

மருத்துவர் கூற்றை ஏற்று
மகளொடும் பிரான்சில் உள்ள
திருத்தகு சென்னி வீட்டில்
சின்னாள்கள் தங்கிப் பின்னர்
அருத்தியன் ஆகிக் கப்பல்
பயணத்தால் அல்லல் உற்றுப்
பொருத்தமென் றுரைக்கப் பட்ட
அல்சீரி யாபோய்ச் சேர்ந்தான். 411

கப்பலில் பயணம் செய்யும்
காலத்தே தட்ப வெப்பம்
குப்புறக் கவிழ்ந்து போகக்
கொடுங்குளிர் வீசும் காற்றால்
எய்ப்புற்றுத் தளர்ச்சி கொள்ள
நீர்க்கோவை என்னும் நோயின்
கைப்பட்டு நொந்தா னாகிக்
கலங்கினான் கலங்காக் காரல். 412

கடந்தபத் தாண்டில் இல்லாக்
கடுந்தட்ப வெப்ப மாற்றம்
நடந்துள தென்றால் இங்கே
நாமென்ன சொல்ல லாகும்;
படர்ந்திவன் செல்லும் முன்னே
பாய்ந்துமுன் னேறிச் சென்று
தொடர்ந்திடும இவன்றன் துன்பம்
தொடர்கதை ஆயிற் றம்மா! 413

மறுபடி நுரையீரல்நோய்
வருத்திய போதும் நாட்டின்
விரிகடற் கரையை, ஒட்டி
விண்தொடும் மலையை, காற்றால்
சிறுபெரும் அசைவின் மூலம்
திருநடக் காட்சி காட்டும்
பெருமரத் தொகுதி கண்டு
துன்பத்தின் பெருக்கை வென்றான். 414

அருத்தியன் - மிக்க விருப்பமுடையவன், எய்ப்புற்று - இளைப்புற்று, படர்தல் - அளவானவேகத்தில் செல்லுதல்

'அல்சீரி யாவில் தோன்றும்
அழகினை என்ன சொல்வேன்;
கொல்கின்ற நோயைக் கூடக்
கொல்திறன் உடைய தாகும்;
சொல்லரும் ஆப்பி ரிக்கச்
சூழலும் ஐரோப் பாவின்
நல்லெழில் வளமும் சேர்ந்த
நாடென்று வியந்தான் காரல். 415

உடலினை நோய்வ ருத்த,
இயற்கையின் ஓவி யங்கள்
கெடலுறும் மனத்தைத் தேற்ற,
ஆதிக்கர் கேட்டால் நாடு
கடந்திவண் வாழ்வார்க் கண்டு
அரசியல் களத்தின் சூட்டைத்
தொடர்ந்துகண் காணித் தானாத்
தொலைந்தன நாள்கள் அங்கே. 416

இயற்கையின் மருத்து வத்தால்
நுரையீரல் இயல்பாய் மாற
உயற்கையே இல்லா மார்புச்
சளிமட்டும் தொல்லை யூட்ட
பயக்குமால் இனிமேல் நன்மை
என்றெதிர் பார்த்தி ருக்க
அயற்படும் பாலைத் தோன்றி
அலைத்ததால் புழுதிக் காற்று. 417

புழுதியைக் கலந்து தாக்கும்
புயலினால் உடலின் நன்மை
இழுதுபோல் கரைந்து போகும்
என்பதால் மருத்து வர்கள்
முழுத்திறன் வெய்யில் தோன்றும்
முன்னர்அல் சீரி யாவை
ஒழித்துநீர் போதல் நன்றாம்
என்னவே உரைக்க லானார். 418

உயற்கை- உய்தல், பாலைத் தோன்றி - பாலை வனத்தில் தோன்றி, அலைத்தது - துன்புறுத்தியது, இழுது - வெண்ணெய்

மருத்துவர் கூற்றிற் கேற்ப
அல்சீரி யாவின் மாறிப்
புறத்துள பிரான்சைச் சேர்ந்தான்;
என்றாலும் போன நோயின்
குருத்துகள் முளைத்துத் தோன்றிக்
குலைத்தன நலத்தை, நோயைப்
பொறுத்திட முடியா னாகிப்
போகவே 'மீண்டும் வேறோர் 419

மலைவாசத் தலத்திற் சென்று
வாழ்திரேல் மீண்டும் நோயான்
அலைவுறல் இல்லை' என்றார்
மருத்துவர்; அதனை ஏற்றுத்
தலைமகள் சென்னி வாழும்
அர்ச்செண்டீல் நகரைச் சார்ந்தான்
நிலைமையில் கொஞ்சம் மாற்றம்
நிகழ்ந்தது தெரிய லுற்றார். 420

மகளொடும் பேரப் பிள்ளை
மாரோடும் பேசிப் பேசிப்
பகலொடும் இரவும் செல்ல
மகிழ்ச்சியின் பாதிப் பாலே
இகலெனும் நோயின் தாக்கம்
இறங்கிய பின்னர், என்கீன்
புகல்நலம் பயக்கும் என்னப்
போயினர் ஆர்வம் பொங்க. 421

கந்தக ஆவி வாங்கல்;
மூச்சிற்கோர் பயிற்சி காணல்;
முந்துறும் நன்மைக் கான
அனைத்தையும் முடித்துக் கொண்டு
விந்தைசால் சுவிட்சர் லாந்தின்
விவேஎனும் நகருக் கேகி
அந்தமில் இயற்கை தந்த
விருந்தினை ஆர லானான். 422

அலைவுறல் - துன்புறல், தலைமகள் - மூத்தமகள், அர்ச்செண்டீல் - பிரான்சில் உள்ள ஒரு நகரம், இகலெனும்நோய் - பகையாகிய நோய், என்கீன் - பிரான்சில் உள்ள மலை வாழிடம், ஆரலானான் - சுவைக்கலானான்.

நடுமகள் இலாரா வோடு
　　செனிவாவின் ஏரிக் காற்றைக்
கொடுவென வாங்கி ஆர்ந்தான்;
　　கொள்கைசால் நண்ப ரானார்
கெடலிலா நட்பில் தோய்ந்து
　　கிளக்கரும் மகிழ்ச்சி கொண்டான்;
படுதுயர் தந்த நோய்கள்
　　இவையிற்றால் பதுங்கிக் கொண்ட. 423

கேடுசெய் ஆதிக் கத்தார்
　　கீழ்மையால் மட்டும் காரல்
நாடுதோ றோடும் வாழ்க்கை
　　நண்ணினா னில்லை; துன்பால்
வாடுறச் செய்யும் நோயும்
　　வருத்தியே நாடு தோறும்
ஓடுறச் செய்த தென்றால்
　　அவன்துயர் உரைக்கற் பாற்றோ. 424

நலத்தினை எய்தி விட்டாய்;
　　இலண்டனை நாடிச் செல்க!
புலத்தினில் மறவேல் ஒன்றை;
　　இரண்டொரு கிழமை தான்அந்
நிலத்தினில் தங்க வேண்டும்;
　　நீயிது தவறு வாயேல்
கலக்கிடும் நோய்கள் மீண்டு;
　　மருத்துவர் கடிய சொன்னார். 425

நாடுகள் துரத்தும் போது
　　வாவென நயந்து கொண்ட
வீடுதான் இலண்டன்; இன்றோ
　　விஞ்சுமேல் இரண்டு வாரம்;
ஓடுவாய் எனத்து ரத்தும்
　　ஒருநிலை உற்ற தெண்ணி
வாடுவா னாகி மீண்டு
　　இலண்டனை வந்த டைந்தான். 426

கிளக்கரும் - சொல்லிமுடியாத, இவையிற்றால் - இவைகளால், புலத்தினில் - அறிவினில், கடிய - கடுமையாக

'மீண்டவன் வந்த பின்னர்
　　மேல்நிகழ் ஆய்வுக் காக
வேண்டுவ தொகுத்தெ டுக்கும்
　　வேலையுள் மூழ்கி நின்றான்;
நீண்டதோர் வாள்வி ரைந்து
　　நெஞ்சினுள் பாய்ந்தாற் போலும்
ஆண்டொரு செய்தி காதில்
　　இறங்கவே அதிர்ந்து போனான். 427

25. மார்க்சு மறைவு

'தலைமகள் சென்னி கொடியதோர் நோயின்
தாக்குத லால்நலிந் துள்ளாள்;
நிலைமையோ மோசம்' எனுமொரு சேதி
நிலைகுலை வுறும்படி செய்ய
நலிவுறல் மிகுந்து நரம்பினைத் தளர்ச்சி
நண்ணிடக் காரலின் அகத்தே
அலைபடும் உயிர்தான் நிற்குமோ ஓடி
அகலுமோ எனும்படி யாக. 428

மீண்டுமோர் செய்தி வந்ததால் 'நோயின்
மீள்கிலள் ஆகிய சென்னி
ஈன்றவோர் ஐந்து பிள்ளைகள் கதற
இணையர்லாங் கேயையும் பிரிந்து
மாண்டனள்' என்னச் செவிதனிற் கேட்டோன்
மயங்கினன் புலன்களோ ஒடுங்க
ஈண்டினி மேலே எதுவும்எப் பொழுதும்
நிகழலாம் எனும்நிலை நெருங்க. 429

தலைவலி தூக்க மின்மையோ டெரிச்சல்
தாக்கிடத் தாங்கிலா னாகி
குலைவுறும் வேளை உண்டது செரியாக்
குற்றமும் அதனுடன் சேர
'அலைவுற வேண்டா! உள்நுரையீரல்
அமைந்துள கட்டியால் நேர்ந்த
நிலையிது' என்றார் மருத்துவர். காரல்
நித்தமும் செத்திட லானான். 430

தாயினும் சிறந்தாள் எலனும் எங்கல்சும்
தளர்ந்தில ராயுடன் தங்கிச்
சேயினைப் போலக் காரலைக் காக்கச்
சிறிதுமுன் னேற்றமும் தோன்ற
'ஆ! என வியந்த மருத்துவர் இனிமேல்
அவனுயிர் பிழைக்கலாம் என்றார்;
போமுனம் ஒளிறும் சுடரிது வென்றே
புரிந்திலா மருத்துவர் ஆனார். 431

தலைமகள் - மூத்தமகள், இணையர் - கணவர், அலைவுற-துன்புற, போமுனம் - போகுமுன்னம், ஒளிறும் -ஒளிவீசும், எலன் - எலன்டெமூது

காரலின் நிலையில் மாறுதல்வரவே
களிப்பொடெங் கல்சுதன் இல்லம்
சேரவும், காரல் உடல்நிலை மீண்டும்
சிதைவுற நேர்ந்ததை அறியான்;
நேருற மாலை காரலின் இல்லம்
வந்தவன் நெருங்கையில் கண்ணீர்
சோருற இருத்தல் கண்டதால் 'என்ன
சொல்லுக' என்றவட் கேட்டான். 432

எலன்பதில் உரைத்தாள் 'நீயிவண் நீங்கி
ஏகிய பின்னிவன் உடலின்
நலன்கெட இரத்தக் குழல்உடைந் ததனால்
நலிந்தவன் மயங்கினான்; நான்போய்
புலனுற அறிந்து வருகுவென்' என்றே
போனவள் மீண்டன ளாகி
நிலனுறச் சாய்ந்து தூங்கினான் தன்னை
நீஇனிக் காணுதி என்றாள். 433

படிமிசை ஏறி மாடியை அடைந்தோன்
பார்த்தவொர் பார்வையி லேயே
இடிவிழு மரமாய் அடிமுதல் அதிர்ந்தான்;
ஏகியே விரைந்தவன் நாடி
துடித்திடல் உண்டா எனக்கையை எடுத்தான்
துவண்டன கைகளோ 'ஐயோ!
முடிந்ததா வாழ்க்கை! முடிவிலாத் துயரம்
முதிர்ந்ததா' என்னவாய் மொழிந்தான். 434

இப்பெரும் உலகில் ஒப்பிலா வகையில்
எளியவர்த் தாக்கிய துன்பை
அப்புறப் படுத்தற் காம்வழி தேடி
அனுதினம் எண்ணுதல் புரிந்தோன்;
தப்பிலா தாய சிந்தனை வளத்தைத்
தழுவிடா உலகினை வெறுத்தே
ஒப்பிலா தாய சிந்தனைச் செயலை
ஒழித்தவன் போலவன் கிடந்தான். 435

என்றவட்கேட்டான்- எலனிடம்கேட்டான், புலனுற அறிந்து - கண்களால் பார்த்து, படி - மாடிப்படி, எண்ணுதல் - சிந்தித்தல், தழுவிடா - ஏற்றுக் கொள்ளாத

கேடுகள் கண்டு துடித்திடும் இயல்பன்
துடிப்பிலன் ஆகியே கிடந்தான்;
வாடுவார்க் கண்டு விழித்தெரி கண்கள்
வற்றியே இமையினுட் புதைய
தேடுவார்க் கெல்லாம் கிடைத்திடற் கரிய
செல்வமே யானவன் காரல்
கூடுதான் ஆனான்; உயிரினை இழந்து
கொஞ்சமோ உலகினுக் கிழப்பே. 436

கண்ணினுள், நெஞ்சில், கருத்தினுள், காணும்
கனவினுள் நிறைந்தவ ளான
சென்னியைப் பிரிந்து பத்தொடைந் தான
திங்களே வாழ்ந்தனன் எனினும்
எண்ணிலாத் துயரச் சுமையினைத் தாங்கி
இறந்தவாழ் வானதே யல்லால்
உண்ணிறை வாகி இருந்தவாழ் வன்றென்
றுரைப்பது போலுமிச் சாவே. 437

கர்த்தரின் கோயில், மற்றுள சமுகக்
கடுப்பினால் புறக்கணிப் புண்டோர்
செத்திடின் அவரைப் புதைத்திடற் கென்றே
ஒதுக்கிய சிறப்பிலா இடத்தில்
வைத்தனர் உடலை; சென்னிகல் லறையின்
வலப்புறம்; புறக்கணிப் புற்றார்
இத்தரை வாழ உழைத்தவன் அதனால்
இவ்விடம் ஈந்தனர் போலும். 438

எப்பொழு தும்தன் சட்டைஉட் புறத்தில்
தந்தையின் எழிற்படம் இருக்கும்;
ஒப்பிலாத் துயரம் ஆமெனின் படத்தை
ஒருமுறை பார்த்தபின் ஊக்கம்
தப்பிலா தடைதல் காரலின் வழக்கம்;
தானதை அறிந்தஎங் கல்சோ
அப்பொழு தங்கே என்றிகு மார்க்சின்
அழகிய படத்தினை எடுத்தான். 439

உண்ணிறைவாகி - உள்ளம் நிறைந்து

'என்னரும் நண்பா! என்றுமுன் பையை
இகந்திடா திருந்துனை ஊக்கும்
உன்னருந் தந்தை படத்தினைப் பிரித்தல்
உயிரினைப் பிரிப்பதே போலாம்;
நன்னர்இப் படத்தை உன்னுடன் இட்டேன்
நலிவிலும் ஒன்றியே இருக்க'
சொன்னபின் படத்தைக் குழியினுள் இட்டான்
கல்லறை தூர்த்தனர் அங்கே. 440

அரங்கெலாம் தலைமை பூண்டவனாகி
அமைந்தவன் காரலின் இறுதிக்
கிரங்கலை உணர்த்தும் முறையிலோர் கூட்டம்;
இதயமே குமுறல்போ லிருக்க
'தரங்கமே சூழ்ந்த உலகெலாம் வியந்த
தலைகளுள் வியப்புறும் தலையை
உரங்கெட இழந்தோம்' என்னவே எங்கல்
சுரைத்தனன்; நீர்விழி ஒழுக. 441

பற்பலர் எதிரி உண்டுதான் இவற்குப்
பயின்றிடும் கொள்கையால் மட்டும்;
விற்பனன் இவற்கு மனிதனென் றுணர்த்தும்
விதத்தினில் எதிரியர் இல்லை;
அற்பமும் கீழ்மை ஆதியாம் அவற்றை
அழித்திடும் எதிரியாய் வாழ்வில்
முற்படும் துயருள் மூழ்கினார்க் குதவ
முன்வரும் நண்பனாய் வாழ்ந்தான். 442

பெற்றதா யோடும், மற்றவர் உழைப்பைப்
பிழிந்திடும் வன்கணா ரோடும்,
கொற்றவன் என்னும் கொடியவ னோடும்
குழப்புதல் வல்லவ ராய
மற்றுமோர் உலகம் கடவுளர் என்னும்
மதத்துறை யாளர்க ளோடும்
உற்றபோ ராட்டம் நடத்தியோர் இவன்போல்
உலகினில் யாருளார் சொல்மின். 443

இகந்திடாது - நீங்கிடாது, தரங்கமே - அலைகளே, வன்கணார் - கொடியவர்

அறிவினால் மட்டும் புரட்சியைக் கொணரும்
ஆர்வலன் அல்லவே அல்லன்;
அறிவுடன் உணர்ச்சி செறிவதைக் கொஞ்சம்
அளவொடு நிறுத்தியோன்; பெற்ற
அறிவினைத் தளரா உழைப்பொடு சேர
ஆர்த்தவன் என்னுமொன் றால்தான்
அறிவினார் எல்லாம் தலைமிசைத் தாங்கும்
அறிவினன் ஆயினன் அவனே! 444

பழியெனும் குப்பை வாரியே எறிந்து
பகைத்தவர் குப்பையுட் படிந்து
விழிபிதுங் கினரா மூழ்கியே போனார்;
வீறுடன் அதைஎதிர் கொண்டோன்
கழிவிசை யுடனே உயிர்த்ததோர் காற்றால்
கலைந்திடச் செய்தனன் குப்பை;
குளிர்தரு நிலவாய் ஒளியுட னெழுந்தான்;
கொள்கைசால் அரசியல் வானில். 445

புறக்கணித் தவரைக் காலமே சினந்து
புறக்கணித் திட்டதைக் கண்டோம்;
புறக்கணிப் புற்றோற் காலமே போற்றிப்
புகழ்ந்திடும் உண்மையும் கண்டோம்;
அறக்கெட நாடு கடத்தியோர்க் காலம்
அடியொடு கடத்தியே அழிக்கப்
பிறக்கிடக் கடத்தப் பட்டவன் இன்றோ
பெயர்த்திட வின்றியே நிலைத்தான். 446

முகங்களைத் திருப்பிக் கொண்டவர் எல்லாம்
முகவரி இழந்தவர் ஆனார்;
சுகங்களே வாழ்க்கை என்றிருந் தவர்கள்
சுழலினுட் சிக்கியே மாண்டார்;
அகங்களைக் கடந்த காரலோ உலகின்
எல்லைகள் அனைத்தையும் கடந்தும்
யுகங்களைக் கடந்தும் வாழுவான்; வானில்
ஒளிவிடும் ஞாயிறு போலே.' ● 447

ஆர்த்தவன் - கட்டியவன், இணைத்தவன், கழிவிசையுடனே - மிகுந்த விசையுடன், உயிர்த்த - மூச்சுவிட்ட, அறக்கெட - முழுமையாகக் கெட, பிறக்கிட - பின் செல்லுமாறு, புறக்கணிப்புற்றோன் - காரல், புறக்கணிப்புற்றோற் காலமே போற்றி - புறக்கணிப்புற்றவனைக் காலமே போற்றிப் புகழ்ந்திடும்

‘பார்த்தவிழி வாங்காமல் பையன்முகம் பார்த்தபடி
ஆர்த்தலின்றி வருமருவி ஆயினவே சென்னிகண்கள்;
கோத்தெடுத்த முத்தாரம் நூலறுந்து கொட்டுதல்போல்
சீர்த்தபணி யாட்டிஎலன் கண்ணீரைச் சிந்துகிறாள்’

‘ஆறுகவே நின்துயரம்’ என்றாறு தல்கூறின்
சீறுவதும் சினப்பதுமாய்ச் சிந்தைவசம் இழந்துநிலை
மீறுவதும் மிரளுவதும், மென்குரலில் விம்முவதும்
வீறுதளர் காரல்படும் வேதனையோ சொல்லரிதால்.



தமிழினி

ரூ. 60

ISBN 81-87641-64-9
9788187641643
Rs.60